www.tamilarangam.net

# சுட்டும்விழி

SUTTUM VIZHI 2003

சமூக, கலை, இலக்கிய, அரசியல் ஏடு



நேர்காணல்



புதுவை இரத்தினதுரை

கட்டுரை



வந்தனா சிவா

இதழ் 2

தமிழர் தேசிய விடுதலைப் போராட்டம்
கலை இலக்கிய ரீதியாகவும் சமாந்தரமான
பாய்ச்சலுடன்தான் நகர்ந்து கொண்டிருக்கிறது.

50/=

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாடல்கள் பற்றியொரு பாடல்

கானகத்தின் அடர்ந்த இருட்புதரில், எழில்அந்தி
வானப் பெருவெளியில்,
ஆழக்கடல்மடியில்,
எங்களது பாடல்கள் மறைந்து தொலைந்தனவாம்.
''பூதங்கள் அவற்றைக் கொண்டு புசித்தனவே''
ஊருக்குள் சிலகாலம்
உலவிற்று ஒரு கதை।
''வாழ வழியற்றுத் தாமாகப் போயினவாம்''
என்றும் உலவிற்று ஒருகதை
துயரோடு
நின்று பொருதி நெருக்குண்டு ஒவ்வொன்றாய்ச்
சென்று மறைந்ததென்றுஞ்
செப்பிற்று ஒருகதை।
கதைகேட்டுக் கேட்டே கலாச்சாரம் வளர்த்தவர்நாம்
நிதமுமெங்கள் பாடல்களைப்
பற்றிக் கதைவளர்த்தோம்.



மறைந்த அந்தப் பாடல்களைப் புதையல்களாய் மீட்டெடுத்துத்
தெருவில் உலவவிடுந் திராணியற்றுக் கதையளந்தோம்
எங்களது பாடல்களிற் சிலவரியைக்
களவெடுத்து
தங்கள் இசைகலந்து எவரெவரோ மீட்டையிலும்
எம்முன்னே பாடிப்பரவசமாய் ஆடையிலும்
எங்கள் இளையோரை
அன்னியரின் பாடலுக்குள்
சங்கமிக்க வைப்போர் தலைதெறிக்கப் பாடையிலும்
எங்களது பாடல்கள்
என்றோ தொலைந்ததென்று
கைகழுவிப் போட்டுக் கதைபறைந்து கொண்டுள்ளோம்.

**த. யெயசீலன்**

www.tamilarangam.net

# கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால் அதுவே மாபெரும் சக்தி

**4** **நேர்காணல்**



மாற்றுக்கருத்துக்கள் வேண்டும், எதிர் குரல்கள் வேண்டும், ஆனால் ஒரு அற்புதமான போராட்டத்தை அழிப்பதாக அது இருக்கக் கூடாது.

**26** **இயற்கை, விஞ்ஞானம், பால்வேறுபாடு**



பெண்ணையும் அவள் பாலியல் உணர்வுகளையும் கட்டியாளும் ஆணின் வீரியம் பொருந்திய செயல்களாக விஞ்ஞான நடவடிக்கைகள் உள்ளன. இதனால் பால்வேறுபாடு அகலிக்கப்படுகிறது.

**11** **சிறுகதை**
நந்தினி சேவியர்



**கட்டுரை**
தில்லை
ஏ.டபிள்யூ.முஹ்சீன்
வந்தனாசிவா
வி.கௌரிபாலன்
பேராசிரியர்.சோ.சந்திரசேகரம்
வ. தேவசகாயம்

**கவிதை**
புதுவை இரத்தினதுரை
த.ஜெயசீலன்
சோலைக்கிளி
ஷெல்லிதாசன்
சு.வில்வரெத்தினம்

**எதிர்வினை**
அ.யேசுராசா
மு.பொ.

**மொழிபெயர்ப்புக் கவிதை**
சி.சிவசேகரம்
ஜிப்ரான்






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆசிரியர் கருத்து.....

உலக இலக்கியப் பரப்பு மிகவும் விசாலமானது. இனியும் நாம் மக்கள் இலக்கியம் பற்றிப் பேசிக் கொண்டிருக்க முடியாதென்பது சிலரின் கருத்தாக இருக்கின்றது. சமகால நவீன இலக்கியப் போக்கை ஆழ்ந்து நோக்கும் ஒருவர், மேற்படி கருத்து சமகால நவீன இலக்கியப் பரப்பை ஆக்கிரமித்திருப்பதை அவதானிக்க முடியும். எவர் அதிகம் விளங்காமல் எழுதுகின்றாரோ அவரே அற்புதமான படைப்பாளியெனக் கொண்டாடப் படுகின்றார். எவர் கவிதையில் அதிகம் புதிர் போடுகின்றாரோ அவரே பெரும் கவிஞராவார். சமகால வாசகன் விளக்கத்திற்காக, ஒரு யாசகன் போல் படைப்பாளியின் முன் நிற்கவேண்டியிருக்கின்றது. பெரும்பாலான படைப்புக்கள் படைப்பாளிகளுக்காகக் காத்துக் கிடக்கின்றன. இது சமகால நவீன இலக்கியப் போக்கின் துர்ப்பாக்கிய நிலைமை. இதனை துர்ப்பாக்கிய நிலைமை என்று சொல்வதிலும் பார்க்க சமகால நவீன இலக்கியப் போக்கின் மக்கள் விரோத நிலைமை எனக் கூறுவதுதான் சாலவும் பொருத்தமானது.

இவ்வாறானதொரு மக்கள் விரோத இலக்கியப் போக்கு விரிவு கொண்டதற்கு, தமிழ் சூழலில் மார்க்கசியத்திற்கு மாற்றானதெனக் கூறி முன்னிறுத்தப்பட்ட இஷங்களே முக்கிய காரணம் எனலாம். காலத்திற்கு காலம் மின்னி பின் மறைந்து போன இவ் இஷங்களின் துணை கொண்டு இலக்கியம் பேசியவர்கள் எல்லாவற்றையும் கேள்விக்குள்ளாக்குதல் என்ற கோசத்துடன் மக்கள் இலக்கியப் போக்கைச் சிதைத்து இலக்கியத்தினுள் புத்திஜீவித் தன்மையை புகுத்தினர். இலக்கியத்திற்காக இஷங்கள் என்ற நிலைமை மாறி இஷங்களுக்காக இலக்கியம் என்ற நிலைமை தோன்றியது. மக்களுக்கான இலக்கியம் சில மத்தியதர வர்க்கக் குழுக்களின் விவாதப் பொருளாகச் சுருங்கியது. இத்தகைய இலக்கியப் போக்கு நவீன உக்தி முறைமை, புதிய மொழிக் கையாள்கை போன்ற சொல்லாடல்களால் நியாயப்படுத்தப்பட்டது. மொழியை கீழிறக்கி இலக்கியத்தை வாசகனின் அருகில் கொண்டு செல்வதற்கு மாறாக வாசகனை இலக்கியத்தை அண்ணாந்து பார்க்கும் நிலைக்குத் தள்ளியது. முடியுமானால் விளங்கிக்கொள் பார்ப்போமென வாசகனை சவாலுக்கு அழைத்தது. இலக்கியத்தில் நவீன உக்தி முறைகளும் புதிய மொழிக்கையாள்கைகளும் அவசியமானதுதான். ஆனால் புதிய தேடல்கள் மக்களை அன்னியப்படுத்துவதாக உதாசீனப்படுத்துவதாக இருக்கக் கூடாது. பதிலாக, மேலும் மக்களை நெருங்கி வருவதாகவும், மக்களின் வாழ்வியல் அம்சங்களோடு உயிரோட்டமான உறவுகொள்வதாகவும் இருக்கவேண்டும். அவ்வாறு இருக்கும்போதுதான் அது மக்களுக்கான இலக்கியமாக இருக்க முடியும்.

ஈழத்து தமிழ் சூழலைப் பொறுத்தவரையில் இத்தகையதொரு மக்கள் விரோத இலக்கியப் போக்கு பெரிதாக வேர்கொள்ளவில்லை. இதற்கு புறச்சூழல் நிலைமைகளே காரணம் எனலாம். தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்தின் அருகாக நின்று அதனை பேசவேண்டிய, எழுதவேண்டிய தேவை ஈழத்து இலக்கியவாதிகளுக்கு இருந்ததால், மக்களின் பிரச்சனைகளே இலக்சியத்தின் முதன்மைப் பேசு பொருளாகின. எளிமையும், வலிமையும் மிக்க மக்கள் இலக்கியங்கள் தோன்றின. எனினும் மக்கள் விரோத இலக்கியம் என்ற நோய்க்கூறு இலகுவாக இளைய தலைமுறைப் படைப்பாளிகளை ஆக்கிரமித்து விடக்கூடியது. எனவே இது தொடர்பில் மக்களை முன்னிறுத்தி சிந்திப்பவர்கள் மக்கள் இலக்கிய வாதிகள் தீவிர அக்கறை கொள்ள வேண்டியிருக்கிறது. மக்கள் விரோத இலக்கியப் போக்கை ஈவிரக்கமற்ற முறையில் விமர்சனத் துக்குள்ளாக்க வேண்டியிருக்கிறது. இத்தகைய இலக்கியப் போக்கிற்கு மாறாக மக்களை முதன்மைப்படுத்தும் போர்க்கால இலக்கியங்களை, தலித் இலக்கியங்களை முன்னிலைப்படுத்தி பேச வேண்டியிருக்கிறது. அத்தகைய நடவடிக்கைகள் மூலம்தான் மக்கள் விரோத இலக்கியப் போக்கை நாம் ஓரம் கட்ட முடியும். அத்தகையதொரு இலக்கை நோக்கி நாம் பயனிப்போமாக. இது காலத்தின் தேவை.

- யதீந்திரா.




ISSN 1391-8095
காலாண்டிதழ்

ஆசிரியர்
யதீந்திரா

உதவி ஆசிரியர்
எஸ்.கமலகாந்தன்

ஆசிரியர் குழு
தில்லை
ச.பாலமுரளி
நா.சதீஸ்கண்ணா

படைப்புகளுக்கும்
விமர்சனங்களுக்கும்
யதீந்திரா
இல.14, வைத்தியசாலை வீதி
திருக்கோணமலை

அட்டைப்படம்
கிக்கோ

E-mail:
suttumvizhi@journalist.com

அன்பளிப்பு
உள்நாடு - 50.00
வெளிநாடு - 10$
(வருடம்) - 40$)
(தபால் செலவு உட்பட)

ஓகஸ்ட் - 2003



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காலமெழுதிய கவிஞனின் சுமையற்ற வாழ்வும், பயமற்ற சாவும்



என் கவிதைகளால் எனக்குச் சாவுமில்லை.
வாழ்வின் இறுதிவரிகளை
நானெழுதும் போது
என்னருகில் எவரும் வேண்டாம்.
சின்னக் குத்துவிளக்கின் ஒளியில்
முகமிருந்தால் போதும்.

நோயுற்றுச் சிதைக்கப்பட்டோ,
எதிரிகளால் துளைக்கப்பட்டோ,
சாவெனக்கு இல்லையானால்
முதுமையிலும் நான் முளைப்பேன்.
என் கவிதைகளே
எனக்கு வாலிபத்தின் வலிமை தரும்.
கால்கள் நடக்கவும்,
கைகள் வீசவும்,
குனிந்து ஒருபிடி மண்ணள்ளி நிமிரவும்
பலமிருந்தால் போதும்
என்னால் இறக்கைகட்டிப் பறக்க முடியும்.
சாவை எதிர்கொள்ளும் சக்தியுடன்
முதுமையிலும் வாழ்வை தரிசிப்பேன்.
பூக்களுடன் வேர்களாகவும்,
வேர்களுடன் பூக்களாகவும்,
விளங்க முடியும்.
அன்றும் என் கவிதைகளால்
புதிது புதிதாகப் பிறந்தெழுவேன்.
மானுட வதைக்கெதிராக
அன்றும் போராடும் அணியினரின்
அருகாய் விரிவேன்.
எனக்கு முதுமையில்லை,
தள்ளாமையில்லை,

வந்த போதும்
வறுமையுற்று இருந்த போதும்
எந்தவிதமாகத் தனித்திருந்தேனோ
சாவுக்கு என்னை இரையாக்கும் போதும்
தனித்திருக்கவே விரும்புகிறேன்.
காலன் நடந்து வரும் காலடியரவம்
என் காதருகே கேட்கவும்
கலங்கேன் நான்.
அட! வாடா என அழைத்தவனை
வரவேற்பேன்.
நீட்டிப்படுக்க ஒருபாய்,
தாகமெடுத்தால் குடிக்கத் தண்ணீர்,
பாடியபடியே சாக என்பாடலொன்று
போதும் எனக்கு
போய்ச் சேர்ந்து விடுவேன்.

உடல் விறைத்து,
பிணமென்றான பின்பும்
யாரும் கலங்கக்கூடாது.
வீட்டிலென் சவமிருக்கும்வரை
என் பாடல்களைப் பாடி
கவிதைகளை உரத்துவாசித்து
எல்லோரும் இன்புற்றிருக்கக் கடவது.
வந்தேன்
இருந்தேன்
சென்றேனென இல்லாமல்
என்னாலும் இயன்றளவு
செய்தே திரும்பினேன் என
போவேன்
எனக்கிது போதும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழர் தேசிய விடுதலைப் போராட்டம் கலை இலக்கிய ரீதியாகவும் சமாந்தரமான பாய்ச்சலுடன்தான் நகர்ந்து கொண்டிருக்கிறது.

**கவிஞர் புதுவை இரத்தினதுரை**



**நேர்முகம்: யதீந்திரா**

புதுவை இரத்தினதுரை ஈழத்தின் தலைசிறந்த கவிஞர்களில் ஒருவர். தமிழ்தேசியத்தின் ஆஸ்த்தான கவிஞராக மதிக்கப்படும் இவர் ஈழத்தில் அதிக கவிதைகளை படைத்த கவிஞர் என்ற பெருமைக்கு முரியவர்.

"நான் வாழும் காலத்தில் என்னுடைய சமூகம் இருந்தது. அதன் எழுச்சியுடனும் வளர்ச்சியுடனும் நான் இணைந்திருந்தேன் என்ற திருப்தி மட்டுமே எனக்குப் போதுமானது" எனக் கூறும் புதுவை கடந்த 20 வருடங்களாக தமிழத்தேசிய விடுதலைப் போராட்டத் தோடு தன்னை இனைத்துக்கொண்டிருப்பவர்.அதன் ஆழ அகலங்களோடு தன்னை பிணைத்துக் கொண்டவர். இவரது நூல்களாக வானம் சிவக்கிறது - 1972, இரத்த புஸ்பங்கள் - 1976, நினைவழியாத நாட்கள் - 1993, களத்தில் மலர்ந்தவை பாகம்-1, பாகம்-2 ( பாகம் - 1 - 1989, பாகம் - 2 - 1994), உலைக்களம் (பாகம்-1) -2003, ஆகியவை வெளிவந்திருக்கின்றன. இவரது இசைப்பாடலாக இதுவரை 600 பாடல்கள் வெளிவந்திருக்கின்றன. இவரது பாடல்களை மட்டும் உள்ளடக்கி 8 இசைத்தட்டுக்கள் வெளி வந்திருக்கின்றன.

**யதி :- உங்களுடைய இலக்கிய பிரவேசம் பற்றி கூறுங்கள்?**

**புதுவை:-** உண்மையிலேயே என்னுடைய இலக்கிய பிரவேசம் எப்படி நிகழ்ந்ததென்று என்னால் இன்றுவரை சரியாக கணக்கிட்டு கூறமுடியாமலதான் இருக்கிறது. ஏனென்று சொன்னால் நான் ஒரு இலக்கியப் பாரம்பரியம்மிக்க குடும்பத்திலிருந்து வந்தவனென்றோ அல்லது கருவிலே திரு கொண்டு உருவாகியவனென்றோ ஒன்றுமில்லை. சாதாரண ஒரு குடும்பத்தில் சாதாரண ஒரு சூழ்நிலையில் என்னுடைய பிறப்பு நிகழ்ந்தது. அந்த சாதாரண குடும்பத்திலேயே என்னுடைய வளர்ப்பும் நிகழ்ந்தது. எனவே இந்த இடத்திலிருந்து நான் எப்படி அந்த இலக்கியப்பரப்பை தொட்டேன் என்பது இன்றுவரை என்னால் இனங்காண முடியாமல்தான் இருக்கின்றது. ஆனால் நான் சிறுவயதிலேயே அதிகம் வாசிப்போடு என்னை பிணைத்துக்கொண்டவன். ஒருவேளை அந்த அதீததேடல் என்னை இலக்கியப்பக்கமாக நகர்த்தியிருக்கலாம் என்று நான் நினைக்கின்றேன். அல்லது நான் ஒரு பிற்படுத்தப்பட்ட பிற்படுத்தப்பட்டிருந்த கிராமத்திலே (புத்தூர்) வாழந்தவன், வளர்ந்தவன் என்பதால் அங்கு பல ஒடுக்குமுறைகள் இருந்தன. இன்றுவரை மின்சாரம் போகாத கிராமம் என்னுடைய கிராமம். அன்றிலிருந்து இன்றுவரை பல ஒடுக்கமுறைகளை சந்தித்துக்கொண்டிருக்கின்றது என்னுடைய கிராமம். எனவே அந்த ஒடுக்குமுறைக்கு எதிரான உணர்வு நிலை (தர்மாவேசம்) என்னை சிலவேளை கவிதை எழுதத்தூண்டி இருக்கலாம். சிறுவயதில் அந்த ஒடுக்குமுறைககு எதிராக போராடும் எந்த வாய்ப்புமற்று ஒடுக்குமுறைககு எதிரான என் உணர்வு நிலையை நான் கவிதைகளினூடாக சொல்ல முற்பட்டிருககலாம். நான் என்னுடைய 14வது வயதில் எழுதிய மழைக்காலம் என்ற கவிதை அப்பொழுது வெளிவந்த ஈழநாடு மாணவர் மலரில் பிரசுரமாகியது. அதன் வெட்டுத் துண்டு இப்பொழுதும் என்னிடமிருக்கிறது. 14 வயதில் கவிதை எழுதுவது என்பதற்கு அப்பால் 14வயதில் எழுதிய கவிதை பிரசுரமாவது என்பது அப்பொழுது ஒரு பெரிய விடயமாகதான் இருந்தது. இப்படியாகத்தான் என்னுடைய இலக்கிய பிரவேசம் நிகழ்ந்திருக்கலாம் என நான் நம்புகிறேன். அதில்லாமல் என்னுடைய அப்பன், அப்பனின் அப்பன் எல்லாம் இலக்கிய சாம்ராட்டுக்கள் அதிலிருந்துதான் நான் எழுந்தேன் என்று பெருமைப்பட்டுக் கொள்ளுமளவிற்கு எந்த குடும்பப்பின்னணியுமற்ற குடும்பச்சூழலிருந்து முளை கொண்டவன் நான். எனவே உங்களுடைய கேள்வியின்படி நான் எப்படி உருவாகினேன் என்பது நான் நினைக்கின்றேன். என்னுடைய கிராமச்சூழலும், குடும்பச் சூழலும் ஒடுக்குமுறைக்குட்பட்ட அனுபவங்களிலிருந்து மீண்டெழவேண்டுமென்ற அந்த உணர்வு நிலையும் என்மனதில் சில வித்துக்களைப் பதித்திருக்கலாம். அதிலிருந்து என்னுடைய இலக்கியப்பிரவேசம் கால்கோள் கொண்டிருக்கலாம் என நான் நம்புகிறேன்.

**யதி:- உங்கள் படைப்புக்கான தத்தகுவார்த்தப் பின்னனி பற்றி கூறமுடியுமா?**

**புதுவை :-** எந்த இலக்கியப் படைப்பிலும் அல்லது எந்த கலைப்படைப்பிலும் தெரிந்தோ தெரியாமலோ ஒரு தத்துவக்கோட்பாடு புதைந்து கிடக்கும். அப்படியில்லை என்று சாதிக்கமுற்படுவது முற்றிலும் பொய்யானதொரு புனைவு. இன்று மார்க்சியம், நவமார்க்சியம், பெரியாரியம், தலித்தியம் என பலவேறு இஷங்கள் பற்றிப் பேசப்படுகின்றது. இவற்றுள் ஏதாவதொன்று ஒரு படைப்பாளியின் அறிதலுக்குட்பட்டோ, உட்படாமலோ படைப்பில் தங்குவதற்கு வழிகள் உண்டு. ஆனால் அவர்கள் இல்லையென்பார்கள். இன்று மார்க்சியததிற்கு எதிரான கருத்தை சொல்லுபவர்கள் இன்னொரு தத்துவார்த்த இழையின் மறைமுகத்தோற்றுவாயாகத்தான் கொள்ளப் படுகின்றார்கள். எனவே எந்தவொரு படைப்பினுள்ளும் ஒரு கோட்பாடு நூல் இழை கொண்டு ஓடும். அது தவிர்க்க முடியாதது. எனக்கும் அப்படியானதொரு கோட்பாடுண்டு. அன்றிலிருந்து இன்றுவரை நான் மார்க்சியம் தோற்றுவிட்டதாகக் கருதியவனல்ல. மார்க்சியம் தேசத்திற்கு ஏற்ப புதிய சூழலுக்கு ஏற்ப புதிய புதிய வடிவங்களை தோற்றப்பாடுகளை எடுப்பதுண்டு. இதன்படி நோக்கினால் இன்றுவரை தோற்காமல்

www.tamilarangam.net

இருக்கின்ற மாக்சியம சமூக நோக்கிலான ஒரு படைப்பாளியின் படைப்பினுள் அவரையறியாமலேயே தொக்கிநிற்கும். இதிலிருந்து யாரும் தப்ப முடியாது. நானும் இன்றுவரை தோற்காமல் இருக்கிற மார்க்சியத்தை எனக்கான கோட்பாடாக வரித்துக்கொண்டிருக்கிறேன். மாக்சியத்தை தோற்கடிக்கின்ற, மார்க்சியத்திற்கும் அப்பால் பார்க்கின்ற மார்க்சியத்தை கடந்து அடுத்த புள்ளியை தொடுகின்ற ஒரு கோட்பாடு தோன்றும்வரை மார்க்சியமே உயர்வானது. உன்னதமானது. ஆனால் சிலர் நான் மார்க்சிய நிலையிலிருந்து விலகி விட்டதாகவும் இனவாதத்திற்குள் புதைந்து விட்டதாகவும் கூறுகின்றார்கள். ஆனால் எனக்கு அப்படித்தெரியவில்லை.

எனது எழுத்துப்போக்கு அதிலிருந்து விலகிவிட்டதாக நான் கருதவில்லை. அடக்குமுறை எங்கெங்கெல்லாம் மூர்க்கம் காட்டுகிறதோ அதற்கு எதிராக ஒரு படைப்பாளி நிற்பான் என்பது மாக்சியத்தினுடைய அடிப்படைக்கருதுகோள். அதன்படி நான் நிற்கின்றேன். ஆனால் இப்படி இப்படியென்று கரைகட்டி, எல்லை வகுத்து அதற்குள் நின்று கூத்தாடுகின்ற குணம் எப்போதுமே என்னிடம் இருந்ததில்லை. அப்படி கூத்தாடுபவன் கலைஞனுமில்லை. சமூகநோக்கிலான ஒரு படைப்பாளியின் குரல் கட்டாயம் மானுடவதைக்கு எதிரான குரலாகவே இருக்கும். அப்படியில்லையென்று கூறி மானுட விடுதலை, இனங்களின் விடுதலை, வர்க்கங்களின் விடுதலை, இதற்கு அப்பாலும் எமது தோள்களில் நின்று எட்டிப்பார்க்கிறோம் என்பதெல்லாம் வெறும் பம்மாத்து. தன்னுடைய கண்ணுக்கு எதிரே, தன்னுடைய காலடிக்கு கீழே, தனக்கு அருகிலே நடக்கும் கொடுமைகளை பார்த்தும் அதனை உதறிவிட்டு, கேட்டும் அதனை உதறிவிட்டு அல்லது தான் அனுபவித்தும் அதனை உதறிவிட்டுப் போபவன் ஒரு படைப்பாளியாக இருக்கமுடியாது. என்னுடைய எழுத்துக்கள் அன்றிலிருந்து இன்றுவரை மானுடவதைக்கு எதிரான குரலாகவும், கொடுமைகளுக்கு எதிரான குரலாகவுமே இருந்துவருகின்றன. அதுவே கூட என்னுடைய கோட்பாடாக இருக்கலாம். அதற்கு நான் கற்றுக்கொண்ட மார்க்சியம் வழிசமைத்திருக்கலாம். இதுதவிர கோட்பாட்டுவாதியென்று கூறிக்கொண்டு எனக்கு நானே தலைப்பாய்கட்டிக்கொண்டு ஆட நான் தயாராக இல்லை. எனது படைப்பினூடாக இந்த கோட்பாடு (மார்க்சியம்) அதிகம் தெரியவருவதாக சொல்லுகின்றார்கள். எனக்கு அதுபோதும். என்னுடைய வாழும் காலத்தில் என்னுடைய சமூகம் இருந்தது. அந்த சமூகத்தின் எழுகை, அந்த சமூகத்தின் போராட்டம், அந்த சமூகம் வேண்டி நிற்கின்ற இலக்கு இவைகளை உரசிக்கொண்டு என்னுடைய எழுத்துக்கள் சென்றால் எனக்கு அது போதுமானது.



**மாக்சியத்தை தோற்கடிக்கின்ற, மார்க்சியத்திற்கும் அப்பால் பார்க்கின்ற மார்க்சியத்தை கடந்து அடுத்த புள்ளியை தொடுகின்ற ஒரு கோட்பாடு தோன்றும்வரை மார்க்சியமே உயர்வானது, உன்னதமானது.**

**யதி :- நீங்கள் மரபுக்கவிதை, புதுக்கவிதை ஆகிய இரண்டு சொல்லுகை முறையிலும் பாண்டியத்தியம் உடையவர் என்ற வகையில் இந்த இரண்டு கவிதைப்போக்குகளினதும் வேறுபாட்டை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

**புதுவை :-** உண்மையிலேயே மரபுக்கவிதை, புதுக்கவிதை என்ற இந்தக் கூறுகட்டலை நான் அன்றிலிருந்து இன்றுவரை எதிர்த்துவருகிறேன். கவிதை, கவிதைதான் நேற்று எழுதிய கவிதைக்கு இன்று எழுதும் கவிதை புதுக்கவிதை அவ்வளவுதான். ஒரு காலத்தில் மரபுக்கவிதை என்று சொல்லப்படுபவை எல்லாம் ஒரே காலத்தில் எழுதப்பட்டவையல்ல. கவிதைகளின் வடிவ வேறுபாடுகள் எல்லாமே ஒரே காலத்தில் எழுந்தவை அல்ல. அதாவது வெண்பா எழுதிய காலத்திலல்ல விருத்தம் உருவானது. விருத்தம் எழுதிய காலத்திலல்ல அகவல் தோன்றியது இவை எல்லாமே காலத்திற்கு காலம் காட்டப்பட்ட புதிய வடிவங்கள்தான். அதுபோன்றே காலநீட்சியில் தேவை கருதி வரம்புகளை தகர்த்து நிற்கும் புதுக்கவிதை தோற்றம் பெற்றிருக்கிறது. ஆனால் விருத்தமாக இருந்தாலும், அகவலாக இருந்தாலும், வெண்பாவாக இருந்தாலும் அல்லது வரம்புகளை உடைத்து மெலெழும் இன்றைய கவிதையானாலும் இவற்றை எழுதுகின்ற கவிஞன் ஒரே நிலையில் நின்றுதான் எழுதிக்கொண்டிருக்கிறான். உண்மையிலேயே நான் நினைக்கின்றேன் ஒரு கவிஞன் இன்ன வடிவத்தில்தான் எழுதப்போகிறேன் என்று முன்கூட்டியே தீர்மானித்துக்கொண்டு எழுதுவதில்லை. அவன் எழுதப்போகின்ற பொருள் அந்தவடிவத்தை கொண்டுவருகிறது. மற்றைய கவிஞர்கள் பற்றி நான் அறியேன் ஆனால் என்னளவில் நான் இதுவரை இந்தவடிவத்தில்தான் எழுதப்போகின்றேன் என்று முன்கூட்டிய தீர்மானத்துடன் எழுத அமர்ந்ததில்லை. நான் எடுத்தாழ நினைக்கும் பாடு பொருள் அந்த வடிவத்தை கொண்டு வருகிறது. இப்பொழுதும் ஒருவாழ்த்துப்பாடல் எழுதுவதற்கு அறுசீர்விருத்தம் அற்புதமாகத்தான் இருக்கின்றது. அல்லது போட்டது போட்டபடி இருக்கின்றவாறு எழுதுவதற்கு எண்சீர்விருத்தம் பொருத்தமாகத்தான் இருக்கின்றது. ஆனால் நான் நினைத்தவற்றை எல்லாமே வாசகனின் உணர்வுத்தளத்திற்கு கொண்டு செல்லும் வகையில் எழுதுவதற்கு நீங்கள் கூறும் அந்த புதுக்கவிதை வடிவத்தைபோல் வாலாயப்பட்டது வேறொன்றுமில்லை என்றே நான் கருதுகின்றேன். நான் மரபு,புது என்ற பிரிவுநிலை விவாதத்திற்குள் அகப்பட விரும்பவில்லை. இரண்டுக்குமே இன்னும் வேலையிருக்கிறது. ஏன்? புதுக்கவிதையை மீறி வேறொரு வடிவம் தோன்றப்போவதில்லையா? புதுக்கவிதை என்று சொல்லப்படும் கவி வெளிப்பாடும் எல்லோரிட மிருந்தும் ஒரே மாதிரியாகவா எழுகிறது? தருமுசிவராமு ஒருமாதிரி எழுதியிருக்கிறார். சிவசேகரம் ஒருமாதிரி எழுதுகிறார். அமரதாஸ் ஒருமாதிரி எழுத, புதுவை வேறொரு முறையிலும், சோலைக்கிளி இன்னொரு முறையிலும் எழுதிக் கொண்டிருக்கின்றார்கள். எனவே புதுக்கவிதைக்கு ஒரு பொதுவான யாப்பை போடமுடியாது. ஏனென்றால் புதுக்கவிதையின் ஆரம்பமே யாப்பை உடைப்பதுதான். நான் சொல்வது இதுதான் ஜெயகாந்தன் சொல்லியவாறு இலக்கணத்தை மீறுங்கள் ஆனால் அந்த மீறல் இலக்கணம் தெரியாததன் பலவீனமாக இருக்கக்கூடாது. இலக்கணம் தெரியாவிட்டாலும் ஆகக்குறைந்தது தமிழாவது தெரியவேண்டுமல்லவா.

**யதி :- உங்கள் கவிதைகளை ஒட்டுமொத்தமாக நோக்கும் பொழுது ஏகாதிபத்தியத்திற்கு எதிரான குரல், இனவாதத்திற்கு எதிரான குரல் என இரு வேறுபட்ட குரல்களை அவதானிக்க முடிகிறது. அதாவது ஆரம்பத்தில் வர்க்கம் சார் சிந்தனைத்தளத்தில் நின்ற நீங்கள் காலப்போக்கில் தேசியசார் சிந்தனைத்தளத்திற்கு மாறியிருக்கிறீர்கள் இந்த மாற்றத்தின் பின்னணியை விளக்குவீர்களா?**

**புதுவை :-** இது என்னையே நான் சுயவிமர்சனம் செய்து கொள்வதற்கு பொருத்தமான கேள்வி. உண்மையிலேயே கவிஞன் என்பவன் ஒரு கலககாரன். அப்படியற்றவன்

www.tamilarangam.net

கவிஞனாக, கலைஞனாக, எழுத்தாளனாக வந்திருக்கமுடியாது அதாவது தான் நிலை கொண்டிருக்கின்ற சமூகத்திலிருந்து புதிய ஒன்றை காணவிழைபவன் அதற்கான முயற்சியில் ஈடுபடுபவன் எல்லோருமே கவிஞனாக, கலைஞனாக, எழுத்தாளராக வரமுடியும். அந்த வரையறையை ஏற்றுக்கொண்டால் இயல்பிலேயே நான் ஒரு கலகக்காரன்தான். ஈழத்திலே அல்லது இலங்கையிலே ஒரு காலத்தில் நாங்கள் எல்லோருமே ஒட்டுமொத்தமான இலங்கைக்குள் ஒரு அற்புதமான வாழ்வை சமைக்க ஆசைப்பட்டோம். தமிழ்,சிங்கள, முஸ்லிம் என்ற எந்த வேறுபாடுமற்ற, வர்க்க பேதமற்ற இருப்பார், இல்லாதார் அற்ற ஒரு அழகான நாட்டை நிர்மானிக்க விரும்பினோம். இன்னும் சொல்லப்போனால் இந்த தேசத்தை தன்னுடைய தேசமாக அதி அற்புதமாக காதலித்து எழுதியவன் தமிழ் கவிஞன்தான். சிங்களக் கவிஞர்கள் இந்த தேசத்தை காதலித்து எழுதியதிலும் பார்க்க தமிழ் கவிஞர்கள் எழுதியதுதான் அதிகம். இதனை ஆரம்பத்திலிருந்தே பார்க்கலாம்.

துஞ்சு மேதி சுறாக்களைச் சீற
சுறாக்களோடி பலாக்கனி கீறியே
இஞ்சி வேலியில் மஞ்சளில் போய்விழும்
ஈழமண்டல நாடெங்கள் நாடே

என்பதிலிருந்து.............

வேணிச் சங்கரர் தொண்டர்களென்று
வீடு தோறும் இரப்பவர்க்கெல்லாம்
மாணிக்கமள்ளிப் பிச்சை கொடுத்திடும்
மாவலி கங்கை நாடெங்கள் நாடே .....என்று

உணர்ந்துகொண்டோம். இதில் நாங்கள் என்று நான் என்னைத்தான் குறிப்பிடுகின்றேன். நான் முன்னே பார்த்துகொண்டிருக்கும்போதே என் இனத்தின்மீது பின்னே குழிபறிக்கப்பட்டுக் கொண்டிருந்ததை உணர்ந்தேன். அதன்பின்னர் பெரிய அளவில் தமிழ்மக்கள் மீது ஒடுக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டபோது முதலில் எமது வீட்டுப்பிரச்சினைக்கு முதலிடம் கொடுக்கவேண்டுமென்ற நோக்கில் தமிழ்தேசியத்தின் பக்கம் திரும்பினேன். இந்தவிடுதலைப்போராட்டமும் மானுடம் தழுவியதுதான். அடிமை நுகத்தடிகளை உடைப்பதற்கான போராட்டம்தான். நான் இன்றும் சிங்கள மக்களுக்கு எதிரான கருத்துக்களை எழுதவில்லை. வனையப்பட்டிருக்கும் சிங்கள பேரினவாதத்திற்கு எதிராகத்தான் எழுதுகிறேன். அது உடையவேண்டும். அது உடையும் வரையில் சிங்கள மக்களுக்கே விடுதலைகிட்டப்போவதில்லை. இப்பொழுது நான் தமிழ்தேசியத்தின் பக்கம் நிற்கின்றேன். இதுவும் தேவை கருதியல்ல, இலாபம் கருதியல்ல. எனக்குள் இருக்கும் விடுதலைக்கனல் என்னை இந்தப்பக்கம் கொண்டு வந்திருக்கின்றது. நான் இப்பொழுது கூறுகின்றேன் எப்பொழுதும் கூறுவேன். நான் அன்று தேவைகருதி அங்கு நின்றவனுமல்ல இன்று தேவைகருதி இங்கு நிற்பவனுமல்ல. அதே புதுவை இரத்தினதுரையாகத்தான் அன்றும், இன்றும் இருக்கிறேன் ஒன்றுமட்டும் உண்மை இடதுசாரிகள் என்று குறிப்பிடப்படுவோர் ஒரு வர்க்க பேதமற்ற உண்மையான மக்கள் சமூகத்தை சிங்களப்பகுதிகளில் கட்டி எழுப்பியிருப்பார்களானால் இந்த இனவேறுபாட்டு நிலை ஏற்பட வாய்ப்புஇல்லாமல் போயிருக்கும்.

**ஒரு காலத்தில் நாங்கள் எல்லோரும் இலங்கையர், இலங்கையர் என்று கூறியபோது இல்லை நீங்கள் தமிழர்,தமிழர் என்று சொன்னார்கள். சரி அப்படியா என்று இப்பொழுது நாங்கள் தமிழர், தமிழரென்று சொல்லுகிறோம். மீண்டும் அவர்கள் மாறி இல்லை நீங்கள் இலங்கையர் இலங்கையர் என்று சொல்லுகின்றார்கள். இவ்வளவுதான் பிரச்சினை.**



பாடியதிலிருந்து ஈழத்துக்கவிஞன்தான் இந்த தேசத்தை அதிஅற்புதமாக நேசித்தவன். ஆனால் சிங்களவர்கள் இந்த இலங்கையை தங்களுடையதென நினைத்தது இந்த இனவாதப்பூதம் அவர்களுக்குள் குடிகொண்டபோதுதான். எங்களில் கணிசமான ஈழத்து படைப்பாளிகள் கூட்டாக இணைந்து ஒரு வர்க்கபேதமற்ற ஒடுக்குமுறையற்ற தேசத்தை கனவுகண்டோம். அதுபற்றி பாடினோம். எழுதினோம். அப்பொழுது இருந்த அரசியல் சூழலும் அதற்கு பொருத்தப்பாடுடையதாக இருந்தது. இன்றும் நான் அதை பிழையென்று சொல்லமாட்டேன். இன்னும் அந்த தேவையிருக்கிறது. ஆனால் அப்பொழுது நாங்கள் ஒன்றைக் கவனிக்கத்தவறிவிட்டோம் என்பதை மட்டும் என்னால் உணர முடிகின்றது. உண்மையான விடுதலைத்தாகம் கொண்ட படைப்பாளிகள் எல்லோரும் ஆரம்பத்தில் தங்கள் இனம்படும் வதையை கொஞ்சம் பார்க்கத்தவறிவிட்டார்கள்தான். நான் அதை குற்றமாகக்கொள்ளவில்லை. ஏனென்றால் அவர்களுடைய இலக்கு முழுவதும் ஒட்டு மொத்த இலங்கைக்குள் ஒரு வர்க்கபேதமற்ற நாட்டை உருவாக்குவதில் குவிமையம் கொண்டிருந்தது. ஆனால் காலநகர்வில் எங்களுக்கு சிறிது விளங்கத் தொடங்கியது. நாங்கள் ஒட்டுமொத்தமான ஏதோவொரு நுகத்தடியை உடைக்க புறப்படும்போது எங்கள் மீதே புதிய புதிய நுகத்தடிகள் போடப்படுகின்றனவே! கைவிலங்குகள் இடப்படுகின்றனவே! என்பதை காலம்போக

ஆனால் அவர்களே அந்த இனவாத சாக்கடைக்குள் வீழ்ந்துபோனார்கள். இதன் காரணமாகத்தான் மானுடம் தழுவிநின்ற அதனை நேசித்த புதுவை இரத்தினதுரை என்ற கவிஞன் தமிழ்தேசியத்தின் பக்கம் வரவேண்டிய தேவை ஏற்பட்டது. அதில்லாமல் பதவிகள், பட்டங்கள், பொருள்தேடல் என்று எதுவுமில்லை. நான் அடிக்கடி சொல்வதுண்டு ஒரு காலத்தில் நாங்கள் எல்லோரும் இலங்கையர், இலங்கையர் என்று கூறியபோது இல்லை நீங்கள் தமிழர், தமிழர் என்று சொன்னார்கள். சரி அப்படியா என்று இப்பொழுது நாங்கள் தமிழர், தமிழரென்று சொல்லுகிறோம். மீண்டும் அவர்கள் மாறி இல்லை நீங்கள் இலங்கையர் இலங்கையர் என்று சொல்லுகின்றார்கள். இவ்வளவுதான் பிரச்சினை. இப்பொழுது ஒரு நல்ல சூழ் நிலை மலர்ந்திருக்கிறது. அவர்கள் இதுபற்றி சிந்திக்கலாம். சிந்திக்கவாய்ப்புண்டு. அவர்கள் சிந்திக்காவிட்டால் தமிழ்தேசிய விடுதலைப்போராட்டம் தனது இலக்கை நோக்கி நகரும் அப்படி நகரும் போது ஒரு போராட்டக்கவிஞனாய் அந்த இலக்கு நோக்கிச் செல்ல வேண்டிய கடப்பாடு எனக்குமுண்டு. நான் அன்று வர்க்கப்போராட்டத்தைப் பற்றி பேசியபோதும் இன்று தமிழ்த்தேசியத்தின் பக்கம் நிற்கும் போதும் எனக்குள் இருந்தது. இருப்பது என்னவென்றால் மானுடவதைக்கு எதிரான, அடக்குமுறைகளுக்கு எதிரான உணர்வு நிலை மட்டுமே! இந்த உணர்வு நிலைதான் வியட்நாம் போராட்ட காலத்தில் அமெரிக்காவிற்கு எதிராக என்னை

www.tamilarangam.net

எழுதவைத்தது. சிலியில் 'அலண்டே' என்ற தலைவன் அமெரிக்ககூலிகளால் கொலைசெய்யப்பட்டபோது அதற்கு எதிராக என்னை குரல் எழுப்ப வைத்தது. உண்மையில் எங்கெல்லாம் மானுடம் வதைபடுகிறதோ அதற்கு எதிராக மனிதத்தை நேசிக்கும் கலைஞன் நிச்சயமாக நிற்பான். அதுதான் சரியானது. நியாயமானது. எனவே தேசவிடுதலைப்போராட்டம் தனது இலக்கு நோக்கிப் போகும்வரை நானும் கூடவே நடப்பேன். அந்த இலக்கை அடைவதையும் காண்பேன். அந்த மகிழ்ச்சியையும் பாடுவேன். அதேவேளை உலகில் எங்காவது மானுடம் வதைபடுமானால் என்னுடைய கவிதை மொழியில் அதனுடன் இணைந்து கொள்வேன்.



**யதி :- நீங்கள் ஒரு கவிஞராக இருக்கும் அதேவேளை ஒரு போராளியாகவும் இருக்கின்றீர்கள் இந்த இரண்டு இருப்பு நிலைக்குமான இணைவை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

**புதுவை :-** ஒரு போராளியாக இருப்பதென்பதும். கவிஞனாக இருப்பதென்பதும் அதிக வேறுபாடற்றது என்றாலும் கூட போராளியாக இருப்பதென்பது கவிஞனாக இருப்பது என்பதை விடவும் மேலானது. இன்று போராளி என்ற வார்த்தைப் பிரயோகத்தை பலரும் பல்வேறு அர்த்தங்களில் பயன்படுத்துகின்றனர். போராளி என்பவன் போரை ஆள்பவன். ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டத்தோடு தன்னை இணைத்துக்கொள்பவன். அது வதைக்குரியது. பல இழப்புக்களை சந்திக்கவேண்டி வரும். ஆனால் இன்று கவிஞராக இருப்பதையே போராளியாக இருப்பதாகக் கருதிக் கொண்டு எல்லா கவிஞர்களுமே போராளி என்ற சொற்பதத்துடன் சமநிலைப்பட விரும்புகின்றனர். உண்மையில் ஒரு போராட்ட அமைப்பினுடைய அங்கமாக இருப்பதென்பது வேறு ஒரு போராளிக் கவிஞராக இருப்பதென்பது வேறு. போராட்டம் என்பது ஆயுதங்களுடன் பழகுவது. பேசுவது வறுமையோடு பழகுவது. பேசுவது இரத்தத்தோடு பழகுவது. பேசுவது எனவே ஒரு போராளியாக இருப்பதென்பதற்கும் கவிதைப்போராளியென்று சொல்லிக் கொள்வதற்கும் அதிக வேறுபாடுகள் உண்டு. போராளி என்பவன் தனது ஆசாபாசங்களை புறக்கணிக்கவேண்டிவரும். தனிமனித விருப்பு. வெறுப்புகளை துறக்கவேண்டிவரும். விடுதலை அமைப்பின் கட்டமைப்போடு தன்னை இறுக்கவேண்டிவரும். கவிஞன் என்பவன் சிட்டுக்குருவி போல் சிறகடிப்பான் என்பார்கள். ஆனால் விடுதலை அமைப்போடு தன்னை பிணைத்துக்கொண்ட கவிஞன் அப்படி இருக்கமுடியாது. சுருக்கமாக சொன்னால் தன்மனம் விரும்புவதை விரும்பியவாறு செய்யமுடியாமல் போகும். இத்தனையையும் தாங்கிக்கொண்டு ஒரு போராளியாக இருப்பதென்பது மிகக்கடினமானது. இன்று நான் எந்த பொருளாதார தேட்டமுமற்று. அடித்தளமுமற்று ஒரு வெறும் மனிதனாக நிற்கின்றேன் என்பதை என்னால் உணரமுடிகின்றது. ஆனால் ஒரு பெரிய விடுதலை அமைப்பின் போராளியாக இருப்பது என்பது அதைவிடப் பெரியது. அந்த மகிழ்ச்சியும் திருப்தியும் எனக்குப்போதுமானது. விடுதலைப்போராட்ட அமைப்பில் நான் ஒரு அங்கமாக இருப்பதால் மற்ற கவிஞர்களுக்கு எட்டாத சில வாய்ப்புகளையும் பெறமுடிகிறது. போரின் பலம். போரோடு இணைந்த தன்மை. அந்த போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கின்ற மாபெரும் தலைவருக்கு நெருக்கமாக நிற்கிற தகுதி. பல்லாயிரக்கணக்கான மாவீரர்களுடன் பழகிய அந்த உறவு. போராட்டத்தின் வெற்றிகள் என்னையும் தொற்றிக்கொண்ட தன்மை. இவையெல்லாம் ஒரு கவிஞராக இருப்பதிலும் பார்க்க போராளியாக இருப்பதினால் கிடைக்கும் பலன்கள். எனவே கவிஞனாக இருப்பதென்பது மகிழ்ச்சி. ஆனால் கவிதைகளில் எழுதுவதையே வாழ்க்கையாகக் கொண்ட போராளியாக இருப்பதென்பது அற்புதமானது. நான் போராளிக் கவிஞனாக இருந்தேன் என்பதைவிட போராளியாக இருந்தேன் என்பதே எனக்கு திருப்தி தருகிறது. உண்மையிலேயே இந்த விடுதலைப் போராட்ட அமைப்போடு நான் இணைந்துகொண்டபோதே. எனக்குத் தெரியும் தனிப்பட்ட வாழ்க்கை முறையில் பல இழப்புக்களை சந்திக்கவேண்டிவரும் என்பது. ஆனால் நான் எழுதுவதற்கு முதலில் நானே சாட்சியாக இருக்க விரும்பினேன். போராளியாக மாறினேன். அப்படித்தான் மாறவேண்டும். உலகளவில் விடுதலைப்போராட்டங்களோடு இணைந்து நின்ற கவிஞர்கள் எல்லோருமே போராளியாகத்தான் இருந்தார்கள். ஏறக்குறைய நான் போராட்ட அமைப்போடு இணைந்து 19 வருடங்கள் பூர்த்தியாகிவிட்டது. மற்ற கவிஞாகள் போல் தேடமுடியவில்லை. என் மனம் ஏவுகின்றவற்றை செய்யமுடியவில்லை என்பதில் எனக்கு சிறிதும் வருத்தமில்லை சரியான திசை வழியில் என் காலப்பணியை ஏற்று நின்றேன். என்ற திருப்தியுடன் என் வாழ்வு மகிழ்வுடன் முற்றுப்பெறும்.

**யதி :- ஈழத்தமிழர் தேசிய விடுதலைப்போராட்டம் தமிழ் சமூகத்தில் வேர்கொண்டிருந்த அடக்குமுறை சிந்தனைப்போக்குகளில் சில அதிர்வுகளை ஏற்படுத்தியிருப்பது உண்மை. அதாவது தமிழ் சமூகத்தில் விரவி நின்ற சாதியப்படி நிலையிலும், ஆணாதிக்க கட்டமைப்பிலும் சில உடைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் இவ்வுடைவுகள் தேச விடுதலைப்போராட்ட நகர்வின் போது ஏற்பட்ட ஒன்றேயன்றி அகநிலை விடுதலைத் தேவைகள் சார்ந்த ஓர் கருத்தியல் தளத்தினூடாக ஏற்பட்டதல்ல என்பது சிலரது கருத்தாகவும், தேசவிடுதலைப் போராட்டம் முற்றுப் பெறும் பட்டசத்தில் இவ்வாறான அகநிலை அடக்குமுறை சிந்தனைப்போக்குகள் மீண்டும் மேலெழலாம் என்பது இன்னொரு சாராரின் கருத்தாகவும் இருக்கிறது. இவ்வாறான கருத்துப்போக்குகள் குறித்து உங்கள் எதிர்வினை?**

**புதுவை :-** உண்மையிலேயே ஒரு தேசவிடுதலைப் போராட்டம் சகல அடக்கு முறைகளுக்கு எதிராகவும் நிகழும். வர்க்கப்போராட்டம் என்றால் அது வர்க்கங்களை மட்டும் உடைக்கும் போராட்டம் அல்ல. அது சகல அசிங்கங்களையும் கழுவும். தேசிய விடுதலைப்போராட்டமும் அப்படித்தான். அது தனியே இனவிடுதலையை மட்டும் மையப்படுத்தியல்ல. அது சகல கழிவுகளையும் அள்ளிக்கொண்டுபோய் புறமொதுக்கி அழகுகளையும். வேண்டியவற்றையும் மட்டுமே மேலே கொண்டு வரும். குறிப்பாகச் சொல்லப்போனால் எமது தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் தலைமையில் நடைபெறும் இந்தப்போராட்டத்தை சகல அடககுமுறைகளுக்கும் எதிரான போராட்டமாகத்தான் நான் கருதுகிறேன். ஏனென்று சொன்னால் நான் எமது தேசியத்தலைவரின் அருகில் நின்று பழகும் வாய்ப்பை பெற்றவன். அவருடைய மனநிலையையும். கருத்துநிலையையும் கூட அறிந்து கொண்டவன். எனவே இந்த தேசிய விடுதலைப்போராட்டம் வெறுமனே மண்ணை விடுவிக்கின்ற போராட்டமாக. தனியே இனவிடுதலைக்கான போராட்டமாக அல்லாமல் உண்மையானதொரு விடுதலைக்கான போராட்டமாக பரிணமித்துள்ளது என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அதில் எந்த மாற்றமும் கிடையாது. உண்மையிலேயே எல்லை கட்டுதல் அல்ல ஒரு விடுதலைப்போராட்டத்தின் பண்பு நிலை. ஆதிக்க

www.tamilarangam.net

வல்லூறுகளின் விமானங்கள் எங்களது எல்லைப்பரப்பினுள் நுழையாது விட்டுவிட்டால் விடுதலை வந்துவிட்டதாக அர்த்தமில்லை. எங்களுடைய மனங்கள் விடுவிக்கப்படவேண்டும். அதற்கு இந்த விடுதலைப்போராட்டம் வழிசமைத்துத் தரவேண்டும். அந்த நல்நிமித்தம் நோக்கி, ஒளி நோக்கி எமது விடுதலைப்போராட்டம் நகர்ந்து கொண்டிருக்கின்றது என்பதில் சந்தேகமில்லை.

பெண்விடுதலையை எடுத்துக்கொள்வோமே! களத்தில் நின்று எங்களுடைய பெணகள் போராடுவதால் பெண்விடுதலை வந்துவிட்டதா எனச் சிலர் கேள்வி எழுப்புகின்றார்கள். கூந்தலை கத்தரித்துவிட்டு யூனிபோமை அணிந்து விட்டால் பெண்விடுதலை வந்துவிட்டதா எனக் கேள்வி எழுப்பும் பெண்ணிய விமர்சகர்களை நான் அறிவேன். அதை நானும் பெண்விடுதலை என்று சொல்லவில்லை. ஆனால் அவர்களின் மனங்களுக்குள் ஏற்பட்டிருக்கின்ற மறுமலர்ச்சியை, அந்த விடுதலை உணர்வை இந்த விமர்சகர்கள் புரிந்து கொள்ளத்தவறிவிட்டார்கள். இவர்கள் எட்ட இருந்து பார்க்கின்றார்கள். உண்மையில் இந்த இனவிடுதலைக்கான, மண்விடுதலைக்கான பெண்கள்அணி வெறுமனமே ஆயுதம் தரித்த ஒரு கெரில்லா அமைப்பினுடைய பெண்கள் அல்ல. ஒரு ஒட்டுமொத்தமான விடுதலை நோக்கிய போராட்ட அமைப்பின் விடுதலை அணியினர். அதை இவர்கள் கணிக்கத் தவறிவிட்டார்கள். இன்று எமது பெண் போராளிகளின் மணங்களுக்குள்ளே ஏற்பட்டிருக்கின்ற வளர்ச்சி, அவர்களுடைய கருத்து நிலையில் ஏற்பட்டிருக்கின்ற மறுமலர்ச்சி மிக மிக அற்புதமானது. பெருமை வாய்ந்தது. அதேவேளை இந்தப்போராட்டத்தில் இணைந்து கொண்டிருக்கின்ற ஆண்களின் மனவளர்ச்சி எவ்வளவு சிறப்பு வாய்ந்தது. இந்தப்போராட்டம் மையம் கொண்டிருக்கின்ற பிரதேச மக்களின் மனவளர்ச்சி எவ்வளவு உயர்வானது. இதை யார் அறிந்துகொண்டார்கள்? யார் எல்லை மீறி வந்து இவற்றையெல்லாம் இனம் கண்டார்கள். எதுவுமே நடக்கவில்லை ஆங்காங்கே குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்தவாறு சிலர் குரல் எழுப்புகின்றனர். உண்மையில் பெண் விடுதலை வேண்டும். மண்விடுதலைக்கு நிகராக பெண் விடுதலை வேண்டும். பெணகள் மீதான ஒடுக்குமுறை என்பது ஒரு மிகப்பெரிய கொடுமை. என்னளவில் கூட என்னையறியாமலேயே எனக்குள் ஆணாதிக்கத்தன்மைகள் இருப்பதையும் பல சந்தர்ப்பங்களில் அது மேலெழுவதையும் என்னால் உணரமுடிகின்றது இவ்வளவும் பேசி இவ்வளவும் எழுதிய பின்னரும் கூட எனக்குள் அது இருக்கிறது. இன்றும் இருக்கிறது. பொறுத்த நேரத்தில் அது தலைகாட்டப்பார்க்கிறது. நான் அடித்து அமர்த்திக் கொண்டிருக்கிறேன். என்னுடைய நிலையே இவ்வாறென்றால் சாதாரண மக்களின் நிலை என்ன? எனவே பெண் விடுதலை என்பது நியாயமானது. அதற்காக பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் சேர்ந்து போராடவேண்டிய தேவை இருக்கிறது.

இதேபோன்றுதான் சாதியம்.

சாதியம் ஈழத்து தமிழர்களிடையே இருக்கின்ற அசிங்கங்களில் ஆகக்கூடிய அசிங்கமாகும். இது எவ்வளவு விரைவாக அழிக்கப்படமுடியுமோ அவ்வளவு விரைவாக அழிக்கப்படவேண்டிய ஒன்று. இந்தப்போராட்ட சூழலில் சாதியம் அழிந்துவிட்டதாக நான் ஒருபோதும் சொல்லமாட்டேன். அதே போர்வையை போர்த்தியபடி இன்னும் அது இருக்கிறது. ஆனால் இந்தப்போராட்டத்தின் சூடு அவர்களை கொஞ்சம் பேசாமல் வைத்திருக்கிறது. அனால் சாதியப்படி நிலைகள் முன்னர் இருந்த அதே இறுக்கத்துடன் இப்பொழுதும் இருப்பதாக நான் சொல்லமாட்டேன். நீங்கள் கூறியது போன்றே சிலர் சொல்லுகின்றார்கள் போராட்டம் முற்றுப் பெற்றபின்னர் மீண்டும் இவைகள் மேலெழும்பும் என்று. அப்படியில்லை அவர்கள் சரித்திரத்தை மறுதலிக்கின்றார்கள் சாதியால் மீழெழும்பி ஆணாதிக்கத்தால் மீளக்கட்டமைக்கப்பட்டு ஒரு தமிழீழம் வரப்போகின்ற தென்றால் அப்படியொரு தமிழீழம் எங்களுக்கெதற்கு நாங்கள் காணத் துடிக்கின்ற அந்தத் தமிழீழத்தில், அந்த எல்லைப்பரப்பில் சகல அசிங்கங்களும் அழிக்கப்பட்டிருக்க வேண்டும். அது வர்க்கப் பேதமானாலும், ஆணாதிக்கமானாலும், சாதியக் கொடுமையானாலும், அல்லது மதப்பூசல்களால் ஏற்படுகின்ற முரண்பாடுகளானாலும் சகலதையும் அழித்த ஒரு தேசத்தையே நாங்கள் அவாவுகிறோம் அல்லது போராட்டம் முற்றுப்பெறும்போது ஒரு 75 சதவீதத்தையாவது இல்லாமல் செய்திருக்கவேண்டும். நிச்சயம் இந்தப்போராட்டம் அந்த இலக்கை எய்தும். ஆனால் இந்தப் போராட்டம் மையம் கொள்ளாத பகுதிகள் குறித்து எனக்கு பிரச்சினை இருக்கிறது. இவ்வாறான கருத்துக்கள் எல்லாம் அங்கிருந்துதான் மேலெழுகின்றன. இந்தப்போராட்டத்தினால் முற்றுமுழுதாக சாதியம் ஒழிந்துவிட்டதாக, ஆணாதிக்கம் அழிந்துவிட்டதாக நானும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் இந்தப்போராட்டத்தின் திசைவழியிலேயே அது ஒவ்வொன்றாய் செட்டை கழட்டும் என்பதில் எனக்கும் நம்பிக்கை இருக்கிறது. இந்தப்போராட்டத்தோடு நெருக்கமாய் இருக்கின்றவன் என்ற வகையில் என்னால் ஒன்றை சொல்லமுடியும் இவற்றில் கணிசமானவற்றை நாங்கள் எரித்திருக்கிறோம். அப்புறப்படுத்தியிருக்கிறோம். இனியும் அவற்றை எரித்தவாறு. அப்புறப்படுத்தியவாறு இந்தப்போராட்டம் நகரும். விடுதலை பெறப்படும் பொழுது இவைகள் மீளக் கட்டியெழுப்ப முடியாதவாறு வேரோடு அறுக்கப்பட்டிருக்கும் இது மட்டும் உண்மை. சத்தியம்.



**சாதியம் ஈழத்து தமிழர்களிடையே இருக்கின்ற அசிங்கங்களில் ஆகக்கூடிய அசிங்கமாகும். இது எவ்வளவு விரைவாக அழிக்கப்படமுடியுமோ அவ்வளவு விரைவாக அழிக்கப்படவேண்டிய ஒன்று. இந்தப்போராட்ட சூழலில் சாதியம் அழிந்துவிட்டதாக நான் ஒருபோதும் சொல்லமாட்டேன். அதே போர்வையை போர்த்தியபடி இன்னும் அது இருக்கிறது. ஆனால் இந்தப்போராட்டத்தின் சூடு அவர்களை கொஞ்சம் பேசாமல் வைத்திருக்கிறது.**

**யதி :- 1990களுக்கு பின்னர் இலக்கியத்தினூடாக போராட்டம் தொடர்பான விமர்சனங்களும், மாற்றுக்கருத்துக்களும் பரவலாக மேலெழுந்தன. இவ்வாறான இலக்கியக் குரல்கள் போராட்டத்தை**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**சாடுகின்ற போக்கையே அதிகம் வெளிக்காட்டியது. ஒரு போராட்ட அமைப்பினுள் இயங்கும் படைப்பாளி என்றவகையில் இவ்வாறான இலக்கிய குரல்கள் குறித்து உங்களது பார்வை என்ன?**

புதுவை :- இதை மிக மிக முக்கியமானதொரு கேள்வியாக நான் கருதுகின்றேன். இந்த விடுதலைப்போராட்டம் கால்கோள் கொண்ட நேரத்தில் பல இலக்கியவாதிகளும் கவிஞர்களும்தான் முன்னோடிகளாக இருந்திருக்கிறார்கள். இந்தப்போராட்டம் ஆரம்பத்தில் கவிதையினூடாகத்தான் அறிமுகமாகின்றது. சரியாக இந்தப்போராட்ட வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால் போராட்டத்தை கவிதைகளினூடாக அறிமுகம் செய்ததுதான் அதிகம். பல கவிஞர்களும், கலைஞர்களும், படைப்பாளிகளும் இந்தப்போராட்டத்துடன் இணைந்து நின்றனர். இதில் முக்கியமானது என்னவென்றால் இந்த விடுதலைப்போராட்டத்தை தலைமைதாங்க ஏறக்குறைய '35' தலைமைகள் வெளிக்கிளம்பின. இந்த கவிஞர்களும், கலைஞர்களும், படைப்பாளிகளும் இந்த '35' தலைமைகளுக்கு பினனாலும் நின்றனர். இதனால் என்ன ஆபத்து ஏற்பட்டதென்று சொன்னால் இந்தப் போராட்ட தலைமைகள் காலத்திற்கு ஈடுகொடுக்கமுடியாமல் உதிர்ந்துபோனபோது இந்த கவிஞர்களும், கலைஞர்களும், அந்த அமைப்புகளினுடனேயே கரைந்துபோகின்றனர். எஞ்சியதும் இரண்டு, மூன்றாக இருந்து அதுவும் காலப்போக்கில் உதிர்ந்து போக, இன்று ஒரேயொரு தேசியத்தலைமை பரிணமித்திருக்கிறது. இன்று இந்த விமர்சனங்களும் மாற்றுக்கருத்துக்களும் இவ்வாறு காலத்திற்கு ஈடுகொடுக்கமுடியாமல் காணாமல் போன இலக்கியவாதிகள், கலைஞர்கள், கவிஞர்களிடமிருந்துதான் அதிகம் வெளிவருகிறது. நாங்கள் மாற்றுக்கருத்துக்களுக்கும், விமர்சனங்களுக்கும் எதிரானவர்களல்ல. ஆனால் இந்த கருத்துக்களை சரியாக உள்நுழைந்து பார்ப்பீர்களானால் இந்தக்கருத்துக்களில் ஒன்று தொக்கி நிற்பதை அவதானிப்பீர்கள். அது என்னவென்றால் நான் இல்லாமலும் இந்தப் போராட்டம் நடக்கிறதே! நாங்கள் எல்லோரும் தானே இந்தப்போராட்டத்தை பாடினோம், எழுதினோம்.அதென்ன நாங்கள் இல்லாமல் நீங்கள் போராட்டம் நடத்துவது. என்பது போன்ற கருத்துக்களை போராட்டத்திற்கு எதிரான கருத்துக்களாக முன்வைக்க ஆரம்பித்துவிட்டார்கள். மாற்றுக்கருத்து என்பது வேறு,

போராட்டத்திற்கு எதிரான கருத்து என்பது வேறு. இன்று புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள சில சக்திகள் அதைத்தான் செய்துகொண்டிருக்கின்றார்கள். அதாவது எனக்கு மூக்குப்போனாலும் பரவாயில்லை. எதிரிக்கு சகுணம் பிழையாக இருக்க வேண்டும். காலத்திற்கு தாக்குப்பிடிக்க முடியாமல் கரைந்து போன அந்த எழுத்தாளர்களும், கலைஞர்களும், மாற்றுக்கருத்து என்ற பெயரில் இந்த ஒட்டுமொத்த தேசிய விடுதலைப்போராட்டமே பிழையென்பது போன்ற எதிர்குரலை முன்வைப்பவர்களாக மாறிவிட்டனர். தாங்கள் தாக்குப்பிடிக்கமுடியாமல் போனதற்கான காரணத்தை போராட்டத்தின் மீதான விமர்சனமாக முன்வைக்க தொடங்கிவிட்டனர். இதனை ஆழமாகப் பார்த்தால் நீங்கள் ஒன்றை விளங்கிக்கொள்வீர்கள். இன்று இந்தப்போராட்டத்தை விமர்சிப்பவர்கள் எல்லோருமே இந்தப்போராட்டத்துடன் இணைந்து நின்றவர்கள் என்பதை ஏற்றுக்கொள்கிறார்கள். காலத்திற்கு ஈடுகொடுக்கமுடியாமல் கரைந்துபோன இவர்கள் தாங்கள் இருந்த காலத்தை மட்டும் பொற்காலமாக சொல்லிக்கொண்டு அதன்பின்னரான போராட்ட வளர்ச்சிக் காலகட்டம் முழுவதையும் விமர்சனத்திற்குரியதாகவும், பிழையானதாகவும் சித்தரிக்க முற்படுகின்றனர். இதற்காக இலக்கியத்தை பயன்படுத்துகின்றனர். உண்மையில் இது என்னவென்றால் நான் இல்லாமலும் நல்லது நடக்கிறதே, போராட்டம் நடக்கிறதே என்ற ஆதங்கத்தின் வெளிப்பாடுதான்.

ஆனால் இந்த நிலைமை மெல்ல மெல்ல மாறி இன்று எல்லோரும் ஒரே நேர்கோட்டில் சந்திக்கின்ற சூழல் உருவாகிவருகிறது. விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரைத்தவிர எல்லோருமே இந்த விடுதலைப்போராட்டம் சரியான திசை வழியில் செல்வதை உணர்ந்து தங்களையும் இந்தப்போராட்டத்துடன் இணைத்துக்கொள்ள வருகின்றனர். அதையிட்டு நாங்கள் மரியாதை கொள்கிறோம். உண்மையில் மாற்றுக் கருத்துக்கள் வேண்டும். எதிர்குரல்கள் வேண்டும். ஆனால் ஒரு அற்புதமான போராட்டத்தை அழிப்பதாக அது இருக்கக்கூடாது. போராட்டத்தை சரியான வழியில் நடத்திச் செல்வதாக இன்னும் வீறு கொள்ளச்செய்வதாக இருக்க வேண்டும். என்னைப் பொருத்தவரையில் நான் மாற்றுக் கருத்துக்களை ஏற்றுக்கொள்கிறேன். அது என்னை சரியான வழியில் நடத்திச் செல்வதாக, எங்களுடைய அமைப்பை பலப்படுத்துவதாக இருந்தால் மட்டுமே. இல்லையென்றால் அது கொடுமையானது, அநியாயமானது.

**யதி :- வன்னி இலக்கிய சூழல் பற்றி இன்று அதிகம் பிரஸ்தாபிக்கப்படுகின்றது. ஈழத்து இலக்கிய உலகின் எதிர்காலம் வன்னியை மையப்படுத்தியே இருப்பதாகவும் சொல்லப்படுகின்றது. நீங்கள் நீண்டகால வன்னி வாழ்வியல் அனுபவங்களை செரித்துக்கொண்டவர் என்ற வகையில் வன்னி இலக்கியச் சூழல் பற்றி சற்று கூறுவீர்களா?**

**புதுவை :-** இன்று இந்தப்போராட்டம் மையம் கொண்டிருக்கின்ற வன்னி நிலப்பரப்பைப் பற்றி பேசாதார் யாருமில்லை. அது அரசியலாக இருக்கட்டும், போராட்டமாக இருக்கட்டும், கலை இலக்கியங்களாக இருக்கட்டும் அல்லது அதற்குள் வாழ்ந்த மக்களின் அந்த நிமிர்ந்த நிலையாக இருக்கட்டும், அவர்களின் சோகமாக இருக்கட்டும் இன்று வன்னியை பேசாத வாய்களே இல்லையென்ற நிலைக்கு வந்துவிட்டது. வன்னி ஏலவே கலை, இலக்கியங்களில் கணிசமான பாத்திரத்தை வகித்து வந்த பகுதிதான். ஏதோ திடீரென்று வன்னிக்குள் போய் யாரும் குதித்துவிடவில்லை, கிராமியக்கலைகளில், கூத்துக்களில், ஏன் நல்ல படைப்பாளிகளில் வன்னி கணிசமான பங்கை ஆற்றியிருக்கின்றது. வன்னியில் முகிழ்ந்த எழுத்தாளர்கள் அல்லது வன்னியில் போய் வாழ்ந்த எழுத்தாளர்கள் என வன்னி ஏற்கனவே பேசப்பட்டுக்கொண்டுதான் இருந்தது. 1995ம் ஆண்டிற்குப் பின்னர்தான் ஏதோ வன்னி இலக்கியங்களில் முடிசூட்டிக்கொண்டதாக யாரும் கருதவேண்டியதில்லை. அந்தப்பெருமையை நாங்கள் மட்டும் எடுத்தக்கொள்ளவும் கூடாது. 1995ம் ஆண்டிற்குப்பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்து கணிசமானவர்கள் இடம்பெயர்ந்தனர். ஏறக்குறைய '4'லட்சம்பேர் இடம்பெயர்ந்தனர். இதில் கணிசமானவர்கள் சொந்த இடங்களுக்கு திரும்பிவிட்டாலும் 2லட்சம்பேர்வரை கடந்த 6 அல்லது 7 வருடங்களாக வன்னியிலேயே வாழ்ந்து வருகின்றனர். இதில் கணிசமான எழுத்தாளர்களும், கலைஞர்களும் அடங்கியிருந்தனர். கலை பண்பாட்டுக்கழகம் யாழ்ப்பாணத்தில் பெரிய அளவில் தன்னுடைய பணியை ஆற்றிக்கொண்டிருந்த போதுதான் இந்த இடப்பெயர்வு நிகழ்ந்தது. கலைப்பண்பாட்டுக் கழகமும் வன்னியை நோக்கி பெயர்ந்தது. ஏற்கனவே வன்னிக்கலைஞர்களுடனும், எழுத்தாளர்களுடனும் கழகத்திற்கு நெருக்கமான தொடர்புகள் இருந்தது. எனவே வன்னியில் முகிழ்ந்த எழுத்தாளர்கள், யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த எழுத்தாளர்கள், பண்பாட்டுக்கழகம் என எல்லாவற்றினதும் இணைவு இந்த 6,7 வருடங்களில் ஒரு பெரிய மாற்றத்திற்கு வித்திட்டிருப்பது எல்லோரும் கூறுவது போன்று உண்மைதான். ஆனால் இது ஏதோ வானத்திலிருந்து விழுந்ததல்ல. அங்கு நடந்த போராட்டம் தான் இதற்கு காரணம். எங்கு போராட்டம் நிகழ்கிறதோ அங்கு ஒரு அசைவுத் தன்மை ஏற்படும். எங்களுடைய போராட்டம் மையம் கொண்டிருந்த பகுதியாக வன்னி இருந்ததால் இந்த போராட்டத்தை எழுதவேண்டிய, பேசவேண்டிய தேவை அங்குள்ள கலைஞர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் ஏற்பட்டது. இதில் கணிசமான இளம் படைப்பாளிகளும் இணைந்து கொண்டனர். உண்மையில் அங்கு போராட்டம் இல்லாதிருந்தால் நாங்கள் செத்திருப்போம். இந்தப்போராட்டத்துடன் கலைஞர்கள், படைப்பாளிகள், எழுத்தாளர்கள் என எல்லோரும் இணைந்து நின்றார்கள்.தங்கள் அனுபவங்களை கலை, இலக்கியங்களூடாக வெளிப்படுத்தினார்கள். அதில் உண்மை இருந்தது, சத்திய தரிசனம் இருந்தது அது இன்று எல்லோராலும் பேசப்படுகின்றது

www.tamilarangam.net



தமிழர் தேசிய விடுதலைப்போராட்டம் கலை, இலக்கிய ரீதியாகவும் சமாந்திரமான பாய்ச்சலுடன்தான் நகர்ந்து கொண்டிருக்கின்றது. யார் இருந்தாலும், இல்லாவிட்டாலும் இந்த சமாந்திர நிலை இருந்து கொண்டுதான் இருக்கும். இந்தப் படைப்புக்கள் ஒரு ரஷ்ய இலக்கியம் போன்று அல்லது வியட்நாமிய இலக்கியம் போன்று, லத்தீன் அமெரிக்க இலக்கியம் போன்று சீன இலக்கியம் போன்று ஒரு காலத்தில் பேசப்படும்.

அவ்வளவுதான். இதற்கு கலை, பண்பாட்டுக்கழகம் அனுசரனையாக இருந்தது. ஏறக்குறைய இந்த 6 வருடங்களில் 50நூல்கள் வெளிவந்திருக்கின்றன. பல அரங்காற்றுகைகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. எந்த வசதி வாய்ப்பும் அற்று இருந்த நிலையில் கலை வடிவங்களில் மாற்றுவடிவங்களை தேடினோம். ஏற்கனவே இருந்த வீதி நாடகங்களை நவீனப்படுத்தினோம்.

ஆனால் இலக்கியம் எங்கெங்கெல்லாம் மையம் கொண்டிருக்கின்றது என்பது பற்றி நான் அலட்டிக்கொள்ள விரும்பவில்லை. இப்படிச் சொல்பவர்கள் இலக்கியம் முதலில் யாழ்ப்பாணத்தில் மையம் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள் பிறகு அது மட்டக்களப்பிற்கு சென்றுவிட்டதாகச் சொன்னார்கள். பிறகு முஸ்லீம் எழுத்தாளர்களிடம் மையம் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் நான் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த விமர்சகர்களும், கருத்துரையாளர்களும், மதிப்பீட்டாளர்களும் தேவை கருதிச் சொல்கின்றார்களோ என்ற ஐயப்பாடு எனக்குள் எழுகிறது. இப்படியானவர்கள் தாங்கள் தரித்து நிற்கும் இடத்தையும் இணைத்துக்கொண்டு சொல்கின்றார்களோ! என்ற எண்ணமும் எனக்குள் எழுகிறது. எங்கு தாங்கள் தரித்து நிற்கின்றார்களோ, எங்கு தங்கள் பஸ் தரித்து நிற்கின்றதோ அங்குதான் இலக்கியம் வியாபகம் கொண்டிருப்பதாக சொல்லுகின்ற ஒரு மரபு இன்று உருவாகிவிட்டது. இப்படிச்சொல்பவர்கள் ஒரு வேளை கொழும்புக்குச் சென்றுவிட்டால் கொழும்பில்தான் கலை, இலக்கியங்கள் வியாபகம் கொண்டிருப்பதாகச் சொல்லுவார்கள். சிலவேளை இவர்கள் மட்டக்களப்பிற்கு வரநேர்ந்துவிட்டால் மட்டக்களப்பில் கலை இலக்கியங்கள் பொங்கிப்பிரவகிப்பதாகச் சொல்வார்கள் இப்பொழுது வன்னியில் மையம் கொண்டிருப்பதாகச் சொல்லுன்கிறார்கள். உண்மையில் வன்னியில் இருந்த எழுத்தாளர்களும், படைப்பாளிகளும், கலைஞர்களும் தங்களுடைய காலப்பணியை சரியாக ஆற்றியிருக்கிறார்கள். போராடுகிற மக்களுக்கு ஒரு புதிய செய்தியை வழங்கவேண்டிய தேவை அந்த படைப்பாளிகளுக்கும், கலைஞர்களுக்கும் ஏற்பட்டது. மக்கள் சந்தோஷப்படும்போது அதைப்பாடினார்கள், ஆடினார்கள். மக்கள் துயரப்படும்போது அதைப்பேசினார்கள் எழுதினார்கள். அந்த ஆடலும், பாடலும், எழுத்தும் வாசல்களைத்திறந்து வெளியில் வரும்போது பிரம்மிப்பைக் கொடுக்கிறது.

வன்னியில்மையம் கொண்டிருந்த எழுத்தாளர்களில் கணிசமானவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். இதில் மூத்த எழுத்தாளர்கள், முன்னுக்கு வந்து கொண்டிருந்த் எழுத்தாளர்கள், என பலரும் அடங்குவர் இதேபோன்று வன்னியில் இருந்த எழுத்தாளர்கள், பிரமாவட்டங்களைச் சேர்ந்த் எழுத்தாளர்கள் என சுமார் 300பேர் கொண்ட அணியொன்று இயங்குநிலையில் இருந்தது. ஏறக்குறைய 100 படைப்பாளிகள் இன்றும் வன்னியில் தரித்து நிற்கின்றார்கள். பல்வேறு கஸ்டங்களுக்கு மத்தியில் எமது படைப்புக்களை நூல்களாக்கினோம். பாடல்களை ஒலி நாடாக்களாக்கினோம், இசைத்தட்டுக்களாக்கினோம்(சி.டி) இந்தப்படைப்பாளிகளும் கலைஞர்களும் எந்தவிதமான பெயருக்காகவோ, சுயமுன்னேற்றத்திற்காகாவோ படைக்கவில்லை. போராட்டத்திற்காகவே எல்லாவற்றையும் பரித்தியாகம் செய்தார்கள். உண்மையில் போராட்டம் உச்சமாக நடைபெற்றுக்கொண்டிருந்த அந்த 6வருடங்கள் எங்களைப்பற்றி யாரும் பேசவில்லை. சுருங்கச் சொன்னால் ஜெயசிகுறு என்ற இராணுவ நடவடிக்கை முறியடிக்கப்படும் வரை எங்களைப்பற்றியோ எங்கள் படைப்புக்களைப்பற்றியோ ஒரு வரிகூட உச்சரிக்கப்படவில்லை இன்று தடைகளை தாண்டி வெளியில் வந்த பின்னா எல்லோரும் உறவாகிவிட்டார்கள் பரவாயில்லை. எனினும் எங்களுடைய எழுத்துக்கள் ஓரளவு வெளியில் தெரிந்தளவிற்கு எங்கள் அரங்காற்றுகைகள், வீதிநாடகங்கள, இசைக்கலைஞர்களின் ஆளுமைகள் வெளித் தெரியவில்லை வன்னியின் வலிமை, வலிகள், மக்களின் சோகங்கள், நிமிர்ந்த நிலைகள் எல்லாவற்றையும் உள்ளடக்கிய அந்தப்படைப்புகள் எல்லாம் முழுமையாக வரும் பொழுது உலகமே வியக்கும் என்பதில் சந்தேகமில்லை.

சிலர் சொல்கிறார்கள் ஈழத்தமிழர் தேசிய விடுதலைப்போராட்டம் பாய்ச்சல் கொண்டளவிற்கு ஈழத்து கலை இலக்கியங்கள் படைக்கப்படவில்லை என்கிறார்கள். கொழும்பிலிருக்கும் ஒரு மனிதர் சொன்னதாக பத்திரிகைகளின் வாயிலாக அறிந்தேன், பாவம் அவருக்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபங்கள் அவருக்கு வன்னியும் தெரியாது வன்னியிலிருந்து எழுந்த படைப்புக்களையும் தெரியாது. அங்கிருந்த படைப்புக்களின் சத்திய தரிசனமும் தெரியாது அவர் அறியவுமில்லை, அறிய முயலவுமில்லை. அவர் கருத்து சொல்லிவிட்டு போகிறார். ஏனென்றால் வன்னியில் நல்ல படைப்புக்கள் வந்துவிட்டதென்று சொன்னால் அவர் அதில் அகப்படாமல் விட்டுவிடுவாரே! அதனால் ஒன்றை மொழியில் பேசிவிட்டு போகிறார்கள். அதாவது தங்களை விட்டுவிட்டு இலக்கியத்தைப்பார்க்க சிலர் தயாராக இல்லை. உண்மையில் வன்னியில் உயரிய இலக்கியங்கள் தோற்றியிருக்கின்றன. அறியாதவர்கள் அறியாமல் புலம்புவதையிட்டு நாம் அலட்டிக்கொள்ள முடியாது. தமிழர் தேசிய விடுதலைப்போராட்டம் கலை, இலக்கிய ரீதியாகவும் சமாந்திரமான பாய்ச்சலுடன்தான் நகர்ந்து கொண்டிருக்கின்றது. யார் இருந்தாலும், இல்லாவிட்டாலும் இந்த சமாந்திர நிலை இருந்து கொண்டுதான் இருக்கும்.இந்தப்படைப்புக்கள் ஒரு ரஷ்ய இலக்கியம் போன்று அல்லது வியட்நாமிய இலக்கியம் போன்று, லத்தீன், அமெரிக்க இலக்கியம் போன்று, சீன இலக்கியம் போன்று ஒரு காலத்தில் பேசப்படும் என்பதில் எங்களுக்கு நம்பிக்கையுண்டு. ஏனெனில் போரின் இலக்கியங்களுக்கு எப்பொழுதுமே ஒரு தேவையிருக்கிறது. போரின் இலக்கியங்கள் உலகப்பொதுவானது. இதனால்தான் ரஷ்ய இலக்கியங்களை எங்களுடைய இலக்கியங்களாகவும் எங்களால் பார்க்கமுடிகின்றது. ஆனால் இந்திய,தென்னிந்திய இலக்கியப்படைப்புக்களை அப்படி நாம் பார்ப்பதில்லை. எனவே எங்களுடைய தேசிய விடுதலைப்போராட்டம் எப்படி இன்னொரு போராடும் தேசத்திற்குவழிகாட்டுமோ அப்படி எங்களுடைய கலை, இலக்கியங்களும் இன்னொரு போராடும் தேசத்தின் கலை இலக்கியங்களுக்கும் முன்னுதாரணமாகத் திகழும் என்பதில் சந்தேகமில்லை. எனவே வன்னிப்படைப்புக்கள் ஒரு காலத்தில் பேசப்படும் என்பதில் சந்தேகமில்லை.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# எதிர்வு

-நந்தினி சேவியர் -

அவனது மனைவியின் அப்புச்சி சடுதியாய் இறந்துபோனார். ஒரு காலம் தனிக்காட்டு ராஜாவாக பட்டினத்தில் உலாவி வந்த அவர் நொந்துபட்டு ஏக்கத்துடன் இறந்துபோனார். பல தடவைகள் நெருக்குதல் வந்த போது பிடிவாதத்துடன் பெயர மறுத்த அவர் ஒருவித நிர்ப்பந்தமும் இல்லாமல் அவனது மனைவியுடனும் அவனுடனும் புறப்பட்டு கால்நடையாக இரவோடு இரவாக வெளியேறி நிலாவெளி கள்ளம்பத்தை திரியாய் ஊடாக புடவைககட்டுக்கு நடந்து வள்ளமேறி முல்லைத்தீவுக்கு ஊடாக கொம்படிவெளி தாண்டி தனது ஆச்சியின் ஊருக்கு வந்திருந்தார்.

இருளின் பெருக்கு வற்றி வரும் அதிகாலைப்பொழுதில் அது நிகழ்ந்தது. ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த அவனை பெரும் குரலெடுத்து அழுதபடி அவனது மனைவி உலுப்பி எழுப்பிய போதுதான் அவனுக்கு அது புரிந்தது.

பொறுப்பு என வந்த பின் அவன் எதிர்கொள்ளும் முதல் மரணத்தையும் அதன் சுமையைத்தாங்கிக் கொள்ளும் கடப்பாட்டையும் அவன் இருள் விலகாக் காலையில் எதிர்வு கொண்டான்.

அரச உத்தியோகம் எனும் வெறும் கௌரவத்தை, நிகழ்ந்து விட்ட அனர்த்தங்கள் துச்சமாக்கிவிட்ட சூழல். சடங்குகள், சம்பிரதாயங்கள், எல்லாமே.. தலைகீழாகப் புரட்டிவிடப்பட்டு வாழ்வு இன்னதுதான் என அடையாளப் படுத்தப்படாது வீம்புடன் கழியும் கணங்கள்.

அவனது அப்புவின் மரண நிகழ்வுகளை இவன் நினைத்துப்பார்த்தான். யாழ்ப்பாணத்தின் ஒரு குக்கிராமத்தில் சில கத்தோலிக்கக் குடும்பங்கள். அவர்களுக்கென அமைக்கப்பட்ட ஒரு சிற்றாலயம். வீட்டிலிருந்து எட்டிப்பார்த்தால் தெரியும் ஒரு நாவல் மரங்கள் சூழப்பெற்ற மாரிகாலத்தவளைகள் கூச்சலிடும் தூரவுடன் கூடிய சவக்காலை.

ஆயினும் பழபழக்கும் குஞ்சத்துடன் சிலுவை பொறிக்கப்பட்ட வாசனை வீசும் மஞ்சள் நிறச் சவப்பெட்டி, அதனுடன் அப்புவைச் சுமந்து செல்ல சுற்றிலும் கரு நிறத்துறுப்பாளினால் மூடப்பெற்ற.. சாம்பல் குதிரை பூட்டிய பிரேத வண்டில்.. இடிமேளம் என அழைக்கப்பட்ட பாண்ட் வாத்தியம்....

அவன் தன்னுள் சிரித்துக்கொண்டான். எவ்வளவு ஆடம்பரம்.. எவ்வளவு வீம்புத்தனம்.

அப்புவின் அப்பு... தனது குடுமியை இறுக முடிந்தபடி மிருதங்கத்திற்கு வார் போடுவதை பக்கத்தில் குந்தியிருந்தபடி அவனும் அவனது அண்ணனும் பார்த்துக்கொண்டிருப்பார்கள்.... மத்தளத்தை மூட்டி முடிந்ததும்... அவர் விரல்கள் மத்தளத்தில் மீட்டும் ஒலியின்லாவகம்... அதேபோல் ஆர்மோனியப்பெட்டியில் இளையும் விரல்களின் நளினம்... அண்ணாவிச்செல்லப்பு செல்லப்புதான்.

ஒருகாலம் பேரன் அவன் ஒரு நாட்டுக் கூத்துக்காரனாக வருவான் என அடிக்கடி அப்பப்பு கூறிக்கொண்டிருந்தார்... அப்பப்புவின் மரணத்துடன்... அவர் விளையாடிய நாட்டுக் கூத்துக்களும் ஆர்மோனியப்பெட்டியும்... மிருதங்கமும்.... இல்லாது போனது போலவே... இவன் பற்றிய எதிர்வும் இல்லாது போய்விட்டது.

அப்பப்புவின் மரணவீட்டில் பழையகால எக்ஸ்மொடல் காரொன்றில் இடி மேளம் வந்து இறங்கியது.

காரின் டிக்கியில் இருந்து பாரிய ரம் ஒன்றும் சின்ன ரம் ஒன்றும் இறக்கப்பட்டது. அதனை வாசிக்கும் பொலிஸ் குரோப்கார கட்டை மனிதரும், குரங்குமுஞ்சி சின்ன ரம்மரும்.. இறங்கினார்கள்...

கையில் எக்காளம் எனும் டிரெம்பொட்டைபிடித்தபடி வாய் வட்டமாக வெளிறிய நெடுத்த ஒரு மனிதனும் கிளரினட்கார வயோதிபரும் இறங்கினார்கள்...

இடிமேளம் முழங்க ஆரம்பித்தது.

எக்காள மனிதன் இவனிடம் தனது கையில் பச்சை குத்தி இருந்த சிலுவையில் அறையப்பட்ட இயேசுநாதரைக் காட்டி இறந்தவர் இந்த மாதமா என்று கேட்டு "அன்புருவாய், என்மடியில் ஆசையுடன் வந்துதித்த" என்ற பாடலை வாசிக்கத்துவங்கியதும் இவனுக்கு ஞாபகத்தில் இருந்தது.

இலுப்பைமரச் சந்தியைத் தாண்டி வயல்வெளிக்குமப்பால் இடிமேளம் அதிர்ந்து ஒலிக்கத்தொடங்கி.... பாடல் முடிய நின்றது.

அந்த இடிமேளக்காரர்களையே இவன் முதல் முதல் முழுக்கால் சட்டையுடனும் சேட்டுடனும் கண்டிருக்கிறான்.







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாழ்ப்பாணத்தின் பெரிய கோவில் சுற்றாடலில் உள்ள ஒரு பகுதியில் அவர்கள் பல காலம் இருந்து வந்ததை அவன் பின்னர் அறிந்து கொண்டான்.

கண்கள் இரத்தம்போல் சிவந்து போகும் வண்ணம் அவர்களுக்கு அப்பு வீட்டின் கோடிப்புறம் கவனிப்புச் செய்தாலும் முகத்திலோ நடவடிக்கையிலோ எதுவித பதகளிப்பும் காட்டாத மிக நிதானமான வாத்தியக்காரர்கள் அவர்கள்.

சிவப்பு நிற கன்வஸ்சப்பாத்து கிளிந்துபோன காக்கி உடுப்பு.... வாசிப்பு மட்டும் நேர்த்தி, மிகமிக நேர்த்தி

இயேசு நேசிக்கிறார்... இயேசு நேசிக்கிறார் நீசனான உன்னையும் அதிகமாய் இயேசு நேசிக்கிறார்.

ஆட்கள் உள்வரும் நேரம்... சடுதியென இடிமேளம் முழங்கும்... பிறகு சன்னமாக கீழ்ஸ்தாயியில்... சுருங்கும்...

இலுப்பை மரத்திற்குக் கீழ் ஒப்பாரிகளை தவிர்த்து இவர்கள் விளையாடிக்கொண்டிருக்கும் நேரம்... குழம்போசை கேட்க கல்லு நெரிசலில் சக்கரம் விரூடன் சுழல பிரேதவண்டில் கிராமத்துள் நுழைந்ததையும்... ஆசனத்தட்டில்.. மெல்லிய ஒரு நரைத்தலை கிழவர் இருந்து வந்ததையும் இவன் அவதானித்தான்.

அப்போது எல்லாம் வண்டிலும் குதிரையும்... வேடிக்கைப்பொருளாகவே அவனுக்கும் அவனது நண்பர்களுக்கும் இருந்தது.

விபரம் புரிபட்ட காலத்தில் கிறிஸ்ரோபர் லீயின் டிரெகுலாப் படங்கள்... பழைய பிரேத வண்டியையும் குதிரையையும் இவனுக்கு நினைவூட்டி வந்தன.

அந்தக்காலம் போய் பின்னர் பிரேத வாகனங்களும் அந்தியகால சேவை நிலையங்களும்... வந்து... இடிமேளம் இல்லாது போய்... சுதிமரியான் காலம் வந்து... அந்தக் குரங்குமூஞ்சி சிறிய டிரம்மர் சின்னக்கடைத்தெருவில் பிச்சையெடுத்துக்கொண்டு திரிந்ததமையை அவன் அறிவான்.

அவனுடைய அப்புவின் அப்புவின் தங்கைதான் அவனுடைய மாமனாரின் ஆச்சி...., ஆச்சியின் மரணம் பற்றி அவனுக்கு தெரியாது. ஆனால் அப்பப்புவின் பிரேதம்.. தான் வரும் வரை காத்து வைத்திருக்காமல் அடக்கம்பண்ணப்பட்டு விட்டதாக கூறி வந்த உடனேயே சண்டைபோட்டு கஞ்சி தண்ணிக்கு நிற்காமல் ஆச்சி புறப்பட்டுப்போனமை இவனுக்கு தெரியும்.

பின்னர் வந்த மரணங்களில் அந்த இடிமேளத்தையும் பிரேதவண்டியையும் அனேக தடவைகள் இவன் கண்டிருக்கிறான்.

ஆனால் பொன்னம்மானின் மரணம் இவனுக்கு ஒரு புதுமையாக இருந்தது. பொன்னம்மானின் மரணத்தை தொடர்ந்து அந்தக்கிராமம் சிறைவைக்கப்பட்டமையும்... அவனுக்கு அப்போது விளங்கிக் கொள்ளமுடியாத ஒரு அனுபவமாக இருந்தது.

பல நாட்கள் அவனும் அவனது உறவுக்காரப் பையன்களும் பாடசாலைக்குச் செல்லவில்லை.

கிழக்கின் எல்லையோடு தெற்கு வடக்கு மேற்கென.. காவலில் கட்டுண்டு கிடந்தது கிராமம்.

சனிட்டரி இன்ஸ்பெக்டர்களும் பொலிசும்.. எல்லையில் விழித்திருந்து இவர்களை கண்காணித்துக் கொண்டிருந்தார்கள்.

அவனது அப்புவும் மாமனும் மட்டுமே பொன்னம்மானை அடக்கம்பண்ண சவக்காலைக்குப்போனார்கள்.

உறவுகள் எல்லாம் வேலிகளின் ஓரம் குந்தியிருந்து ஓலமிட... மர்மமான சவ அடக்கமாக அது நிகழ்ந்தது.

சுற்றிலும் சுண்ணாம்பு நிறைக்கப்பட்ட சாக்குகளால் பொதியப்பட்டு பொன்னம்மான் அடக்கம் செய்யப்பட்டதாக அப்பு பின்னர் ஒரு சமையம் கூறியமை அவனுக்கு விளக்கமாகியது.

இடிமேளமோ... கறுப்புப்போர்வை... பிரேதவண்டிலோ... பிரிஸ்டம் பெருத்த சாம்பல் குதிரையோ இல்லாது அந்த மரண நிகழ்வு நடந்து முடிந்தது. நாட்களின் நகர்வில் ஊரின் மரணச்சடங்குகள் பலவகைத்தனவாக நிகழ்ந்து முடிந்து போயிருந்தன.

ஊர்கள்... சிறையிடப்பட்டு தெருக்கள்.... வீதிகளில் மரங்கள் முளைத்து வாழ்விடங்கள்.... காடுகளாகியமையும் பயணங்கள்.. நடையாகவும்... சைக்கிள்களிலுமாக சாத்தியப்பட்டுப்போன காலத்தில்... மாமனின் இந்த மரணநிகழ்வு...

அனுங்கும் சிறு விளக்கின் ஒளியில்.. அயல் மனிதர் சிலரின் வருகையில் அவன் முற்றத்திற்குவந்தான்.

தொலைவில் சவுக்கு மரங்களுக்கும் வெண்மணற்பரப்புக்குமப்பால் கிழக்கு புலரும் அறிகுறி

" பந்தல் போட வேணும்..... ஆக்களுக்கு அறிவிக்க வேணும்....என்ன.. செய்ய..."

அக்கரையோடு... விசாரிக்கும் குரல்கள்... .......!

மைத்துனனும் மாமியும் அவனருகில் நெருங்கிவர... அவன் கேட்டான்..

"சொந்தக்காரர் எல்லாருக்கும் சொல்ல வேணுமோ..? சொல்லத்தான் வேணும்."

கேள்வியோடு பதிலும் குரலில் தொனித்தது.

மச்சான் ஒண்டும் செய்யத்தேவையில்லை... வாற ஆக்களைக்கவனிச்சா போதும்"

மாமி தயங்க...அவன் உறுதியானான்....

"ஒண்டுக்கும் யோசிக்கத்தேவையில்லை இது என்ரை ஊர் இது என்ரை கடமை...." அவன் துரிதமாகினான் மனைவியைப்பார்க்க அவனுக்கு பாவமாக இருந்தது. மகன் பிறந்து 50வதுநாள்

"ஒண்டுக்கும் யோசிக்க வேண்டாம்... நாங்கள் அகதிகள்தான் ஆனால்.... எல்லாம் நடக்கும்...."

ஏதேனும் காசு தேவைப்படுமோ.....

பக்கத்துவீட்டு சின்னராசா அவனிடம் மெதுவாகக் கேட்டார்.... அவரது கையில் ஒரு காசுச் சுருள்..."இல்லை... தேவைப்பட்டால் நான் கேட்பன்... நன்றி...."

அவன் தீர்க்கமாக அவருக்கு பதிலுரைத்தான். மகன் பிறந்த செய்தி கிடைத்து புறப்பட்டு ஒரு வாரம் முந்தியே அவன் துறைமுக நகரத்திலிருந்து வந்திருந்தான். மனைவியையும்... மாமன் மாமியையும் மனைவியின் சகோதரியையும் பிள்ளைகளையும் மைத்துனனையும் ஊரில் விட்டு.... தனியே திரும்பி... ஒரு எட்டு ஒன பது மாதங்கள் கழித்து மகன் பிறந்த செய்தி கேட்டு அவன் ஊர் வந்திருந்தான். மழை கொட்டும் ஒரு வெசாக் மாத காலத்தில் குழந்தையை குளிக்க வார்க்கும் பேசன்.... மற்றும் ஏராளம் சாமான்களுடன் வவுனியா வந்து கால்நடையாக தாண்டிக்குளம் கடந்து சாந்த சோலையூடாக... தலைச் சுமையோடு அவன் நடந்து வந்தான். சூப்பி ஊதும் ஒரு சிவப்பு நிற மோட்டார் சைக்கிள் காரனுடன் பேரம்பேசி... பூனகரி.... சங்குப்பிட்டியூடாக.... நள்ளிரவு கடந்து... முதற்கோழி கூவும் நேரம்.... சரசாலையான் காட்டைத் தாண்டி கிழக்கூரின்... எல்லைப்புறக்கிராமத்துக்கு அவன் வந்திருந்தான்

தனது குழந்தையின் முகத்தை....தனது மனைவியை.... தனது மாமன் மாமி, மைத்துனரைக்காணவேண்டியே, ஒரு நெடும் பயணத்தை மிகுந்த சிரமத்தோடு....கடந்து அவன் ஊர்வந்தான். அவன் ஊர்வந்த அந்த இரவின் இறுதிக்கணங்களில் அவனை உடுக்கொலியும்... காத்தான் கூத்துப் பாடல்களுமே வரவேற்றன அடுத்து வரும் நாட்களில் ஒருகூத்து...மேடையேறப்பட விருப்பதை அவன் உணர்ந்துகொண்டான்.

மாமனாரின் மரணம் நிகழ்ந்த சமயம்... அழுகையின் சன்னஒலி கேட்டு...கூத்தாடும் கூத்துப்பழகும்... அயலவர்கள் தான் முதலில் உள் நுழைந்தார்கள்... அவர்களே பந்தல் போட்டு உதவ முன்வந்தார்கள்....விடிவதற்கு முன்னர்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பலவிடயங்கள் முடியவேண்டியிருந்தது.

"ஆராவது ஒரு மோட்டார்ச் சைக்கிள்காரனைப்பிடித்து எண்ணை அடிச்சால்.. விடிய ஆறுமணிக்கு முன்னம்... யாழ்ப்பாணம்- ஆனைக்கோட்டை எல்லாம் தகவல் சொல்லி முடிக்கலாம்"

சின்னராசாவே அந்த விசயத்தையும் சொன்னர்.

"ராசன் அல்லது நாதன் வந்தால் அவங்களே அதைச் செய்வாங்கள் உங்கடை மகனை ஒருக்கால் சைக்கிளை அனுப்பி நாதனை உடனடியாய் வரச்சொல்லுங்கோ விடி விடியெண்ணப் போகவேணும்"

அதை நான் செய்யிறன்"

பாக்கியராசா விடயத்தைப் பொறுப்பெடுத்தார். கூத்துப்பழகிய பின் நூர்ந்துவிட்ட பெற்றோமாக்ஸ்... திரும்பக்கொழுத்தப்பட்டு... கொண்டு வருவது வேலி இடுக்குக்குள்ளால் வெளிச்சத்தின் நகர்வில் தெரிந்தது.

"அங்கை செல்லத்தம்பி பெற்றோல் மாக்சோடை வாறான்..... சண்முகத்தார் வீட்டையும் இன்னொரு பெற்றோல் மாக்ஸ் இருக்கு எடுக்கலாம்..................மான்றில் உடைஞ்சு கிடந்தது... இனி விடியத்தான் கடையிலே வாங்கவேணும் இப்ப இது போதும்....."

கடைசிப்புகையை இழுத்து குறையை வீசிவிட்டு கிணற்றடிப்பக்கம் நடந்த தங்கப்பழம் துலாக் கொடியை தாழ்த்தி தண்ணீரள்ளி முகத்ததைக் கழுவினான். பக்கத்து வீடுகளில் இருந்து வாங்குகளும் கதிரைகளுமாக ஆசனங்கள் பலது சேர்ந்து விட அவன் மட்டும் பெரும் யோசனையோடு அங்கு மிங்கும் அலைந்துகொண்டிருந்தான். விடியலுக்கு.....நேரம்.. இருந்தது.

"பெட்டி எடுக்கவேணும் சுவாமியாருக்குச் சொல்லி சவக்காலையில் அடக்க நிலத்துக்கு அனுமதி பெறவேணும்... பிரேதம் எடுத்தபின்னரான கஞ்சி தண்ணிக்கு உணவுக்கு எற்பாடு பண்ணவேண்டும்...

மகனின் பிறப்பிற்கு ஆசையோடு வாங்கிய நகை இருந்தது.... அவனின் குறிப்பறிந்து மனைவி நடந்து கொண்டாள்

தங்கப்பழம்.... அவன்... இருவரும் வெளிக்கிட ஆயத்தமாக... வெளியில் நாதனின் மோட்டார் சைக்கிள் வரும் ஓசை,

சொல்ல வேண்டியவர்களின்பட்டியலை இவன் ஒப்புவித்தான்

"நல்லூர் ஆனைக்கோட்டை, சுழிபுரம்... முதலிலை... பிறகுதான் மட்டுவில்... மீசாலை... ஒருத்தரையும் தவறவிட வேண்டாம் எண்ணெயை அடி பிறகு கணக்கைச் சொல்லு..."

தம்பியார் நாதனின் கையில் ஐநூறு ரூபாய் தாளொன்றைச் செருகினான்.

"வேண்டாம் பிறகு பார்ப்போம்" என்றபடி இருளுக்குள் நாதனும் மோட்டார் சைக்கிளும் மறைய, பெரிய இரும்புக்கரியல் சைக்கிளுடன் தங்கப்பழத்தைப் பின் தொடர்ந்து ஒழுங்கைக்குள் இறங்கினான் அவன்.

சோழகம் வேகமாக அடித்து, மணல் வீசி அடங்கியது. "பெட்டி எடுக்க மந்திகைக்குத்தான் போகவேணும்..... பெட்டிக்கடைக்காரன்.. எந்த நேரமும் திறந்திருப்பான்"

தங்கப்பழம் சாதாரணமாக கூறியபடி பெடலை மிதிக்க அவன் பின்தங்கி மெதுவாக தொடர்ந்தான் ரோட்டின் பள்ளங்கள் தங்கப்பழத்திற்கு அத்துப்படி....

"பஸ் ஓட்டம் குறைவு.... சைக்கிளைதான் ஆக்கள் வருவினம்" வல்லை வெளி... காத்து அதிகம், வெய்யிலும் சரியான கஸ்டமாய்த்தான் இருக்கும்"

தங்கப்பழமே கதைத்தபடி வந்தான். தும்பளை தாண்டி தொம்மையப்பர் கோவில் வாசலுக்கு அவர்கள் வந்தபோது காலை ஆராதனைக்கு ஆயத்தம் நடந்துகொண்டிருந்தது.

கடல்புரம் புள்ளியிடும் சூழ்லாம்பு வெளிச்சத்தில் தொலை தூரம்... சூடைவலைக் கட்டுமரங்கள்.....

சங்கிலித்தாம்..... திருந்தாதிசொல்லி முடிக்க..... அவன் கோவிலுக்குள் நுழைந்தான்.

"நாங்கள்.... அகதியாக கற்கோவளத்திலை வந்து இருக்கிறம்... இரவு என்னுடைய மாமனார் செத்துப்போனார்.. அடக்கம் செய்யவேணும்... பூசையும் வைக்க வேணும்..... ..."

அவன் நேரடியாக விசயத்திற்கு வந்தான்...

நிதானமாகக் கேட்ட சங்கிலித்தாம்

"குரிசு மணி தரலாம்..... எத்தினை மணிக்கு அடக்கம் எண்டால் எல்லா ஆயத்தமும் நாங்க செய்யிறம்... கிடங்குவெட்ட ஆக்களை அனுப்பினால் போதும்.."

அவன் சற்று யோசித்து

"மூண்டரை மணிக்கு" என்றான்

கற்கோவளத்திலிருந்து மூன்று மைல் நடப்பதற்கு ஒரு மணித்தியாலம் தேவை இரண்டரைக்கு எடுத்தாலும் மூண்டரைக்கு வந்து விடலாம்....

அவனது கணக்குச் சரியாக இருப்பதை தங்கப்பழம்.... கவனித்துக் கொண்டான்

"சுவாமியரைச் சந்திக்க வேணுமோ..."

"இல்லை நானெல்லாம் சொல்லுவன் நீங்கள் உங்கடை விசயங்களைப் பாருங்கோ

கதையை சட்டென முடித்த சங்கிலித்தாம் பெற்றோல் மாக்ஸ் வெளிச்சத்தில் செபப்புத்தகத்தை விரித்து செபமாலைத்தியானத்தை தொடங்கினார்.

"இன்னும் விடியேல்லை மாக்கற்றுக்குச் சாமான் வர... ஏழு எட்டுமணியாகும்..... இப்ப என்ன செய்யிறது"

"முதல்லை ஒரு பிளேன்ரியும் ஏதாவது புகைத்தலும் எடுப்பம் பிறகு மற்றதைப் பாப்பம்..."

சைக்கிளைத் தள்ளிக்கொண்டு கடற்கரை வீதிக்கு வந்தான் அவன். கடல் சலனமற்றுக்கிடந்தது

வாடையில் குமுறும் அலையெறியும் பாக்குநீரிணை.. சோகத்தில்... சோம்பிக்கிடந்தது. இந்த வீதியும்.. அவனது கல்லூரி நண்பர்களது வீடுகளும்... உப்புக்காற்றும், கடற்குளிப்பும் இவனுக்கு ஞாபகம் வந்தது.

"மரியாம்பிள்ளை மாஸ்ரர்... பாட்டுக்கார அன்ன நாதன்... கையெழுத்துப் பத்திரிகை நடத்திய இருதயதாஸ்...

ரோட்டில் சைக்கிள் மிதிக்க மிதிக்க ஒவ்வொருவரது நினைவும்

" பொம்பர் வராவிட்டால்... எல்லாம் சரியாய் நடக்கும்...." தங்கப்பழமே... அந்த விடயத்தை நினைவூட்டினான்.

பழைய தபாற்கந்தோர் சந்தியில் திரும்பி... ரேவடிக்குச் செல்லாது தும்பளை ரோட்டுக்கு அவர்கள் வந்தபோதுவிடியத் தொடங்கியிருந்தது.

சாந்திகபேயில் ஒவ்வொருபிளேன்ரியும் பிரிஸ்டலும் வாங்கி ஊதியபடி பஸ்டிப்போவின் எதிரில் முருகானந்தம் டிஸ்பென்சரி வாசலில் அவன் குந்தினான். சந்தைக்குள் வெற்றிலைக்கடைக்காரரும்... பலகாரக்காரர்களும்.... மண்ணெண் ணைக் கடைகளும் பரபரப்பாகிக்கொண்டிருக்க.... ஒருவிதமான காலைப்பரபரப்பு.. சங்குப்பிட்டி மோட்டார் சைக்கிள்களும்... மினிவான்களும் தட்டிவான்களும்.... மண்ணெண்ணைப் புகையைக் கக்கியபடி புறப்பட ஆயத்தப்பட..... அவன் காத்திருந்தான்.

"காய்கறி, தேங்காய்,.. வெற்றிலைப்பாக்கு.... தூள்... உப்பு... விறகு.... பீடி... உரபாக் ஒன்றில் எல்லாம் கட்டி எடுத்து... தங்கபழத்திடம் கொடுத்தபின்னர் அவன் கூறினான்.

"வேட்டி சால்வை.... பெட்டி நானெடுத்துக் கொண்டுவாறன்... நீர் இறைச்சி அல்லது மீனை வாங்கிக்கொண்டு உடனை வீட்டை போம்... சீனி.. நிவாரணம்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எடுத்தது இருக்கு மாப்பெட்டியும் இருக்கு, தேயிலை வாங்கி உரப்பையுக்குள்ளை வைச்சிருக்கிறன்... பாண் கொஞ்சம் வாங்கினால் புள்ளை குட்டியைச் சமாளிக்கலாம் நீர் உடனை போம்.... நான் பிறகால வாறன்...".

தங்கப்பழத்தை அனுப்பிய பின் இவன் மந்திகையை நோக்கி சைக்கிளை மிதித்தான் மகனுக்காக வாங்கிய நகைகள் விற்ற பணத்தின் மீதி... கனமற்ற அவனது இதயம் போல்.. இலேசாக....

"பெட்டி... நல்ல விலையாய் இருக்கும்.... அவன் யோசித்தான் அப்புவுக்கு எடுத்தபெட்டியைப்போல இல்லாமல் நல்ல பெட்டியாய் எடுக்க வேணும்"

அவனது அப்பு இறந்தபோது அவன் கொழும்பில் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலையாக இருந்தான். எண்பத்து மூன்று கலவரங்கள் முடிந்து ஒருவித பதற்றம் நீங்கிய கொழும்பின் அதிகாலை.

ரேஸ்பேப்பர் காரனும் தெம்பிலி வண்டிலும்... சத்த மெழுப்பும் ஒரு அதிகாலை நேரம் தொலைபேசியில் அவனது அண்ணன் பேசினார்

"அப்புவுக்குக் கொடுசம் கடிமை.... உன்னைப் பார்க்க வேணுமாம் உடனைவா......."

அண்ணனின் குரல் தளதளப்பில் இவன் கேட்டான்

"எப்ப எடுக்கிறதாய் உத்தேசம்......?"

தமயன் பெரும் குரலெடுத்து தொலைபேசியில் அழுதார்.

"ஏஜென்சிகாரன் ஏமாத்தினதாலை ஒரு சதம் கூட இப்ப என்னட்டை இல்லை நீ... காசோடை உடனை வா உன்னைத்தான் நம்பியிருக்கிறன்......"

பக்கத்து அறையில் இருந்த கணக்காளரும் மனேஜரும்.. அருகில் வர இவன் குலுங்கி அழுதான்.

"நான் உடனை போகவேணும் எனக்கு காசு தேவை...."

"எவ்வளவு வேணும்.."

"ஒரு மூவாயிரம் எண்டாலும் வேணும்"

"இல்லை.. ஒரு ஐயாயிரம் தாறம் உடனை வெளிக்கிடும்.... லீவு போடும்... இப்ப யாழ்ப்பாணத்திற்கு பஸ் இருக்காது அனுராதபுரம் போய் அங்கையிருந்து வவுனியாவுக்குப் போய்த்தான் யாழ்ப்பாணம் போகவேணும்... உடனை வெளிக்கிடும்"

மால்போரோ பேக் ஒன்றில் ஒரு லோங்சையும் சேட்டையும் சாரத்தையும் திணித்தபடி அரசமரச்சந்திக்கு அவன் வர அநுராதபுர மினிபஸ் ஒன்று புறப்பட்டது.

அப்பர் பற்றிய நினைவுகள் மட்டும் மெல்லியதாய் அப்பர் குடிகாரனாக இருந்தாலும்... அவர்களை ஒரு காலமும்... கஸ்டப்படவிடவில்லை

அம்மாவின் இறப்புக்குப்பிறகே அந்தமனிதனின் அசைவியக்கம் தடைப்பட்டது. சலரோகம்... அதனைக் கவனிக்காத தன்மை கோமாவில் வீழ்த்தி இரண்டொருநாளில் மரணம்.

புறப்பட்ட மறுநாள் அதிகாலையில் அவன் ஊர் வந்தபோது அவனை எதிர்கொண்டு அழும் உறவுகளோடு அவனால் அழமுடியாதிருந்தது.

மனம் ஒரு நாள் பூராவும் இறுகி மரத்துப் போயிருந்தது.

மிகமிகச் சாதாரணமான ஒரு சப்புப்பலகைப் பெட்டியில் அந்த பெருத்த சரீரம் நீட்டிக்கிடந்ததைப் பார்த்து அவனுக்கு ஒருவிதமான கூச்சம் கூட ஏற்பட்டது.

"அப்புவுக்கு ஒரு நல்ல பெட்டி கூட எடுக்கவில்லை..."

அவனுக்கு அண்ணனில் ஆத்திரம் வந்தாலும் மூழியாக நிற்கும் அண்ணி பிள்ளைகளை பார்த்து ஆத்திரத்தை அடக்கிக்கொண்டான்.

"தம்பி.. என்ன செய்ய காசு கொண்டு வந்தனிதானே...."

பரிதாபமாகப் பார்க்கும் அண்ணனின் கையில் மூவாயிரம் ரூபாயைத் அவன் திணித்தான்....

அதன் பிறகே... எல்லாம் நடந்து முடிந்தது. கடற்கரைவீதி பாவனையற்று கோவிலே புலம் பெயர்ந்து வந்துவிட்ட பழங்கோவிலடிச் சவுக்காலை போகும் வரை அவன் அழவேயில்லை கிடங்குக்குள் அப்புவின் உடல் பெட்டியுடன் கீழ் இறங்கும்போது உள்மனப்பாரம் உடைந்து அவன் கதறினான்.

"ஐயோ என்ரை அப்பு...."

அவனது அழுகை அடங்க நெடுநேரம் எடுத்தது.

அப்புவிற்கு நல்ல பெட்டி ஒன்றை எடுக்கமுடியாத சோகமும் அதனோடு சேர அவன் நெடுநேரம் அழுதான்.

மாமனுக்கு ஒரு நல்ல பெட்டி எடுக்கவேண்டும்.... என்ற எண்ணம் இதனாலேயே அவனுள் எழுந்தது.

நல்ல பெட்டி... நாலு.... அல்லது ஐயாயிரம்....அதற்கான பணம் ..? அவன் எதிர்பார்த்தபடி நல்ல பெட்டி எதுவும் விலைக்கேற்றபடி கிடைக்கவில்லை.

ஒரு பச்சை நிறச்சாதாரண பெட்டி..

இரும்புக்கரியல் சைக்கிளில் எடுத்தவேட்டி சால்வையை பெட்டியுள் மூடி பக்கவாட்டில் அதனை வைத்துக் கட்டினான்

ஏதோ ஒரு விழாவுக்காக நாட்டப்பட்ட வீதி மருங்கு கம்பங்களுக்குள்ளால் பெட்டியுடன் ஓடுவது சிரமமாக இருந்தது. பல இடங்களில் அவன் சைக்கிளில் இருந்து இறங்கி உருட்டியபடி நடந்தான்.

ஆனை விழுந்தான் கிளைப்பனைச் சந்தி வரும் வரையிருந்த சிரமம் பின்னர்.. நீங்கியது சோழகம் தள்ளிச் செல்ல மிக நிதானமாக அவன் பெட்டியுடன் சைக்கிள் ஓடினான்.

வெய்யில் ஏறிவந்தது பசி வேறு, களைப்போடு வேலியின் சரிவுக்கூடாக அவன் வீட்டுக்குள் நுழைந்தான்.

எல்லாம் நல்லபடியாக செய்யப்பட்டிருந்தது. முன்புறம் சிறிய பந்தல், அடுக்கப்பட்ட கதிரைகள்... கூத்துப்பழகும் பெடியள்... பாக்கியராசா... தங்கப்பழம்... சின்னராசா.... எல்லோரும் அவனை.. கனிவோடு வரவேற்க...

" ராசனையும் இரண்டு பேரையும்... கிடங்கு வெட்ட அனுப்பியிருக்கு.. எல்லாம் செய்திருக்கிறம்.... சமையல் பக்கத்து வீட்டிலை ஒழுங்கு... செய்தாச்சு.. வேறை என்ன ...?"

" ஆக்கள் வரத்தொடங்கியிட்டினம்... நாதன் எல்லா இடமும் சொல்லியாச்சு எண்டு சொன்னான் இப்பதான் போறான்.. பெண்சாதிக்காரியை ஏத்திக்கொண்டு வாறதாம்..." பாக்கியராசா கிட்ட வந்து அவனிடம் சொல்ல

" குளிப்பாட்டி வேட்டி சால்வை உடுத்து பெட்டிக்குள்ளை வைக்கிறவேலையைப் பாருங்கோ குரிசு மணி.... இப்ப வந்திடும்... நாதன் வரயிக்கை எடுத்து வாறனென்டு சொன்னவர்.."

தங்கப்பழம் அவசரப்பட பாக்கியராசா உதவிக்கு இரண்டுபேரை கூப்பிட்டபடி ஆயத்தமாகினார்.

அவனுக்கு பசியோடு தேநீர் தாகமும் ஏற்பட்டது. மச்சான் பந்தலின் கீழ்... அசையாத மனிதனாய் சலனமற்று மனைவியின் அன்ரிஅம்மா அவனை பின்புறம் அழைத்துச்சென்று சொன்னா "காலமையையும் ஒண்டும் குடிக்காமல் போனீங்களாம் பாண்கிடக்கு கொஞ்சம் தேத்தண்ணி குடியுங்கோ... அவள் பச்சைப்பிள்ளை வயித்துக்காரி குத்தி முறியிறாள்.... நீங்கள் கழைச்சுப்போனீங்கள் கொஞ்சமாய் சாப்பிடுங்கோ"

அவன் பாணில் ஒரு கடி கடித்து தேநீரைப்பருகி... சிகரெட் ஒன்றை மூட்டினான்.

வெய்யில் ஏறிவர... வானத்தில் பொம்பர் இரையும் ஓசை... மந்திகைப்புறம்... கபீர்.... தாளப் பறந்து... குத்தி மேலெழுந்தது.

குண்டோசை ஒரு கணம் நிலத்தை உலுப்பி ஓய...





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிறிதொரு கபீர் மாறி மாறி... குண்டுகள் வானிலிருந்து கீழ் இறங்க... மரணவீடு... கலங்கியது பீதி.. ஊரை வாட்டி ஓய பங்கர் தேடும்... மனங்கள்... சைக்கிளில் தொலைதூரம் இருந்து வந்தவர்கள்... ஏக்கத்தடன் நிற்க... கபீரின் இரைச்சல் மெது மெதுவாய் அடங்கியது

"எத்தனை மணிக்கு சவ அடக்கம்?' பெரும் கேள்வி பூதாகரமாய் அவனைச் சூழ்ந்தது.

"தொம்மையப்பர் கோவில் பக்கமும்... குண்டு ஒன்று விழுந்ததாம்" யாரோ சொன்னார்கள்.

" கிடங்கு வெட்டப்போன ராசனும் மற்றவர்களும்...? அவன் பதறினான். ஒழுங்கையின் எல்லை வரை அவன் நடந்தான்.

தூர சைக்கிளில் ராசனும் இன்னும் இருவரும்.. இவனுக்கு நிம்மதிப் பெருமூச்சு

"அண்ணன்.. கிடங்கு வெட்டியாச்சு... ஆனால்... போஸ்ரோபிஸ் சந்தியிலை ஒரு குண்டு விழுந்திட்டுது.. என்ன நடந்ததோ தெரியாது நாங்கள்.... கடக்கரை ரோட்டாலை வாறம்...

பரபரப்போடு சைக்கிளை விட்டுக் குதித்தான் ராசன். பொம்பரின் உறுமல் நெடுநேரம் தொலைவில்...

எங்கும் ஒரே ஏக்கம், பதற்றம், ஒப்பாரியற்று... பீரிட்டெழும் உறவுகளின் அழுகுரல் என்ன செய்வது...? வெய்யில் ஏறிவர.... கொஞ்சம் கொஞ்சமாக சைக்கிளிலும், நடையிலுமாக ஆட்கள் வரத் தொடங்கினார்கள்...

"மச்சான் என்ன செய்யிறது..... எப்படியும் இரண்டு மணிக்கு எடுக்க வேணும்.... சரிதானே அவன் மைத்துனனை அணுகி விசயத்தைக் கூறினான்.

"அப்படி எண்டால் இப்பவே செபஞ் சொல்லத் துவங்குவம்"

அன்ரி அம்மா அவசரமாக ஓடிவந்து.... அவனது மைத்துனனிடம் கூறினா

"போன பம்பர்... கொஞ்ச நேரம் கழிச்சு திரும்பி வரும்... உது அடிக்கடி நடக்கிறதுதான்.."

தங்கப்பழம் நிதானமாகக் கூறினாலும் அவனது முகத்திலும் கிலி இருந்தது.

எரியும் குத்துவிளக்கு சோழகத்தில் அடிக்கடி நூர்ந்து விட அவனது மனைவி எண்ணெய் வார்த்தபடி.... பெண்கள் நெருங்கியிருந்து செபம் சொல்லத்தொடங்கியதும் அழுகை அமுங்கி அடங்கியது.

பொழுது வேப்ப மரத்தின் உச்சியில்..... காரணிக்கம் முடிந்து பிரார்த்தனையை... அன்ரி அம்மா சொல்லத்தொடங்க... பொம்பரின்.... ஓசை... இப்போது. அது கடலின் அந்தியிலிருந்து கேட்கத்தொடங்கியது.

நிச்சயம் குத்தினால் கற்கோவளம் ஐஸ் பக்டரி பக்கம்தான்.

பிரார்த்தனைக் குரல்கள் நடுங்கத்தொடங்க...

"உலகத்தை மீட்டு இரட்சித்த சுதனாகிய சருவேசுரா." "எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்......"

வந்த சனம் கலையத்தொடங்க....... பொம்பர் தாள்ந்து... இறங்கி.... எச்சமிட்டு மேலேறியது....

மணல் காடு எகிறிக்கலங்கியது. என்ன செய்யலாம்.... எங்குபோவது....? யாரும் யாரிடமும் எதுவும் பேசவில்லை... சைக்கிள்கள்.... மெல்ல மெல்ல குறையத் தொடங்க....

" அப்புச்சி... அப்புச்சி ஐயோ என்ரை அப்புச்சி...." அவனது மனைவியும் மச்சாளும் தொண்டை கமற அழத் தொடங்கினார்கள்..... மரணவீட்டில்... ஒரு சிலர்மட்டுமே மீதமாய்...

அவன் .. அவன் தம்பி.. ராசன் .. நாதன்.. தங்கப்பழம்... பாக்கியராசா கூத்துப்பழகிய கிராமத்துப்பையன்கள்.. சின்னராசா.. மைத்துனன்... அன்ரி அம்மா, மாமி..... பிள்ளைகள்

"என்ன செய்யலாம்... பருத்தித்துறைக்கு எப்படி போறது?"

பொம்பரின் ஓசை... வானில்... வட்டம் வட்டமாக சிலநேரம்.. பதிவதும்.. உயர்வதுமாக..."

கிட்டத்தட்ட விட்டுவிட்டு பத்துக்குமேற்பட்ட வெடி அதிர்வு.... பனைக்கூடலுக்குள் சூரியன்... சரிந்து விழத்தொடங்கியது. ஏக்கமுடன் முகங்களை முகங்களைப் பார்க்கும்.. நிலை

" அண்ணை இனிப்பார்க்க ஏலாது... பருத்தித்துறைக்கும் போகேலாது.. அங்கை சவுக்கந்தோப்புக்கு அங்காலை... அடக்கத்தை முடிப்பம்"

அவனின் தம்பி ராசன் அவனைப்பார்த்துக் கூறினான் "ஒரு ஆசாரமான கத்தோலிக்க மனிதன்.... ஞாயிறு பூசையைத் தவறவிடாதவரின் அடக்கம் முறைப்படி நடக்காமல்...."

அவனது மனைவி, மைத்துனர் மாமியிடம் இக்கேள்வி மனதில் எழுந்தாலும் சந்தர்ப்பம்... சூழ்நிலை... நிர்ப்பந்தம்

பெட்டியை மூடி... தோழில் தூக்கினான்..நாதன். நாலுபேர் தோழ்கொடுக்க... மண்வெட்டியோடு முன் நடந்த ராசனை பின் தொடர்ந்தான் அவன்...

" அப்புச்சி..." "அப்புச்சி" அழுகுரல்.. பின் தங்கியது. பொம்பரின் இரைச்சலை மீறி... சவுக்குமரம் தாண்டி அழுகுரல் கேட்டபடி இருக்க...

முறையான செபத்துடன் கிடங்குக்குள் அவனின் மாமனாரின் பிரேதம் பச்சைப்பெட்டியுடன் இறங்கியது. ராசன் சவுக்கு மரக் கம்புகளால் சிலுவை ஒன்றைக்கட்டி தலைமாட்டில் நாட்டிக்கொண்டிருந்தபோது அவனின் மைத்துனன் பெரிதாக கதறினான்.

" அப்புச்சி எங்களை விட்டுட்டு போட்டியே...." மணலில் கால் புதைய சவுக்குமரக் காட்டை தாண்டி... அவனும் மற்றவர்களும் வீடு திரும்பிய அந்த நேரத்திலும் கபீர் விமானங்கள் குண்டு வீசும் ஒலி தொடாந்து கேட்டபடியேதான் இருந்தது.

ஒரு காலம் துறைமுக நகரத்தில் மரணவீடுகளுக்கும், வைபவங்களுக்கும் யாழ்ப்பாணத்தின் இடிமேளக்காரர்களைப் போல எக்காளம் வாசிக்கும் ஒருவராக இருந்த அவனது மாமனாரின் மரணம் மிகச்சாதாரணமாக நிகழ்ந்து முடிந்து போயிற்று.

யாழ்ப்பாணத்தின் அவல மரண நிகழ்வுகளில் ஆயிரத்தில் ஒன்றாக இது.

நாட்கள் நகர... துறைமுக நகரம் திரும்பி மகன் வளர்ந்து... பள்ளிக்கூடம் போகும் ஒரு நாளில் அவன் காதில் செய்தி ஒன்று விழந்தது.

" அவன் கொம்யூனிஸ்ட்காரன் அதுதான் கோயில்ச்சடங்கு செய்யாமல் மாமனை சவுக்கு மரக் காட்டுக்குள்ளை தாட்டுப்போட்டான்"

அப்புவின் நாட்டுக்கூத்தில் கட்டியம் கூறுவது போல... இதுவும் ஒரு... கட்டியமாக... அவன் தனக்குள் சிரித்துக் கொண்டான், வாய்விட்டு.. சிரித்துக்கொண்டான்

எத்தனையோ... இடிகள்... இழப்புகள்... அனர்த்தங்கள் எல்லாமே பொறுமையுடன் கழிந்துவிட அவனின் மகனுக்கு தற்போது வயது பன்னிரண்டு. ஏழாம் ஆண்டு ...!

பாடசாலை வாத்தியக்குழுவில் அவனது மகன் ஒரு எக்காள வாத்தியக்காரன் அவனது அப்புவின் அப்புவின் மரண நிகழ்வில் எக்காளம் வாசித்த வாய் வெளிறிய நெடுத்த மனிதனைப்போலவும்....,

சவுக்குமரத்தோப்புகளுக்கப்பால் சாதாரணமாக அடக்கம் பண்ணப்பட்ட.. அவனது மாமனாரான பேரனைப் போலவும்...





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ்த்தேசியத்துள் பெண்களின் நிலையும்/நிலைப்பாடும்

"தில்லை"

தமிழ்த் தேசிய ஒருமைப்பாட்டில் பெண்களை ஒன்றினைப்பதற்கும் சமூக, பொருளாதார ரீதியாக பெண்களை விரைவாகவும் இலகுவாகவும் பலம் பெறச் செய்வதற்கும் உரமான உழைப்பாளிகளான உயிர்த்துடிப்புள்ள கிராமியப் பெண்களைச் சமூக மேம்பாட்டு உருவாக்கத்தில் அதிகளவான பங்கேற்றலையும், பதவிகளையும் பெறுவதற்கும் வலியுறுத்துவதோடு பாரம்பரிய எண்ணக்கருக்களில் இருந்து பெண்கள் சிந்தனைத் தெளிவு பெறக்கூடிய புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கும் சமத்துவம், பொருளாதாரம், சட்டம், கல்வி, உடல்நலம், சுயதொழில், மற்றும் பெண்கள் தொடர்பான மேம்பாடான கிராமியத்திட்டமிடல் முறைமைகளில் பங்காளிகள் ஆவதற்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கையைச் செயற்படுத்தக்கூடிய கிராமியப் பெண்கள் குழுக்களின் முக்கியத்துவத்தையும், ஒருங்கிணைப்பையும் வலியுறுத்தவும் சமூக மேம்பாட்டு நிறுவனங்களின் அபிவிருத்தி திட்டமிடல் முறைமைகளில் பெண்களும் சம அளவான அங்கீகாரம் பெறக்கூடிய வாய்ப்புக்களையும் வளப்பகிர்வினையும் தமிழ்த்தேசியப் பெண்கள் பெற்றுக்கொள்ளவேண்டும்.

மனிதகுல வரலாற்றைக் கருத்தியல் ரீதியாகச் சிந்திக்க வைத்த முதலாளித்துவ சமூகம் உருவான காலம் முதல், பெண்கள் மரபு வழிப்பட்ட பாரம்பரிய எண்ணக்கருக்களாலும் ஐதீக பௌராணிகச் சிந்தனைக்குள்ளும் சிக்குண்டிருந்த எமது சமூகத்தின் ஆரம்பம் முதல், பெண்கள் பற்றிய பார்வை பிரச்சினைகள் கொண்டதாகவே வளர்ந்து வந்துள்ளது. சர்வதேச ரீதியில் பெண்களின் பிரச்சினைகள் உக்கிரம் பெற்றிருந்த போதிலும் எமது சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் போராட்ட காலத்தில்தான் மேலதிகமான அழுத்தம் பெறத் தொடங்கியது. இதே காலகட்டத்தில் சமூகத்தில் கட்டமைக்கப்பட்டிருந்த பழம் வழக்காறுகளை அறுத்தெறிந்து தேசிய விடுதலைப்போராட்டத்துடன் தமிழ் பெண்கள் தம்மை இணைத்துக்கொண்டனர். அப்பெண்கள் தன்னம்பிக்கை, சுய ஆளுமை, அறிவியல் பலம் கொண்ட பெண்களாக எம்மத்தியில் முனைப்புப் பெறத்தொடங்கினர். போராட்ட காலங்களில் பெண்கள் எதிர் நோக்கிய பிரச்சினைகள் பெண்களுக்கு எதிரான வன்முறைகளாகப் பாரிய நெருக்கடியை ஏற்படுத்தியது. பெண்களின் உரிமை மறுப்புக்கள் ஆரம்பகாலங்களில் சமூக, சமய, கலாசார, சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்டும் நியாயப்படுத்தப்பட்டும் வந்த போதிலும் போராட்ட காலத்தில் இராணுவக்கெடுபிடிகளாக மாறி பாலியல் வன்முறைகளாகத் தமிழ் பெண்களின் கலாசாரத்தை ஆட்டம் காணவைத்ததோடு பெண்களுக்கு உடல், உள ரீதியான சித்திரவதைகளாகவும் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் எண்ணிக்கையை அதிகரித்ததோடு புதிய சமூக அவலங்களையும் தோற்றுவித்தது. இதில் அதிகளவு பாதிக்கப்பட்டவர்கள் கிராமியப்பெண்களாகும். அதே காலகட்டத்தில் அப்பெண்கள் ஒன்று சேர்ந்து தம்மை அணிதிரட்டி தமது பிரச்சினைகளைப் பகிரங்கப்படுத்தும் அளவிற்கு சமூக பலத்தையோ? ஒருங்கிணைப்பையோ? பெண்கள் பெற்றிருக்கவில்லை ஆகவே இனிவரும் காலங்களில் தமிழ்த்தேசியப்பெண்கள் தமக்கென்று ஒரு ஸ்திரமான அமைப்பை உருவாக்குவதற்கும் கிராமங்கள் தோறும் பெண்கள் குழுக்களின் பங்கேற்றலும், செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுவதற்கும் பெண்களுக்கான கருத்தியல் தளம் (Idealogical bese) விரிவடைவதற்கும் பெண்கள்கருத்தியல் நோக்கு (Ideological Stance) உடையவர்களாகவும் பெண்களின் காத்திரமான பங்களிப்புக்கு அவர்களின் தகுதிப்பாடு (Credibility) பொருத்தப்பாடு (Suitability) என்பன கவனத்தில் கொள்ளப்படவேண்டும். அதனோடு அவர்களின் மனப்பாங்கு (Commitments) சமூகப்பங்களிப்பைச் சரியாகச் செய்வதற்கு உதவக் கூடியதோடு கிராமியப்பெண்கள் தத்தமது குடும்பமட்டத்திலிருந்து சமூகமட்டத்திற்கு வரவேண்டியுள்ளது. பெண்கள் தமது உரிமைகளைப் பெறுவதற்கும் சமூகமேம்பாட்டுத் திட்டமிடலில் சமபங்கு வகிப்பதற்கும் அபிவிருத்தியில் சாதகமான, பலனைப்பெற சுமூகமான, ஆரோக்கியமான வன்முறைகளற்ற தீர்மானங்களையும் எடுப்பதற்கும், பெண்கள் சகல மட்டங்களிலும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொள்வதற்கும் பலம் பெறும் வழக்காறுகளை உடைத்து குடும்பமட்டத்திலிருந்து வெளிவரவேண்டியுள்ளது. பெண்களின் பிரச்சனைகளுக்குப் பெண்களே முன்னின்று வெளியில் வந்து போராடவேண்டும். பெண்கள் தமது கருத்துக்களைச் சுதந்திரமாகச் சொல்வதற்கும் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கும் பெண்கள் தமது சமூகத்திற்குப் பொருத்தமான மேம்பாடான கல்வியை வடிவமைப்பதற்கும், பெறுவதற்கும், பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் சொத்துரிமை, தமக்கு விருப்பமான தொழிற்துறையைத் தெரிவு செய்வதற்கும் பெண்களே சுயமாகச் சிந்திக்கவும் முடிவெடுக்கவும் வேண்டும், தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கும் சுயமாக முடிவுகளை எடுப்பதற்கும் பெண்கள் முன்வரவேண்டும்.

எந்தவொரு சமுதாயத்தின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் பெண்களின் பங்களிப்பு அவசியமானதும், அடிப்படையானதும் ஆகும். அந்த வகையில் எமது தேசிய விடுதலைப்போராட்டத்துடன் இணைந்த பெண்கள், அவர்களின் ஆற்றல்கள் ஒரு முக்கிய திருப்புமுனையாகும். எமது சமூகத்தில் ஆண், பெண் சமத்துவம் தொடர்பான கருத்துருவாக்கம் வளர்வதற்கும் எமது சமூகத்திற்குப் பொருத்தமான மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் விழிப்புணர்வும், சுயதிறன் விருத்தியும், பொருளாதார நடவடிக்கைகளில் பன்முகத்தன்மையும் கொண்டவர்களாகத் தேசிய விடுதலைப்போராட்டத்துடன் இணைந்த பெண்கள் காணப்படுகின்றனர். கிராமியப்பொருளாதார நடவடிக்கைகளில் பெண்களை ஒன்றினைப்பதற்கும் அபிவிருத்தித்திட்டமிடல் முறைமைகளில் பெண்களின் பங்கேற்றலைத் துரிதப்படுத்துவதற்கும் ஆற்றலும் ஆளுமையும் கொண்ட இப் பெண்கள் தம்மை வடிவமைத்தது போன்று கிராமியப் பெண்களையும் வடிவமைக்கவேண்டும். கிராமியப்பெண்கள் பொருளாதார பலம் பெற வேண்டுமெனில் அவர்களின் ஆற்றல்கள் மழுங்கடிக்கப்படாது ஆரோக்கியமான, பெண்களின் உழைப்பைச் சுரண்டாத திட்டமிடல் வழிமுறைகள் பெண்களாலேயே வடிவமைக்கப்படவேண்டும். அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்படும்போது அதில் பெண்களின் அங்கத்துவமும் சமஅளவில் இடம்பெறவேண்டும், என்ற கருத்துக்கள் முனைப்புப் பெறவேண்டும். இவ்வாறான விடயங்கள் தொடர்ந்தும் மிகவும் தெளிவாக வலியுறுத்தப்படவேண்டும்.

சமூகத்தில் நீதியையும், சமாதானத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்குப் பெண்களின் பங்களிப்பு மிகமிக அவசியம். எமது சமூகம் மீளுருவாக்கம் பெறுவதற்கு பெண்கள் காத்திரமான பங்களிப்புச்செய்யவேண்டும். கிராமியப்பெண்களின் மனங்களில் மாற்றுச்சிந்தனைகளும் மறுசீரமைப்புக் கருத்துருவாக்கமும் வளரவேண்டும். மேம்பாடான சமூக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உருவாக்கத்திற்கான தெளிவுபடுத்தல்களும் வலியுறுத்தப் படவேண்டும். கடந்தகாலங்களில் எம்மை அடக்குமுறைக்குட் படுத்திய அரசு, மகளிர் அபிவிருத்தி தொடர்பாகவும், அவர்களின் பாதுகாப்புத்தொடர்பாகவும் அமைச்சை நிறுவிய அதே காலகட்டத்தில்தான் அதே அரசால் பெண்களுக்கு எதிரான வன்முறைகளும், அபிவிருத்தித்தடைகளும் வடிவமைக்கப்பட்டது. பெண்களின் உரிமை மறுப்புக்கள் காலம் காலமாகத் தொடர்ந்த அரசுகளால் வன்முறைகளுக்கூடாக நியாயப்படுத்தப்பட்டு வந்ததையும் கடந்த காலங்களில் பெண்களாகிய நாம் புதிய,புதிய அவலங்களைக் கண்டும், கேட்டும், அனுபவித்தும், உணர்ந்தும் வந்திருக்கிறோம் இவ்வாறான விடயங்களும் தமிழ் தேசியப்பெண்களை மேலும் விழிப்படையச்செய்துள்ளது. பெண்களாகிய நாம் காலம் காலமாக அடக்கப்பட்டதையும், ஒடுக்கப்பட்டதையும் வன்முறைக்குட்படுத்தப்பட்டதையும் சமூகத்தால் ஓரங்கட்டப்பட்டதையும் எதிர்த்துக் குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளோம்.

எல்லா விதமான கலாசார நாடுகளிலும் பெண்கள் தமக்கெதிரான ஒடுக்குமுறைகளுக்கு முகம் கொடுப்பவர்களாகவே இருந்து வருகின்றனர். இன்றைய காலகட்டத்தில் நேரத்துக்கு நேரம் பெண்களின் வாழ்வியல் நடைமுறைகள் மாறிக் கொண்டிருப்பதால் இதுவரை காலமும் சமூகத்தால் வடிவமைக்கப்பட்டு கட்டிக்காக்கப்பட்டு வந்த கலாசாரக் கட்டுமானங்களைத் தேவையின் நிமித்தம் தகர்த்து வெளியில் வந்து தேசிய விடுதலைப்போராட்டத்துடன் இணைந்த பெண்கள் இன்று சமூக மேம்பாட்டில் தம்மை இணைத்து வாழ்வியல் நடைமுறைகளுக்கு ஏற்பத் தம்மை ஒருங்கிணைத்து இருப்பதை காண்கிறோம். எந்தவொரு செயற்பாடும் பெண்களின் சுறுசுறுப்பான ஆர்வம்மிக்க செயற்பாட்டிலேயே தங்கியுள்ளது. எனவே கிராமியப் பெண்களை ஒன்றினைத்து சமூகமேம்பாட்டு உருவாக்கத்திற்கு அப்பெண்களின் பங்களிப்பைப் பெறுவதற்கு சமூகமேம்பாட்டு அமைப்புக்கள் தூண்டுதல் அளித்தபோதும் ஒரு பெண் தானாகவே முன்வந்து தன்னை வளர்த்துக்கொண்டாலன்றி, விழிப்புணர்வு பெற்றாலன்றி அவளது வளர்ச்சி தடைப்படதொன்றாகவே அல்லலுறும். எது எவ்வாறிருப்பினும் இன்று வரை குடும்பச் சூழ்நிலைகளும் பெண்களின் வளர்ச்சிக்கு பெரும் தடையாகவேயுள்ளது. ஆயினும் ஒவ்வொரு பெண்ணும் தனக்குள்ளிருக்கச் கூடிய சக்தியையும், ஆற்றலையும் உணர்ந்து அந்தந்த துறைகளில் தன்னைத்தானே வளர்த்துக்கொள்ள முன்வரவேண்டும். கிராமியப்பெண்களிடம் ஏற்கனவே இருக்கின்ற திறமைகளை அடையாளம் கண்டு அவற்றை வளர்ப்பதற்குச் சமூகத்தில் உள்ளவர்கள், மேம்பாட்டு நிறுவனங்கள் இயன்றளவு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். கிராமியப்பெண்கள் இழிவுபடுத்தப்படவோ, கீழ்நிலைப்படுத்தப்படவோ முடியாதவர்கள். சமூக மேம்பாட்டில் அவர்களின் பங்களிப்பு அளப்பரியது. ஆகவே அப்பெண்களின் மனங்களில் கருத்தியல் ரீதியான சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்துவதோடு, மரபு ரீதியான சிறுமைப்படுத்தலைத் தகர்த்து பெண்களின் சமத்துவத்திற்கும், சுய அபிவிருத்திக்கும் ஆற்றும் பங்களிப்பே அப்பெண்களை உண்மையான விடுதலைக்கு இட்டுச்செல்லும். ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு ஆண், பெண் இருபாலாரின் பங்களிப்பு எந்தளவு அவசியமோ? நாட்டின் பொருளாதார உற்பத்திக்கும் சமத்துவம், உற்பத்தி என்பன முக்கியமான இரு சக்கரங்கள். இந்த வகையில் எமது தமிழ் தேசிய சமூகம், மேம்பாடு அடைய வேண்டுமெனில் அங்கு பெண்களும் சமூக, பொருளாதார, அரசியல், சட்ட, நீதி, நிர்வாகம், போன்றவற்றில் மட்டுமல்லாது "படைப்பிரிவுகளிலும்" பெண்கள் பங்கேற்க வேண்டும். அதே போன்று கிராமிய வளப்பகிர்வுகளிலும், உற்பத்தியிலும் கிராமியப் பெண்கள் சம அளவில் பங்கேற்க வேண்டும். இதற்கூடாகவே பெண்கள் காலம்காலமாகத் தம்மை வடிவமைத்துள்ள சமூகக்கட்டுமானங்களில் இருந்து தன்னைத்தானே விடுவித்துக்கொள்வதோடு சமூகத்தையும் விடுவித்துக்கொள்ளமுடியும். பெண்கள் உடல், உள ரீதியாகத் தம்மை வலுப்படுத்தியும் ஆளுமைகளை வளர்த்துக் கொள்ளவும், விழிப்புணர்வு பெறவும் கிராமிய, பிரதேச மாவட்ட மட்டங்களில் பெண்கள் குழுக்களை அமைத்து அதற்கூடாக சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஒவ்வொரு பெண்ணும் பங்கேற்பதோடு திட்டமிடல் முறைமைகளில் பெண்களும் சம அளவில் பங்குபற்ற முடியும். தேசிய விடுதலைப்போராட்டத்துடன் இணைந்த எமது பெண்களின் நடவடிக்கைகளைக் கருத்தியல் நோக்குடையதாகக் கவனத்தில் கொண்டு ஒவ்வொரு கிராமியப் பெண்ணும் தம்மை முன்னெடுக்க வேண்டும் கிராமியப்பெண்களுக்கு பக்கபலமாகவும் உந்து சக்தியாகவும் உள்ள தமிழீழத் தேசியப் பெண்களின் அர்ப்பணிப்புக்களும், தேடல்களுமே ஒட்டுமொத்தப் பெண்களுடைய விடுதலையை வென்றெடுக்க வழிசமைக்கும். இவ்வாறான பெண்களின் முழுமையான அர்ப்பணிப்பே விடுதலையைப் பெற்றுத்தரும். எனவே பெண்கள் அனைவரும் முழுமையான பெண் விடுதலையைப் பெற முன்னின்று உழைப்பதோடு அனைத்துச் சமூகங்களிலும் ஓரங்கட்டப்பட்டதையும், கீழ்நிலைப்படுத்தப்பட்டதையும் இதுவரை காலமும் அனுமதித்து, தலை வணங்கி அதற்கு எதிராக வாய்பேசா மௌனிகளாக இருந்தது போதும். இனிவரும் காலங்களிலாவது தமிழ்தேசிய விடுதலைக்காக வெளியில் வந்து முன்னின்று உழைப்பதற்கூடாக தேசவிடுதலையும் பெண்விடுதலையையும் வென்றெடுக்கலாம்.

எது எவ்வாறு இருப்பினும் பெண்கள் தமது உரிமை மறுப்புக்கள் தொடர்பாக சர்வதேச அளவில் அரசியல் நிலைப்பட்ட செயற்பாடுகளையும், கோரிக்கைகளையும் முன்வைத்துள்ள போதிலும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் குறைந்தபாடில்லை, ஆயினும் எமது தமிழ்த்தேசிய சமூகத்தில் சகல ஒடுக்குதல்களுக்கும் உட்பட்ட பெண்கள் வெளியில் வந்து சமத்துவமான கட்டுமானங்களை உருவாக்குவதிலும் அவற்றுக்கூடாக பெண்கள் அபிவிருத்தியிலும், தாயக தேசத்தின் விடுதலையிலும் பங்காளிகளாவதற்கும் தமது ஈடுபாட்டையும் அக்கறையையும் அதிகரித்து இருப்பதோடு, பெண்களாகிய நாம் எல்லாக்காலங்களிலும், எல்லாச்சமுதாயத்திலும் எமது அடிப்படை உரிமைகளை இழந்தவர்களாகவும், அடிமைகளாகவும், ஆற்றல்கள் அனைத்தையும் அடக்கியவர்களாகவும், இருளுக்குள் இடிந்த எண்ணங்களுடனும், உள்ளங்களுக்குள் உடைந்த ஆசைகளுடனும் வாய்பேசத் திராணியற்றவர்களாகவே வாழ்ந்து வந்துள்ளோம். இவ்வாறு மௌனித்து வாய்பேசக் கூடத்துணியாதவர்களாக, சகித்துப் பொறுத்துக்கொண்டிருந்த காலம் பெண்களைச் சிதைத்து, அடிமைகளாக்கி, சிறைப்படுத்தி, பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி, புதைகுழியிட்டு பெண்களின் தேவைகள், எண்ணங்கள், மனக்கொந்தளிப்புக்கள் அனைத்தையும் சின்னாபின்னப் படுத்தியது. இவ்வாறான துன்பங்கள் பெண்களுக்கு இனியும் வேண்டாம். தமிழீழ தேசிய விடுதலைக்காக கைகளை ஒன்றினைத்து ஒத்துழைப்புக்கொடுப்போம்! எமது குரல்களையும், கரங்களையும் யாரும் நசுக்காது தேசத்தை காக்கும் திறனை தமிழீழ தேசியப்பெண்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து உருவாக்குவோம். சமூக மேம்பாட்டு உருவாக்கத்தில் பெண்களாகிய நாம் ஒருங்கிணைந்து செயற்பட்டால் மாத்திரமே சுதந்திரமான பெண்விடுதலையையும், ஆரோக்கியமான சமூக விடுதலையையும் வென்றெடுக்க முடியும்.

www.tamilarangam.net

# தடம்

**MARY MSLAUGHLIS SLECHTS**

தமிழில் - ஜிப்ரான

ஆரம்பத்தில்
சிறுவட்டப்புள்ளியாய்த்தான் மார்பிருந்தது.
பின்னர்
சற்றேயுயர்ந்து கோபுரம் போலவும்,
என் சட்டையை
அரைவாசிக்கு உயர்த்திக் கொண்டு
ஒரு சர்க்கஸ் கூடாரம் போலவும்
அது இருந்தது.

சொந்தக்காரர்களுக்கான
ஒரு பொதுச் சொத்துப் போலவும் அது இருந்தது.
மாமிமார் அது பற்றி ஆருடங்கள் சொன்னார்கள்.
மாமாமாரின் கண்களை அது அழைத்துக் கொண்டிருந்தது.

கூடவே அது
எனக்கே உரித்தான
என் சொந்தப் பொருளாகவும் இருந்தது.
குளியலறைக் கண்ணாடியில் தெரிகின்ற
என்னுடம்பின் முதலாவது புதிய வரவு அது!
மூச்சடங்கிப்போன இரவுகளில்
என்னை, (என்னுடம்பின்) ஏனையவைகளை
நான் கண்டுபிடித்துக் கொள்ளக் கிடைத்த
ஒரு தடமும் அது!



# அருமையான இடம்

**LAWSON FUSAO INADA**



வீட்டுக்கு வெளியே நிழலில்
தன் சக்கர நாற்காலியில்
ஓய்வெடுத்துக்
கொண்டிருக்கும்
என் தந்தை சொன்னார்:
''இது நல்ல அருமையான
இடம்''.

அவர் கருதியது,
இந்த முழுவீட்டையுமா
அல்லது
குளிர்த்தென்றல் வீசுகின்ற
நீரூற்றுப் பாய்கிற,
பறவைகள்
ரீங்காரமிடுகிற,
நிழல் அடர்ந்த இந்த
வெளியையா
அல்லது
இந்த உலகத்தையா.

எதுவென்று
என்னால் சொல்ல முடியவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

### மொழிசார் அதிகாரம்:

# இலக்கியப் பிரதிகளை முன்வைத்து ஓர் உரையாடல்

ஏ.டபிள்யூ முஹ்சீன்.

1

இலக்கியம் என்பது பன்முக உறவுகளின் தொகுப்பு. இயற்கைப் பொருட்களுக்கிடையிலான உறவாகவும் இயற்கை நிகழ்வுகளுக்கிடையிலான உறவாகவும் இயற்கைக்கும் மனிதர்களுக்கும் இடையிலான உறவாகவும் மனிதர்களுக்கு இடையிலான உறவாகவும்.... என பன்முக உறவுகளின் விளைவுகளாக இலக்கிய மாதிரிகள் உருவாகின்றன; வாசிக்கப்படுகின்றன; ரசிக்கப்படுகின்றன.

உறவு என்பது நிலையானதல்ல. அது தொடர்ச்சியாக மாறிக்கொண்டிருப்பது. இந்த உண்மையானது, இலக்கிய உருவாக்கத்திலும் வாசிப்பிலும் ரசனையிலும் ஏற்படுகின்ற மாற்றங்களையும் புதிய போக்குகளையும் ஆர்வங்களையும் சுட்டவும் அடையாளம் காணவும் உதவுகின்றது.

2

மொழிதான் இலக்கிய ஊடகம். இலக்கிய ஊடாட்டங்கள் மொழியினூடாகவே நிகழ்கின்றன. மொழியற்ற அல்லது மொழி கடந்த ஊடாட்டங்கள் ஏனைய கலை வடிவங்களுக்கு சாத்தியமாகின்ற நிலையில், இலக்கியத்தில் அத்தகைய ஊடாட்டங்கள் சாத்தியமற்றதாகின்றன. ஓவியம், சிற்பம், நடனம், இசை... போன்றவை குறிப்பிட்ட ஒரு சமூக மொழியைக் கடந்தும் நிலவக் கூடியவை. நாடகம், சினிமா.... போன்றவற்றிலும்கூட ஒரு குறிப்பிட்ட அளவில் மொழியைத் தவிர்ப்பது சாத்தியம். இவற்றின் உருவாக்கத்திற்கும் வாசிப்பிற்கும் ரசிப்பிற்கும் மொழி ஒரு அவசிய ஊடகமாக அமைய வேண்டுமென்பதில்லை. இவை மொழி கடந்தும், அதே நேரத்தில் மொழியற்றும் நிலவுவது சாத்தியமாகின்றது.

ஆனால் எந்தவொரு இலக்கிய மாதிரிக்கும் மொழி அவசியமாகின்றது. மொழியின் துணையோடு மட்டுமே இலக்கியம் உருவாகின்றது. மொழியின் துணையோடு மட்டுமே அதன் மீதான வாசிப்பும் ரசிப்பும் நிகழ்கின்றன. குறித்த ஒரு மொழியைச் சேர்ந்த ஒரு இலக்கிய மாதிரி, பிறிதொரு மொழியைச் சேர்ந்தவர்கள் மத்தியில் ஊடாடுவதற்கு அது அம்மொழிக்குள் பெயர்க்கப்படுவது அல்லது அவர்கள் முன்னைய மொழிக்குள் பெயர்வது அவசியமாகின்றது.

இலக்கியத்திற்கும் மொழிக்கும் இடையே நிலவுகின்ற இத்தகைய பிரிக்க முடியாத உறவுதான். இலக்கியத்தின் தனித்துவமாகவும் சிறப்பாகவும் அமைகின்றது. அதே நேரம் இலக்கியத்தில் பன்முகத் தன்மைகள் மறுக்கப்படுவதற்கும் அங்கு அதிகாரத்துவம் நிறுவப்படுவதற்கும் கூட, இந்த உறவு காரணமாகின்றது.

3

மொழி என்பது தொடர்பாடலுக்கான சாதனம் என்பது ஒரு அடிப்படையான வரைவிலக்கணம் எனினும் தொடர்பாடல் சார்ந்த பயன்பாடு தவிர, மொழிக்கு வேறு பண்புகளும் இருக்கின்றன. உணர்ச்சி வெளிப்பாடு, கருத்துருவாக்கம், அரசியல் ஆயுதம், அழகியல் சாதனம்..... போன்ற பண்புகளோடு, அதிகார முறைமையை கட்டமைப்பதிலும் மொழி பயன்படுத்தப்படுகின்றது. மொழியினூடான அதிகார முறைமையானது மொழியை மையமாகக் கொண்டு கட்டமைக்கப்படுகின்றது. இத்தகைய மொழிசார்ந்த அதிகார முறைமைகள் இரு தளங்களில் நிலவுகின்றன: ஒன்று பல்வேறு மொழிகள் சார்ந்து ஏற்படுத்தப்படுகின்ற புறநிலை அதிகார முறைமை. இரண்டாவது ஒரே மொழி சார்ந்து நிறுவப்படுகின்ற அகநிலை அதிகார முறைமை.

புறநிலை அதிகார முறைமையானது, ஒரு மொழியை ஏனைய மொழிகளை விட மேன்நிலைப்படுத்துவதன் மூலம் நிறுவப்படுகின்றது. ஒரு மொழி சிறப்புக்குரியதாக்கப்படும்போது, அது குறிப்பிட்ட கலாச்சாரத்தை அதிகாரபூர்வமாகக் காவுகின்ற மொழியாகின்றது; குறிப்பிட்ட பண்பாட்டை உத்தியோகபூர்வமாகப் பரப்புகின்ற மொழியாகின்றது; குறிப்பிட்ட இலக்கியத்தை தடையின்றி விதைக்கின்ற மொழியாகின்றது. அந்த மொழிக்கு எங்கும் நுழைகின்ற தகைமை வழங்கப்படுகின்றது. அது அந்தஸ்தினதும் மரியாதையினதும் குறியீடாகின்றது. ஈற்றில் அது அதிகாரத்தின் கருவியாகின்றது.

அகநிலை அதிகார முறைமையானது, ஒரே, மொழியின் பல்வேறு வட்டார வழக்குகளுக்கிடையில் ஏற்படுத்தப்படுகின்றது. ஒரு குறித்த வட்டார மொழிவழக்கை, ஏனைய வழக்காறுகளிலும் பார்க்க உயர்த்துவதன் மூலம் அகநிலை அதிகார முறைமை ஊருவாக்கப்படுகின்றது.

4

நாம் இங்கு மொழிசார்ந்து உருவாக்கப்படுகின்ற அகநிலை அதிகார முறைமை பற்றியே உரையாட முற்படுகின்றோம்:

குறித்த ஒரு மொழியைப் பேசுகின்ற சமூகம்/சமூகங்கள் ஒரேவகையாக வார்க்கப்பட்ட நபர்களின் தொகுப்பு அல்ல என்பதை நாம் அறிவோம். அங்கு பல பிரிவுகளை ஒருவர் காண முடியும். பால், வர்க்கம், சாதி, இனம், நிறம், மதம், பிரதேசம், தொழில், கலாசாரம் என பரந்த வேறுபட்ட புலங்களைக் கொண்ட மக்கள் பிரிவுகளின் தொகுப்பாகவே ஒரே மொழி பேசுகின்ற சமூகங்கள் அமைகின்றன.

இத்தைகைய வேறுபாடுகளுக்கேற்ப மொழியின் வட்டார வழக்காறுகளும் வேறுபடுகின்றன. ஒரு பிரதேசத்திற்குள் நுழைகின்ற ஒருவர், ஒரு மொழி எத்தனை வேறுபாடுகளுடன் பயன்படுத்தப்படுகின்றது. என்பதை உணர முடியும் தெருவுக்குத் தெரு, வீட்டுக்குவீடு, நபருக்கு நபர்..... என ஒரே மொழி பன்முக வேறுபாடுகளுடன் பிரயோகிக்கப்படுகின்ற அற்புதத்தை ஒருவர் அனுபவிக்க முடியும்.

மொழியில் நிலவுகின்ற பன்மைத்துவமானது அதன் தீவிர நிலையில் புதிய மொழி/மொழிகள் பரிணமிக்கவும் காரணமாகிறது. உலகில் எண்ணற்றவகையில் நிலவுகின்ற மொழிகளை, விரல் அளவு எண்ணிக்கையான மூல மொழிகளுக்குள் சுருக்கி விடமுடியும் என்ற உண்மையானது, அம் மூல மொழிகளில் நிலவிய பன்மைத்துவத்தை துல்லியமாக விளக்குகிறது. மூல மொழியிலிருந்து கிளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரிகின்ற புதிய மொழியானது ஒரு நிலையில், அம்மூல மொழியுடனான தொப்புள்கொடி உறவு துண்டிக்கப்படுகின்ற அளவுக்குக் கூட தன்னை தனிமைப்படுத்திக் கொள்கிறது.

மொழிகளுக்கிடையிலான ஒற்றுமையைவிட, அவற்றுக்கிடையிலான வேற்றுமைகள்தான் மொழிகளின் சிறப்பம்சங்களாக அமைகின்றன. ஒரு மொழியின் அழகும் மிடுக்கும் பரிணமிப்பும் அது பிற மொழிகளுடன் எந்தளவுக்கு ஒத்திருக்கின்றது என்பதன்மூலம் தீர்மானிக்கப்படுவதில்லை. மாறாக, ஒரு மொழி பிற மொழிகளிலிருந்து எந்தளவுக்கு வேறுபட்டு, தனித்துவத்துடன் மிளிர்கின்றதோ, அந்தளவுக்கு அதன் சுயமான இயக்கம் கட்டுத்தளைகள் இன்றி இடம்பெறுவது சாத்தியமாகின்றது. புதிய அனுபவங்களையும் சேகரிப்புக்களையும் தன்னுட் செரித்தவாறு மேலும் மேலும் தனித்துவத்துடன் அம்மொழி பரிணமித்தெழுகின்றது.

ஒரு தனிமொழியிலும் இத்தகைய அனுபவங்களை உணர முடியும். ஒரே மொழியைக் கொண்டிருக்கின்ற வெவ்வேறு பிரிவினர்கள், அம்மொழியைத் தாம் சார்ந்த புலங்களில் பயன்படுத்துகின்றபோது, அது வட்டார வழக்குகளாக கிளை கொள்கிறது. அவர்களின் இயல்பான தொடர்பாடல்களும் உணர்வு வெளிப்பாடுகளும் சிந்தனைகளும் தேவைகளும் அவரவர், வட்டார வழக்குகளூடாகவே வெளிப்படுகின்றன. தாம் கொண்டிருக்கின்ற மொழி வழக்கு குறித்த உணர்வு நிலை இன்றி, கிலேச உணர்வின்றி அவர்கள் இயல்பாகவும் இயற்கையான முறையிலும் தம் எண்ணங்களை வெளிப்படுத்துகின்றார்கள்.

இவ்வாறு ஒரு மொழி பலவேறு வட்டார வழக்குகளைக் கொண்டிருக்கிற நிலையில், குறித்த ஒரு வழக்கை மேனிலைப்படுத்துவதால் அல்லது நியமப்படுத்துவதால் அவ் வட்டார வழக்குகளுக்கிடையே படிநிலை அமைப்பு உருவாக்கப்படுகின்றது. 'சிறப்பான' வழக்கு என்ற 'உயர்நிலையிலிருந்து' 'கொச்சையான' வழக்கு என்ற 'தாழ்நிலைவரை' மொழி வழக்குகளுக்கிடையே ஒரு படிநிலைத்தர அமைப்பு நிறுவப்படுகின்றது.

மொழி வழக்குகளிடையே இத்தகைய படித்தர முறைமை நிறுவப்பட்டு விடும்போது, 'சிறப்பான வழக்கு' என்ற அந்தஸ்தைப் பெற்ற வட்டார, வழக்கே அதிகாரபூர்வ மொழிவழக்கு என்ற தகைமையைப் பெற்று விடுகின்றது. குறித்த மொழியைப் பேசுகின்ற முழு மக்களினதும் கலாச்சார மொழி வழக்காக அந்த 'சிறப்பான வழக்கு' உயர்த்தப்படுகின்றது; அந்த 'சிறப்பான' வழக்கை கொண்டிருக்கின்ற பிரிவினரே கலாச்சார ரீதியில் உயர்ந்தவர்களாகவும் பண்பாட்டுப் பேணுகைக்குரியவர்களாகவும், அடையாளம் காணப்படுகின்றார்கள். இவர்களை அடிநிலையாகக் கொண்டே அந்த மொழிக்குரிய இலக்கியக் கோட்பாடுகள் உருவாக்கப்படுகின்றன; இலக்கியப் போக்குகள் அடையாளம் காணப்படுகின்றன.

இதன் பின்னர், ஏனைய வட்டார வழக்குகளைக் கொண்டிருப்பவர்களின் இலக்கிய மாதிரிகளும் இலக்கிய உருவாக்கங்களும் 'சிறப்பான வழக்கு' சார்ந்தே மதிப்பீட்டுக்குட்படுத்தப்படுகின்றன. ஏனைய வட்டார வழக்காறுகளைக் கொண்டிருப்பவர்களின் வேறுபட்ட வாழ்நிலைமைகள், உணர்வுநிலைகள், ரசனை, அழகியல் ஈர்ப்புகள், தேவைகள், நம்பிக்கைகள், சிந்தனை வெளிப்பாடுகள்.... போன்றவை இரண்டாம் நிலைக்குட்படுத்தப்பட்டு, 'சிறப்பான' வழக்காறுடன் அவை எவ்வாறு தொடர்புபடுகின்றன என்பதே முதன்மையாக்கப்படுகின்றது.

இவ்வாறு ஒரே மொழியைக் கொண்டிருக்கின்ற சமூகப் பிரிவினர்களிடையே மொழி வழக்கு சார்ந்து அதிகார முறைமை நிறுவப்பட்ட பின்னர் இலக்கிய மாதிரிகளினதும் வெளிப்பாடுகளினதும் பன்மைத் தன்மைகளும் தனித்துவங்களும் வாஞ்சையுடன் ரசிக்கப்படுவது அகற்றப்படுகின்றது. அழகியல், ஒழுக்க நெறி, முற்போக்கு.... என விரிகின்ற 'பொது' இலக்கியக் கோட்பாடுகளின் பின்னணியில் பன்முக இலக்கிய உருவாக்கங்கள் அறுவைச் சிகிச்சைக்குட்படுத்தப்படுகின்றன. இயற்கையாகவே பன்முகத் தன்மைகள் கொண்டிருக்கின்ற மொழியும் இலக்கியமும் பொதுவரையறைகளுக்குட்படுவதன் மூலம் அவற்றின் சுயமான வெளிப்பாடுகளும் பரிணமிப்புகளும் தடுக்கப்படுகின்றன அல்லது கட்டுப்படுத்தப்படுகின்றன. ஈற்றில் வேறுபட்ட மொழிவழக்குகளை கொண்டிருக்கின்ற சமூகப் பிரிவினரின் முக்கிய கலாசார வெளிப்பாடான இலக்கிய மாதிரிகள் அவற்றின் சுயத்தை இழக்கும்படி நிர்ப்பந்திக்கப்படுகின்றன.

5

இங்கு மொழியின் மூலம் நிறுவப்படுகின்ற அதிகார முறைமையை வெளிக்கொணர்வதற்கு பால்ரீதியானதும் சமூக ரீதியானதுமான இலக்கிய மாதிரிகள் எவ்வாறு மதிப்பிடப்படுகின்றன என்பதை எடுத்தாள்கிறோம்.

தமிழ் மொழியில் பால்நிலை வேறுபாடுகள் எவ்வாறு தொழிற்படுகின்றன? வினைச் சொற்களின் 'ளகர', 'னகர' வேறுபாடுகள் பெரும்பாலும் பெண்பால் மற்றும் ஆண்பால் நிலைகளைச் சுட்டுகின்றன என்பது ஒரு எளிமையான விளக்கம். எனினும் இவ்வாறான வேறுபாடுகள் பொதுவாக பெண், ஆண் பால்களைச் சுட்டுவது தவிர, வேறு எத்தகைய அதிகாரப் பண்புகளையும் குறிப்பதில்லை.

ஆனால் 'மனிதன் சிந்திக்கும் ஆற்றலைப் பெற்றிருக்கிறான்' என்றோ 'மனிதன் தன்னுடைய செயற்பாடுகளின் மூலம் உலகை மாற்றியமைக்கின்றான்' என்றோ கூறும் போது அங்கு வெளிப்படுகின்ற ஆண்பால் சுட்டுகையானது, வெறும் பால்நிலை அடையாளமாக மட்டும் அமைவதில்லை. மாறாக அத்தகைய சொற்பதங்களில் மனித இனம் முழுமைக்கும் ஆணே அதிகாரப் பிரதிநிதி என்ற கருத்தியல் இறுக்கமாகப் பதிக்கப்படுகின்றது. இங்கு ஆணே சிந்திப்பவனாகவும் செயற்படுபவனாகவும் கருதப்படுகின்றான். பெண்ணின் சிந்தனையும் செயற்பாடுகளும் ஒதுக்கப்பட்டு விடுகின்றன.

'மனிதன்' என்ற குறிப்பீடே பெண்ணை ஒதுக்கியதாகவும் ஆணை முதன்மைப் படுத்தியதாகவும் உருவாக்கப்பட்டிருக்கின்றது. 'மனிதள்' என்று யாரும் அழைப்பதில்லை. அவ்வாறான ஒரு சொல்லே தமிழில் இல்லை. இவ்வாறு பால்நிலை உணர்வுடன் தமிழ்மொழிக்குள் நுழையும்போது, ஆணை முதன்மைப்படுத்துகின்ற, ஆணை மட்டும் மையமாகக் கொண்ட ஏராளமான சொற்களையும் சொல்லமைப்புக்களையும் எதிர்ப்பட முடியும்.

மொழிகளுக்குரிய இலக்கண விதிகளை உருவாக்கியதிலும், மொழிக் கட்டமைப்பை நிறுவியதிலும் ஆண்கள் பெரும்பங்கு வகித்திருக்கின்றார்கள். பேச்சு மொழியை விட எழுத்து மொழியிலேயே இத்தகைய இலக்கண விதிகளும், கட்டமைப்புக்களும் கறாராகப் பின்பற்றப் படுகின்றன. இதன் காரணமாக எழுத்து மொழியில் ஆண்தன்மை மேலும் துலக்கமாகவும் மேலும் இறுக்கமாகவும் படிந்துள்ளதை புரிந்து கொள்ள முடியும். இதனால் எழுத்து மொழியைப்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படுத்துகின்ற ஆண்கள் மட்டுமன்றி, பெண்களும்கூட ண்தன்மையூட்டப்பட்டுள்ள சொற்களையும், சால்லமைப்புக்களையும் பிரயோகிக்க வேண்டியவர்களாக உள்ளார்கள்.

மொழியில் படிந்துள்ள ஆண்தன்மை குறித்து, பெண்ணியவாதிகள் கூர்மையான அக்கறைகளை வெளிப்படுத்தி வருகின்றார்கள். நாளாந்தம் பல்வேறு வகையான அனுபவங்களை எதிர்கொள்கின்ற பெண்கள், தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு வழக்கத்திலுள்ள சொற்களும், மொழி அமைப்பும் போதுமானவை அல்ல என்பதை உணரத் தொடங்கியிருக்கின்றார்கள். மொழியிலுள்ள ஆணாதிக்க பண்புகளை அகற்ற வேண்டும் என்ற அழுத்தங்களைப் பிரயோகிக்கின்ற அதேநேரத்தில், பெண்களின் உணர்வுகளை இயல்பாக வெளிப்படுத்தக் கூடிய மொழி அமைப்பின் அவசியத்தையும் அவர்கள் உணர்கிறார்கள். இவை கடினமாக இருக்கின்ற போதிலும், சில பெண் இலக்கியவாதிகள் இந்தப் பணியில் ஆர்வத்தையும், கடின முயற்சியையும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

பெண்களின் இலக்கிய மாதிரிகளை மதிப்பிடுவதிலும் ரசிப்பதிலும் ஆண்களினால் திறந்த மனத்துடன் செயற்பட முடிவதில்லை. ஆண்கள் உருவாக்கியுள்ள இலக்கண மற்றும் இலக்கியக் கோட்பாடுகள் என்ற சட்டகங்களிற்குள் பெண்களின் இலக்கிய மாதிரிகள் எவ்வாறு பொருந்துகின்றன என்பதே மதிப்பீட்டிலும் ரசனையிலும் முதன்மையான தாக்கங்களை நிகழ்த்துகின்றன.

பெண்களின் பங்கேற்பின்றியும் பெண்களின் உணர்வு வெளிப்பாடுகளுக்கு வெளியேயும் உருவாக்கப்பட்டுள்ள இலக்கண, இலக்கியக் கோட்பாடுகளை பெண்களின் இலக்கிய மாதிரிகளுக்குப் பிரயோகிப்பதில் எவ்வித தயக்கத்தையும் ஆண்கள் கொள்வதில்லை. பிரமாண்டமாக வளர்க்கப்பட்டிருக்கின்ற ஆண்களின் மொழி உலகும் கோட்பாடுகளும் பெண்களினால் உருவாக்கப்படுகின்ற இலக்கிய மாதிரிகளை எள்ளலுடனேயே மதிப்பிடுகின்றன. சமுத்திரத்திற்குள் வீழ்கின்ற மழைத்துளிகள் அதன் உவர்ப்புச் சுவைக்குள் கலந்து விடுவதுபோல், ஆண்களின் மொழி உலகிற்குள் நுழைகின்ற பெண்களின் இலக்கிய மாதிரிகள், அதன் ஆதிக்க சட்டகத்தினால் இறுக்கி, உருமாற்றப் படுகின்றன; அல்லது ஒதுக்கித் தள்ளப்படுகின்றன.

கலா என்னும் பெண் கவிஞரால் எழுதப்பட்ட 'கோணேஸ்வரிகள்' கவிதை மீதான வாசிப்பும் விமர்சனங்களும் ஆண்களின் மொழி உலகையும், கோட்பாடுகளையும் விளக்குவதற்கான எடுப்பான உதாரணங்களாக அமைந்திருக்கின்றன. தமிழ் தேசியப் போராட்டமானது, தமிழ் பெண்கள் தங்கள் உணர்வுகளை கலை, இலக்கிய ாதிரிகளினூடாக வெளிப்படுத்த வேண்டும் என்ற னைப்பையும் ஆர்வத்தையும் தூண்டுவதற்குக் ாரணமாயமைந்து வந்திருக்கின்றது. தமிழ்த் தேசத்தின் ரைப்பங்கினராகவும், போராட்டத்தின் நேரடிப் ங்கேற்பாளர்களாகவும் விளங்கி வந்திருப்பதோடு ாராட்டத்தின் கொடும் விளைவுகளை அதிகம் திர்கொள்பவர்கள் என்றவகையிலும் தமிழ்ப்பெண்கள் தங்கள் ணர்வுகளை வெளிப்படுத்த வேண்டிய அவசியம் ாடர்ச்சியாக உணரப்பட்டு வந்திருக்கின்றது.

இத்தகைய அவசியத்தின் விளைவாக த்தாளர்கள், கவிதையாளர்கள், நாடகப் பங்கேற்பாளர்கள், பாளர்கள்... என பல்வேறு தளங்களில் தமிழ்ப்பெண்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்திவந்திருக்கின்றார்கள். இவற்றில் கணிசமானவை ஏற்கனவே கட்டமைக்கப்பட்டிருக்கின்ற ஆண்களின்மொழி உலகிற்கும் கோட்பாடுகளுக்கும் சவால்விடுபவைகளாகவும் கண்டனம் தெரிவிப்பவையாகவும் அமைந்திருக்கின்றன. இத்தகைய சவால்களையும் கண்டனங்களையும் ஆண்களின் மொழியும் அதிகாரமும் நேர்மையான, திறந்த மனத்துடன் எதிர்கொள்ளவில்லை. இதன் விளைவாக, தற்கொலை, மௌனம், ஒதுங்குதல்.... போன்ற தெரிவுகளை மேற்கொள்ள வேண்டிய நிலைகூட சில பெண் கலை இலக்கிய பங்கேற்பாளர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

'கோணேஸ்வரிகள்' கவிதை பலசெய்திகளை முன்வைத்தது கோணேஸ்வரி என்ற தமிழ்ப்பெண்மீது அரசபடைகளினால் நிகழ்த்தப்பட்ட வன்புணர்ச்சி மற்றும் கோரக்கொலை பற்றிய வெறும் பதிவாக அது உருவாக்கப்படவில்லை. பதிலாக வன்புணர்ச்சி, படுகொலை, ஆக்கிரமிப்பு.... போன்ற கொடுமைகளுக்கு எதிரான ஒருதமிழ்ப்பெண்ணின் ஆவேஷக்குரலாகவும் அவமானத்திற் குள்ளாக்கப்பட்ட ஒரு இனத்தின் குமுறலாகவும் அந்தக் கவிதை வெளிப்பட்டது. எனவே அதன் மீதான வாசிப்பும் பல தளங்களைக் கோருகின்றது. அந்தக் கவிதைக்குள் உறைந்துள்ள பன்முக உணர்வுகளைப் புரிந்துகொள்வதற்கு, ஒரு பெண்ணாக, தமிழராக ஆக்கிரமிக்கப்பட்டவராக... என பல தளங்களுக்குள் ஒருவர் தன்னை உட்புகுத்த வேண்டியுள்ளது.

ஆனால் 'கோணேஸ்வரிகள்' தொடர்பாக முன்வைக்கப்பட்ட பெரும்பாலான விமர்சனங்களில் இத்தகைய பன்முக பரிமாணங்கள் கவனத்திற் கொள்ளப்படவில்லை. மாறாக நடைமுறையிலுள்ள ஆண்களின் மொழி உலகும் கோட்பாடுகளும் அசைத்துக் குலுக்கப்பட்ட அதிர்வுகளையே அவற்றில் கேட்க முடிந்தது. கவிதையில் பயன்படுத்தப்பட்ட 'அருவருப்பூட்டும்' சொற்கள் 'ஒழுக்க நெறிக்கு' முரணான கருத்துக்கள் 'மானிட' விரோதத்தன்மை.....என்பவற்றின் காரணமாக (என) ஏற்கனவே உருவாக்கப்பட்டிருந்த சட்டகங்கள் உடைந்து நொருங்கிய [?] ஒலிகள்தான் இந்தக் கண்டனங்களில் வெளிப்பட்டன.

அப்போதைய 'சரிநிகர்' இதழ்களை வாசிக்கும் ஒருவர் இத்தகைய கண்டனங்களை முன்வைத்தவர்கள் பற்றிய தரவுகளைப் பெறமுடியும். இவற்றில் ஆண்கள், வடக்கு கிழக்கிற்கு வெளியே வாழ்கின்ற முஸ்லிம் பெண்கள், சிங்கள பெண்ணியவாதிகள், தமிழ்த் தேசிய இயக்கத்தில் நேரடியாகப் பங்கேற்றிராத தமிழ்ப்பெண்ணியவாதிகள்..... என 'கோணேஸ்வரிகள்' கவிதை அவசியமாயிருந்த பன்முகதளங் களுக்குள் உட்புக முடியாதிருந்தவர்களே பெரும்பாலானவர்களாக இருந்ததை இலகுவாக நிரல்படுத்த முடியும்.

பெண்களுக்கான மொழி, பெண்களுக்கான இலக்கணம், இலக்கிய கோட்பாடுகள்.... போன்றவை ஸ்தாபிக்கப்படுவதற்கு பெண்கள் இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியிருக்கின்றது. தமிழ்த்தேசியப்போராட்டம் அதற்கான பல சாத்தியங்களை வெளிப்படுத்தியது. எனினும் இந்தப்பாதையில் தொடர் முன்னேற்றம் நிகழ்கின்றதா என்பது திறந்த மனத்துடன் பரிசீலிக்கப்படவேண்டிய வினா.

I

ஒரு பிரபல தமிழ் வெளியீட்டகத்தினால் பிரசுரிக்கப்படுவதற்கென தென்னிலங்கை முஸ்லிம் எழுத்தாளர் ஒருவர் ஒரு நாவலை வழங்கியிருந்தார். அந்த நாவலிலுள்ள ஒரு வரிகூட தமக்குப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புரியவில்லை என்றும் அதைப் புரியும்படி மாற்றி எழுதினால்தான் பிரசுரிக்கமுடியும் என்றும் குறிப்பிட்டு அவ்வெளியீட்டாளர்கள் அப்பிரதியை தம்மிடம் திருப்பி ஒப்படைத்ததாக அந்த எழுத்தாளர் வருத்தப்பட்டார். 'பிரதேச நாவல்கள்' என்ற தலைப்பில், பரபரப்பாகவும் வெற்றிகரமாகவும் நாவல்கள் பிரசுரிக்கப்பட்ட ஒரு காலகட்டத்தில்தான் இந்த சம்பவமும் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து மலையகம் வரை தமிழ்ச்சமூகத்தின் பல்வேறு பிரிவினர்களின் வாழ்க்கை முறைமைகளும் சமூகக்கட்டமைப்புக்களும் எதார்த்தபூர்வமாக வடிக்கப்பட்ட ஈழத்து நாவல்களின் 'பொற்காலம்' அது. தமிழ் மொழியின் பல்வேறு வட்டார வழக்குகள் சிறப்பாகக் கையாளப்பட்டு அந்தந்தப் பிரதேசங்களின் கமழும் மணத்துடன் நாவல்கள் உருவாக்கப்பட்டன, பிரசுரிக்கப்பட்டன. இத்தகைய சூழலில்தான் 'தென்பகுதிகளில் துணிச்சலுடன் தமிழை வளர்ப்பவர்கள்' என்று புகழப்பட்ட முஸலிம்களில் இருந்து உருவாகிய ஒரு எழுத்தளரின் நாவல் அதன்வட்டார மொழி புரியவில்லை என்ற குறிப்புடன் அவரிடமே திருப்பி வழங்கப்பட்டது.

II

கடந்த நூற்றாண்டின் பிற்கூறில் தமிழ்நாட்டு நாவல் இலக்கியத்தளத்தில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. தோப்பில் முகம்மது மீரான் என்ற முஸ்லிம் எழுத்தாளரின் நாவல்கள் ஒன்றன் பின் ஒன்றாக பிரசுரிக்கப்பட்டு, தமிழ் நாவல் இலக்கியத்தளத்தில் பலத்த அதிர்வுகளை ஏற்படுத்தின. இதுவரை காலமும் இலக்கியமாக்கப்படாதிருந்த தமிழக முஸ்லிம்களின் வாழ்க்கை முறைமைகளும் சமூகக்கட்டமைப்புக்களும் நம்பிக்கைகளும் தோப்பில் மீரானின் நாவல்களில் அவற்றின் அடியாழத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டன. அந்நாவல்களின் கதை சொல்லும் முறையும் வர்ணிப்புக்களும் சமூகப்பின்புலங்களும் தமிழ் நாவல் இலக்கியத்தில் புத்தம் புதிய தடத்தை ரம்மியமாக அடையாளப்படுத்தின.

எனினும் தோப்பில் மீரானின் நாவல்கள் தமிழக இலக்கியவாதிகள் மற்றும் விமர்சகர்களில் ஒரு பிரிவினருக்கு பெரும் சங்கடத்தை ஏற்படுத்தின. அவர்களினால் அந்த நாவல்களைப் புரிந்துகொள்ளமுடியவில்லை குறிப்பாக அவற்றில் கையாளப்பட்டிருந்த மொழிவழக்கு பெரும்பாலும் புரிந்து கொள்ளக்கடினமானதாக அமைந்திருந்தது. 'சுபமங்களா' சஞ்சிகையில் எழுத்தாளர் சுஜாதா தோப்பில் மீரானின் 'கூனன் தோப்பு' நாவலை முன்வைத்து ஒரு விமர்சனத்தை எழுதியிருந்தார். ஒரு இலக்கிய விமர்சனம் அக்கறைகொள்ளக்கூடிய விடயங்களையும் கடந்து அந்நாவலில் அடிக்குறிப்பு இடப்பட்டுள்ள தமிழல்லாத சொற்களின் எண்ணிக்கை எத்தனை என்று கணக்கிடும் அளவுக்கு அந்த விமர்சனம் விரிந்திருந்தது. இறுதியில் 'இத்தகைய நாவல்கள் வந்துதான் தமிழ் இலக்கியத்தை உத்தாரணப்படுத்த வேண்டும் என்ற அவசியமில்லை' என்று அவர் முடித்திருந்தார்.

III

'சோலைக்கிளி' - இலங்கைத்தமிழ் கவிதை மரபில் புதிய திருப்பத்தை ஏற்படுத்திய முஸ்லிம் கவிஞர். தமிழ்க்கவிதைப் பரப்பு இதுவரை அனுபவித்திராத படிமங்களையும் குறியீடுகளையும் மொழி வழக்கையும் அற்புதமாகக் கையாள்கின்ற கவிஞர். கவிதை அனுபவிப்பில் பரவசத்தையும் உணர்வெழுச்சிகளையும் அதிசயிக்கத்தக்கவிதத்தில் கிளர்த்துவதில் பெருவெற்றி பெற்றிருக்கிறார் சோலைக்கிளி. பிரதேச மொழிவழக்கை மிகுந்த திறனுடன் கவிதைக்குள் கையாண்டு ... தமிழ்க்கவிதைப் பரிமாணத்தின் முன்னோடியாக ... திகழ்கின்றார்.

எனினும் கவிஞர் முருகையன் போன்றோருக்... சோலைக்கிளியின் கவிதைகள் புரியவில்லை. முக்கியமாக அவர் பயன்படுத்துகின்ற மொழிவழக்கு சங்கடத்தையும் நெருடல்களையும் அவர்களுக்கு ஏற்படுத்துகின்றன. சோலைக்கிளியின் கவிதைகள் ஒரு புதிய கவிதைப் பரிமாணத்தின் முன்னோடி எனக்கொள்ளக்கூடிய தகைமையைப் பெற்றவை அல்ல என்று மு.பொன்னம்பலம் கடும் பிரயத்தனத்துடன் நிருபித்திருக்கின்றார்.

முஸ்லீம்களினால் உருவாக்கப்படுகின்ற இலக்கியப் பிரதிகள், தமிழ் விமர்சகர்களினால் மதிப்பிடுகின்ற முறைமை பற்றி விளக்குவதற்கு மேலுள்ள உதாரணங்களை சோற்றுப்பதமாகக் கொள்ள முடியும். தமிழ்நாட்டின் தெற்கு எல்லையிலிருந்து இலங்கையின் தெற்கு எல்லைவரை வெளிப்படுகின்ற முஸ்லிம் இலக்கியப் பிரதிகள் மீதான விமர்சனங்களில் ! புரியவில்லை என்பது அடிப்படைக்கண்டனமாக இழைகோர்த்திருப்பது ஒருமுக்கிய அவதானமாக அமைந்திருக்கின்றது.

இந்தக் கண்டனம் உண்மையே. முஸ்லிம்கள் பாவிக்கின்ற தமிழல்லாத பிறமொழிச் சொற்களும் மொழிவழக்குகளும் பிற சமூகப்பிரிவினர்களுக்கு புரிந்துகொள்ளக்கடினமாக இருக்கின்றன. தொடர்ந்தும் அவ்வாறுதான் இருக்கும். முஸ்லிம்களைப்பொறுத்தவரை இத்தகைய சொற்களும் மொழி வழக்குகளும் அவர்களின் வரலாற்றுடனும் வாழ்வுடனும் இறுகப்பிணைந்திருப்பவை இயற்கையான அம்சங்கள் போன்று கூடவருபவை... இவற்றிலிருந்து முஸ்லிம்களைப் பிரிக்கமுடியாது.

இது முஸ்லிம்களுக்கு மட்டும் அமைந்திருக்கின்ற ஒரு விதிவிலக்கான தனிப்பண்பு அல்ல. மாறாக இது சகல சமூகங்களிலும், சமூகப்பிரிவுகளிலும் காணப்படுகின்ற பொதுவான பண்பு. ஒவ்வொரு சமூகத்தினரும் சமூகப்பிரிவினரும் தமக்கேயுரித்தான பிரத்தியேக மொழிவழக்கை கொண்டிருப்பதோடு, தமிழல்லாத பிறமொழிச் சொற்களையும் பயன்படுத்துகின்றவர்களாகவே இருக்கின்றார்கள். குறிப்பாக மதம் சார்ந்த நிகழ்வுகளிலும் சடங்குகளிலும் வேற்றுமொழிச் சொற்கள் தாராளமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இத்தகைய மொழிவழக்குகளும் சொற்களும் அந்தந்த மக்களுக்கிடையிலான தனிப்பட்ட தொடர்பாடல்களில் மட்டும் பயன்படுத்தப்படுவதில்லை. கூடவே அவர்களின் இலக்கியப்பிரதிகளிலும் இவை பயன்படுத்தப்படுகின்றன. கொங்குத்தமிழ், மதுரைத்தமிழ், மெட்ராஸ் தமிழ், பிராமணத் தமிழ், யாழ்ப்பாணத் தமிழ், மட்டக்களப்பு தமிழ்....... எனப் பரந்த வட்டார தமிழ்வழக்குகள் இலக்கியப் பிரதிகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றோடு சமஸ்கிருதம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி, ஆங்கிலம்.... போன்ற பிறமொழிச் சொற்களும் தமிழ் இலக்கியப் பிரதிகளில் வெகு லாவகமாக கையாளப்படுகின்றன.

இவ்வாறான பிரதிகள் மீதான மதிப்பீடுகளில் இந்த வட்டார வழக்குகளோ அல்லது அவற்றில் கையாளப்படுகின்ற பிறமொழிப்பதங்களோ புரியவில்லை என்று விமர்சிக்கப்படுவதில்லை. பதிலாக, இவை பயன்படுத்தப்பட்டிருப்பதன் நேர்த்தி, கிராமிய மணம் எதார்த்தம்.... என்பவை பெரிதும் சிலாகிக்கப்பட்டிருக்கின்றன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆங்கிலம் மற்றும் ஹிந்திச்சொற்களின் பிரயோகிப்பானது, தமிழின் தூய்மையைக் கறைபடுத்துகின்றது என்ற அர்த்தத்தில் விமர்சிக்கப்படுகின்றதே தவிர அவை புரியவில்லை என்பதால் அல்ல.

இத்தகைய தமிழ் இலக்கியப் பிரதிகளின் வாசகர் பரப்பில், முஸ்லிம்கள் கணிசமான பங்கைக் கொண்டிருக்கின்றார்கள். தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் மற்றும் ஏனைய நாடுகளிலும் தமிழ் இலக்கியப் பிரதிகளின் ஆர்வமிக்க வாசகர்களில் முஸ்லிம்கள் ஒரு முக்கிய பிரிவினராக அமைகின்றார்கள். ஒரு பிரதி எத்தகைய மொழிவழக்கைக் கொண்டிருக்கின்ற போதிலும் பிறமொழிப்பிரயோகங்களைக் கொண்டிருக்கின்ற போதிலும் அவற்றைப் பெருவிருப்புடன் வாசித்துப் புரிகின்ற ரசிகப் பண்பையும் உழைப்பையும் முஸ்லிம்கள் வெளிப்படுத்தி வந்திருக்கின்றார்கள். எந்த ஒரு நிலையிலும் அவர்கள் இவற்றை நிராகரித்ததோ அல்லது புரியவில்லை என்பதை கண்டனமாகமுன்வைத்ததோ இல்லை

ஆனால் இதற்கு மாறாக முஸ்லிம்களின் இலக்கியப் பிரதிகள் மீதான மதிப்பீடுகளும், வாசிப்பும் அவற்றில் பயன்படுத்தப்பட்டிருக்கின்ற வட்டார மொழிவழக்குகளுக்காகவும், பிறமொழிச்சொற்களுக்காகவும் விமர்சிக்கப்படுகின்றன, நிராகரிக்கப்படுகின்றன. முஸ்லிம்களின் இலக்கியப் பிரதிகளைப் பொறுத்தவரை ஒரு இலக்கியப் பிரதியை வாசிப்பதில் வெளிப்பட வேண்டிய ரசிகப்பண்பையும் உழைப்பையும் பெரும்பாலான தமிழ் வாசகர்களும், தமிழ் விமர்சகர்களும் வெளிப்படுத்த முடியாதிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இத்தகைய போக்குகள் கவனத்துடன் மதிப்பிடப்படவேண்டியவை. இங்கு 'புரியவில்லை' என்பதற்கு அப்பாலும் உள்ளடங்கியிருக்கின்ற அம்சங்கள் அக்கறைக்குள்ளாக்கப்பட வேண்டியவை. தமிழ் வாசகர்பரப்பிலும் மதிப்பீட்டு முறையிலும் நிறுவப்பட்டிருக்கின்ற வரையறைகள், முஸ்லிம் இலக்கியப் பிரதிகளினால் உடைக்கப்படுகின்றன என்ற அடிப்படை விடயத்திலிருந்து பரிசீலனை தொடங்கப்படவேண்டும்.

சொற்கள் என்பவை வெறுமனே ஒலிக்குறிகளின் இணைப்புக்கள் அல்ல கூடவே அவை ஒரு சமூகத்தின் நூற்றாண்டுகால அனுபவங்களின் சேகரங்களாகவும் விளங்குகின்றன. ஒரு சொல்லில் உள்ளடங்கியுள்ள அர்த்தம், அர்த்தங்கள் அந்த சமூகத்தின் வரலாற்றுடனும் நம்பிக்கைகளுடனும் பிணைந்தவை. எனவே ஒருவர் தான் விரும்பியவாறெல்லாம் சொற்களைப் பயன்படுத்தி விடமுடியாது. சொற்களுக்கான இலக்கணவிதிகள் மட்டுமல்ல, அவற்றில் பொதிந்துள்ள அர்த்தங்களும் கூட சொற்களைப்பிரயோகிப்பதில் கண்டிப்பான வரையறைகளை நிர்ப்பந்திக்கின்றன.

ஒரு புதிய சூழலில், புதிய சமூகப்பிரிவினர் குறித்த ஒரு மொழியைப் பயன்படுத்தும்போது, அம்மொழியிலுள்ள சொற்களிற்குள் ஏற்கனவே பொதிக்கப்பட்டுள்ள அர்த்தங்களினாலும் அவற்றிற்குரிய இலக்கண விதிகளினாலும் கட்டுப்படுத்தப்படுகின்றார்கள். புதிய வாழ்நிலைமைகளினால் உருப்பெறுகின்ற புதிய சிந்தனைகளையும் கருத்தாக்கங்களையும் உரிய முறையில் வெளிப்படுத்துவதற்கு ஏற்கனவே உள்ள சொற்கள் பற்றாக்குறையுடன் வரம்பிடுவதை அவர்கள் உணர்கின்றார்கள். எனவே தமது எண்ணங்களையும் உணர்வுகளையும் துல்லியமாக வெளிப்படுத்தும் விதத்தில் புழக்கத்தில் உள்ள சொற்களுக்கு புதிய அர்த்தங்களைப் பொதிக்கின்றார்கள். புதிய சொற்களை உருவாக்குகின்றார்கள்.

இவ்வாறான கிளர்ச்சிமிக்க சூழலில் இலக்கணவிதிகள் நெகிழ்த்தப்படுகின்றன. இலக்கியப்பிரதிகளின் வடிவங்கள் மாறுகின்றன.

எனவே ஒரு இலக்கியப் பிரதியை அணுகும்போது அதிலுள்ள சொற்களில் மட்டும் அக்கறை கொள்வது போதாதாகின்றது. கூடவே அப்பிரதியின் சமூகப்பின்புலம், அதன்வட்டார மொழிவழக்கு அது சாரப்படுத்துகின்ற நம்பிக்கைகள், மரபுகள்... எனப் பலப்,பல அம்சங்கள் அக்கறைக்குள்ளாக்கப்பட வேண்டும். 'பிரதியின் ஆசிரியர்' இறந்து விட்டார் என்ற கருத்து மேலோங்கியிருக்கின்ற இன்றைய சூழலில் ஒரு பிரதியின் மீதான வாசிப்பானது அதன் ஆசிரியரின் முன்னுரையிலோ அல்லது வாக்குமூலத்திலோ தங்கியிருப்பதிலிருந்து விலகி வருகின்றது. எனவே இலக்கிய பிரதியை அணுகும்போது பரந்த அறிவு மற்றும் அனுபவதரிசனங்களுடன் கூடிய சுயநுழைவு அவசியமாகின்றது.

எனினும் தமிழ்ச்சூழலில் இத்தகைய அணுகுமுறை இன்னமும் ஒரு இலக்கிய கோட்பாடாக ஸ்தாபிக்கப்படவில்லை. குறிப்பாக முஸ்லிம்களின் இலக்கியப் பிரதிகள் தொடர்பில் மிக எழுந்தமானதும், ஆர்வத்தன்மையற்றதுமான அணுகுமுறைகளே பொதுவில் மேலோங்கியிருக்கின்றன. தமக்கென தனித்துவமான வாழ்க்கைமுறைகள், பிரத்தியேகமான நம்பிக்கைகள், சடங்குகள், கலாசார, பண்பாட்டு நிகழ்வுகள்...... என்பவற்றைக் கொண்டிருக்கின்ற முஸ்லிம் சமூகத்தின் வாழ்வியல், உளவியல், உணர்வு நிலை வெளிப்பாடுகள் இலக்கியப்பிரதிகளில் சாரப்படுத்தப்படுகின்ற போது அவற்றின் மீதான வாசிப்பும் மதிப்பீடுகளும் இத்தகைய தனித்துவங்களில் முதன்மையான அக்கறைகளைக் கொள்வது அவசியமாகின்றது.

தமிழ் இலக்கியத் தளமும் வாசிப்புப் பரப்பும் முஸ்லிம்களின் இலக்கியப் பிரதிகள் தொடர்பாக வெளிப்படுத்துகின்ற உதாசீனப்போக்கை, அறியாமை சார்ந்த விடயமாகக் குறுக்கி விட முடியாது. இங்கு திட்டவட்டமான முறையில் அதிகார மனோபாவம் தொழிற்படுவதை அடையாளம் காணமுடியும். தமிழ் மொழியின் குறிப்பிட்ட வட்டார வழக்கு, வழக்குகளை நியமமாக்கி, அவற்றைக் கொண்டிருக்கின்ற சமூகப்பிரிவினர்களின் வாழ்வியல் மற்றும் உளவியல் அம்சங்களை பேசுபொருள்களாக்குவதன் மூலம், ஏனைய வட்டார மொழிவழக்குகளும், சமூகப்பிரிவினர்களும் இலக்கிய ரீதியில் முக்கியத்துவமற்றவர்களாக்கப்படுகின்றனர். தமிழ்இலக்கியம் குறித்து உரையாடப்படும்போதெல்லாம், நியம மொழிவழக்குகளும் அவற்றைக் கொண்டிருப்பவர்களுமே அக்கறைக்குள்ளாக்கப்படுகின்றார்கள். இவையும் இவர்களுமே தமிழ் இலக்கியத்தின் சாரமாகக் கொள்ளப்படுகின்றன.

இந்த சட்டகத்திற்கு வெளியே உருவாக்கப்படுகின்ற இலக்கியப் பிரதிகள் அவற்றின் முழுமொத்த அர்த்தங்களுடன் தமிழ் இலக்கியத்திற்குள் உள்வாங்கப்படுவதில்லை. அவை ஓர இலக்கியங்களாகவும் சிறுகுறிப்புக்களுக்கு மட்டுமே உரியவைகளாகவும் கருதப்படுகின்றன. குறிப்பாக முஸ்லிம்களினால் உருவாக்கப்படுகின்ற இலக்கியப்பிரதிகள் தீவிர உதாசீனப்படுத்தலுக்கு உள்ளாக்கப்படுகின்றன. அதிகாரம் என்பது குறிப்பிட்டவற்றை நியமமாக்கி, ஏனையவற்றை கட்டுப்படுத்துவது மட்டுமல்ல, கூடவே உதாசீனப்படுத்தலும் இணைந்ததுதான் என்பதைப்புரிந்து கொள்ளும்போது, முஸலிம்களின் இலக்கியப்பிரதிகள் தொடர்பாக, தமிழ் மதிப்பீட்டுத்தளத்திலும் வாசகர் பரப்பிலும் நிலவுகின்ற அதிகாரப்போக்கை தெளிவாக அடையாளம் காண முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இரு ஈராக்கிய கவிதைகள்

தமிழில் - சி.சிவசேகரம்

## ஜைகூர் நினைவுகள்

ஜைகூர், உன் தெங்கு மர நிழல்கள்
முகில்கட்கும் கடற்கரையிற்
துயிலும் நீருக்கும் மேலாக எழுகிற
விடியலினளவு பசுமையானவை.
விளையாடிக் களைத்த சிறுவனின்
விழிமடல்கள் போன்றவை உன் நிழல்கள்.
என் ஆன்மாவில் ஊற்றெடுக்கும்
கனவொன்றன் நடுக்கத்தை நான் உணருமாறு
உன் நீர்வீச்சின் நிலவொளியை என் விழிகள்
தாரையாய் வீச நான் ஏங்குகிறேன்.
நீ நிழல்களாலும் மலர்களாலும்
பறவைகளாலும் ஆன ஒரு நீரூற்று.

ஜைகூர், உன் நிழல்கள்
தாகத்தாற் தவிக்கும் என் ஆன்மாவுக்கு நீர் பெய்து
என் மனதில் ஓடுஞ் சுனைகள்

உன் நிழல்களின் கீழ்ப்
பயணமாதல் பற்றியும் காற்றையுங் கடலையும் பற்றிக்
கனவு கான்கிறேன்.....

ஓங்கும் அலைகளோடு உன் நிழல்கள்
வீழும் தாரகையொன்றின் துண்டங்கள் போன்ற,
கடற் கன்னியின் கைகள் ஏந்தும்
இறந்தோர்க்கான விளக்குகள் போன்ற
முரல் மீனின் விழிகட்கு ஒளியூட்டுகின்றன.

ஜைகூர் என் எலும்புகளைப் பொறுக்கியெடு.
என் சவப் போர்வையின் தூசைத் தட்டிவிடு
நெருப்பை நோக்கி விரிந்திருக்கும் என் இதயத்தை
நீரோடையிற் கழுவியெடு.
என் நாடே, உனக்காக இல்லாது போயின்
என் பெருமூச்சுக்களையும் கவிதைகளையும்
சுமந்து செல்லுங் காற்றை
என் தந்திகள் அறிந்திரா
உனக்காக இல்லாது போயின்
என் விதி கடவுளின் முகமாக இருந்திராது.



Bாட்ர் Bகிர் அல்ஸய்யB
Badr Bhakir alsayyab
(1924 - 1964)
(Jaikur ~ கவிஞரின் ஊர்)

www.tamilarangam.net

# புத்தாண்டு

புத்தாண்டே எம் இல்லங்கட்கு வராதே;
எம் ஆவிகள் உலகொன்றின் எதிரொலிகள்.
மனிதர் எம்மைக் கீழே போட்டு விட்டனர்;
இரவும் பகலும் எம்மை விட்டு நழுவி விட்டன;
விதி எம்மை மறந்து விட்டது.
ஏக்கம் இழந்து, நம்பிக்கை இழந்த எம்மிடம்
ஞாபகங்கள் இல்லை கனவுகளும் இல்லை.
அமைதியான எம் முகங்கள் தம் வர்ணமிழந்து
சுடர்தல் ஒழிந்துள்ளன.
காலத்திலிருந்து ஒன்றுமில்லாமைக்குப் பின்வாங்கும்
மனவருத்தத்தின் கொட்டுதலை உணராது
மென்மையான மாளிகைகளிற் தொடர்ந்தும்வாழ்கிறோம்.

புத்தாண்டே போய்விடு.
நாம் விழித்தெழ வாய்ப்பேயில்லை:
எமது நரம்புகள் நாணலால் ஆனாவை;
எமது குருதியிற் கோபம் பாய்வது ஓய்ந்து விட்டது.
ஆன்மா வெடித்தெழக் கூடுமென எவர் சொன்னார்?
நாம் இறந்துபோய்ப், புதைகுழிகளால்...... நிராகரிக்கப்பட்டிருக்க வேண்டுகிறேன்.
காலத்தை ஆண்டுகளில் அளக்க எமக்கு ~ இயலுமாயிருந்திருப்பின்
ஒரு இடத்திற்கு உரியவராய் இல்லாமை ஏதென நாம் ~ அறிந்திருப்பின்
பித்தாவது பற்றி நாம் அஞ்சி இருந்திருப்பின்
பயணம் நம் வாழ்வைப் பிளந்ததாய் இருந்திருப்பின்
பிற மாந்தர் போல இறப்பதற்கு நமக்கு இயலுமாயிருந்திருப்பின்.



நZIக் அல் - மலைகா
Nazik al - malaika
ஈராக்கிய பெண் கவிஞர்
(பி. 1923)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விஞ்ஞானம், இயற்கை, பால் வேறுபாடு

வந்தனா சிவா

தமிழில் - திருவேணி சங்கமம்



**அறிமுகம் : வந்தனா சிவா**

பௌதீக விஞ்ஞானி, தத்துவஞானி, சூழலியலாளர், பதிப்பாசிரியர், நூலாசிரியர் என்ற பல தளங்களில் அறியப்பட்ட கலாநிதி வந்தனா சிவா அவர்கள் சூழல், பெண்ணியம் சார் பிரச்சனைகளின் களப்பேராளியாகவும் தொழிற்படுபவர். இந்தியாவில் கடைப்பிடிக்கப்படும் விஞ்ஞானம், தொழிநுட்பம், இயற்கை வளங்களின் ஆய்வுக்கொள்கைகள் பற்றிய ஆய்வு நிறுவனம் ஒன்றை நிறுவி அதன் இயகுநராக பணிபுரிந்து வருகிறார். மேலும் உயிர்ப்பல்வகைமையையும் விவசாயிகளின் உரிமையையும் பாதுகாப்பதன் பொருட்டாக 'நவதான்ய' என்ற பெயரில் இயக்கம் ஒன்றைத் தோற்றுவித்து வழிநடத்துகிறார். நோபல் பரிசுக்கு நிகரானதெனக் கருதப்படும் 'ரைற்லிவ்லிகூட்' என்ற பரிசு இவருக்கு வழங்கப்பட்டுள்ளது. பல கருத்தாழம்மிக்க நுல்களின் ஆசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் உள்ள டாக்டர் வந்தனாசிவா அவர்களின் Staying Alive என்ற நூலிலிருந்து இக்கட்டுரை மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

மேலாதிக்கம், சீரழிவு, வன்முறை, அடக்குமுறை ஆகியவற்றை இலட்சணங்களாகக் கொண்ட ஆணாதிக்கம் துர் அபிவிருத்தியாக(Mal development) வெளிப்படுகிறது. அது பெண்குலத்தினதும் இயற்கையினதும் இயல்புகளைத் தரம் குறைத்து அவைகளை வெறுமையாக்குகின்றது. இதற்கு ஓர் அரசியல் சவாலாக பெண்ணியக் கோட்பாடுகளின் மீளெழுச்சி அமைந்துள்ளது. இக்கோட்பாடுகளை மையமாகக் கொண்ட அரசியல் நடவடிக்கைகள், இன்றைய பொருளாதார அரசியல் அடிப்படைகளுக்கு மாத்திரமல்லாது உயிர் வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக உள்ள விஞ்ஞானத்துக்கும் ஒரு சவாலாக தோன்றியுள்ளன.

பகுத்தறிமுறை ரீதியான விஞ்ஞான சிந்தனைகளும் செயல்ப்பாடுகளும் பலப்படுத்திய ஓர் அறிவுசார் அடித்தளத்தை இந்த துர் அபிவிருத்தி கொண்டுள்ளது. இத்துர் அபிவிருத்தியின் ஒவ்வொரு செயல்த்திட்டமும் ஒருமைப்படுத்தல், கட்டுப்படுத்தல், மையப்படுத்தல் ஆகிய பகுத்தறிமுறைச் செயல்பாடுளூடாக நிகழ்த்தப்படுகின்றது. இதன் போது பெண்கள் உற்பத்திப் பணிகளிலிருந்து புறம் தள்ளப்படுகின்றனர். இச்செயல் விஞ்ஞான ரீதியானது என வலியுறுத்தப்பட்டு சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது. மேலும் இதன் ஒவ்வொரு செயலப்பாடும் இயற்கையை கூறுபோடுவதாக உள்ளது. விஞ்ஞான ரிதியான விவசாயம், விஞ்ஞான ரீதியான மிருகவளர்ப்பு, விஞ்ஞான ரீதியா முகாமைத்துவம் என்ற விதவிதமான தினிசுகளில் அபிவிருத்தி அறிமுகப்படுத்தப்படுகின்றன. இப்பகுத்தறிமுறை விஞ்ஞானத்தின் இன்றைய உலகளாவிய போக்குகள் வகை வேறுபாட்டையும் ஒன்றோடொன்று தங்கி நிற்கும் இயல்பையும் தன்னகத்தே கொண்ட இவ் உலகில் வன்முறையையும் அழிவையும் வருவிக்கின்றன. இவற்றுக்கு ஓர் எதிர் மாதிரியை பெண்ணியக் கோட்பாடுகள் தோற்றுவித்து வருகின்றன. இது இம்சையிலிருந்து அகிம்சைக்கும், அழிவிலிருந்து ஆக்கத்திற்கும், வரட்சியிலிருந்து வளத்திற்கும், ஒருமையிலிருந்து பன்மைக்கும், பகுதியிலிருந்தும் பகுப்பிலிருந்தும் முழுமைக்கும் தொகுப்புக்கும் சூழல் மாற வழிவகுக்கின்றது. இந்த வகையில் இது பெண்கள் மீதும் இயற்கை மீதும் நடாத்தும் வன்முறையை மூலாதாரமாகக் கொண்ட "அபிவிருத்திக்கு" மாற்றானது. இன்னும் ஓர் ஆழ்ந்த தளத்தில் துர்அபிவிருத்தி நிலை கொண்டுள்ள விஞ்ஞான அறிவே வன்முறையின் பிறப்பிடமாகும் இத் துர்அபிவிருத்தியைப் போல இவ்விஞ்ஞான அறிவும் ஆணாதிக்கத்திற்குட்பட்டது. தனிச்சிறப்புக்குரிய பெண்பாலாரை மாத்திரமல்லாது இயற்கையின் செயற்பாடுகளையும் ஒத்திசைவையும் குழப்ப முனைகின்றது. அதே வேளை அவைகளை பேணிப்போற்றும் முழுமைசார் அறிதல் முறைகளையும் ஒதுக்கி விடுகின்றது.

## ஆணாதிக்க வாதத்தின் வெளிப்பாடாக நவீன விஞ்ஞானம்

நடுநிலைமை, உலகளாவியதன்மை மற்றும் தர்க்க ரீதியாக இயற்கை பற்றிய முடிவுகளை எடுத்தல் "ஆகிய பண்புகளால் நவீன விஞ்ஞானம் மற்ற அறிகை முறைமைகளையெல்லாம் ஒதுக்கி விட்டு முன்னணிக்கு வந்துள்ளது. சார்பற்றதாகவும் அனைத்துலகப் பொதுவானதா கவும் தன்னை வெளிக்காட்டிய பொழுதிலும் அதன் முதன்மையான வெளிப்பாடான பகுத்தறிமுறை அல்லது. யாந்திரீக [1]கட்டளைப்படிமம் ஒரு குறிப்பிட்ட மக்கள் குழாத்தின் பிரதிபலிப்பாகும். விஞ்ஞானப்புரட்சியின் காலகட்டமென்று விதந்துரைக்கப்படும் பதினேழாம் பதினெட்டாம் நூற்றாண்டுகளில் மேலோங்கி வந்த மேற்கு மனிதனின் விஷேஷ வெளிப்பாடாகும். "அனைத்துலக வாழ்விகளின் சகவாழ்வுக்கானதே" விஞ்ஞானம் என்று வலியுறுத்தப்பட்ட போதிலும் அது அவ்வாறு முழு மானிடத்தின் விடுதலைச் சக்தியாக உருவெடுக்கவில்லை என்றும் அது பெண்பாலையும் இயற்கையையும் அடக்குதலை இன்றியமையாமையாகக் கொண்டியங்கும் ஆணியவாதம், பிதாமுதன்மை வாதம் போன்றவற்றின்

1. விஞ்ஞானிகள் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொது உடன்பாடு கட்டளைப் படிவமாகும். இதன்படி பொதுவான நம்பிக்கைகள், முறைமைகள், நோக்கங்கள், கொள்கைகள் வழியே விஞ்ஞானம் நகர்கிறது. இவைகள் மறுமுனையாக விஞ்ஞானிகளை ஒரு சமூகமாக இயங்க வைக்கிறது. தமது கட்டளைப் படிமத்துக்கு மாறானவைகளை எதிர்நோக்க நேரின் விஞ்ஞானிகள் அவைகள் தமது துறையின் எல்லைக்கு அப்பாற்பட்டது என்றோ இயற்கையதீதம் (meta physics) என்றோ கூறி தட்டிக் கழித்து விடுவர். கட்டளைப் படிமத்தின் மாற்றம் என்பது சாதாரண நிகழ்வல்ல. மொழிபெயர்ப்பாளர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளிப்பாடு என்றும் மிக அண்மைக்காலமாகப் பெண்ணியப் புலமையாளர்கள் விளங்கிச் சொல்லி வருகின்றனர். மேலும் ஹார்டிங் என்பவர் நவீன விஞ்ஞானத்தை மேற்கத்திய பூர்ஷ்வா, ஆணாதிக்க வாதத்தின் வெளிப்பாடு என்று குறிப்பிடுகின்றார். அவரின் கூற்றுப்படி: "மனிதகுலத்தின் ஒரு குறிப்பிட்ட பிரிவினரான வெள்ளையின நடுத்தரவர்க்க ஆண்பாலாரால் விஞ்ஞானம் உற்பத்தி செய்யப்பட்டது. நவீன விஞ்ஞானத்தின் தந்தையர்கள் பால் வேற்றுமை கொண்ட மொழிப் பிரயோகத்தைப் பயன்படுதினர். அவர்கள் ஆணியவாதத்திற்கு இசைவுடைய தத்துவநோக்கை சார்ந்திருந்தனர் என்பவையெல்லாம் மிகவும் தெளிவானவை. இதனால் அவர்கள் தங்களின் முன்னவர்களின் சாதுவான போக்கிலிருந்து வேறுபட்டனர். இந்த ஆண்மைப்பண்பு இயற்கையைஅடக்கி அதை மனிதனுக்கு சேவகம் புரியும் அடிமையாக்க அவர்களைத்தூண்டியது."

நவீன விஞ்ஞானத்தின் தந்தையாகவும் தொழிற்துறை விஞ்ஞானங்கள் மற்றும் ஆய்வுகூட நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு கால்கோளிட்டவராகவும் கொண்டாடப்படும் பேகனின் (1561-1626) நடவடிக்கைகளுக்கு பின்னால் அரசசமூகத்தின் ஒத்துழைப்பும் ஒத்தாசையுமிருந்தன. ஆனால் நவீன விஞ்ஞானத்துக்கும் அதன் நிறுவனங்களுக்கும் அவரின் பங்களிப்புக்கள் விமர்சனத்துக்குரியன. இயற்கை, பெண், ஒதுக்கப்பட்ட

> **மனிதகுலத்தின் ஒரு குறிப்பிட்ட பிரிவினரான வெள்ளையின நடுத்தரவர்க்க ஆண்பாலாரால் விஞ்ஞானம் உற்பத்தி செய்யப்பட்டது. நவீன விஞ்ஞானத்தின் தந்தையர்கள் பால் வேற்றுமை கொண்ட மொழிப் பிரயோகத்தைப் பயன்படுதினர். அவர்கள் ஆணிய வாதத்திற்கு இசைவுடைய தத்துவநோக்கை சார்ந்திருந்தனர் என்பவையெல்லாம் மிகவும் தெளிவானவை. இதனால் அவர்கள் தங்களின் முன்னவர்களின் சாதுவான போக்கிலிருந்து வேறுபட்டனர். இந்த ஆண்மைப் பண்பு இயற்கையை அடக்கி அதை மனிதனுக்கு சேவகம் புரியும் அடிமையாக்க அவர்களைத்தூண்டியது.**

குழுக்கள் என்பவைகளின் கண்ணோட்டத்தில் பேகனின் செயற்பாடுகள் மானிடம் சார்ந்ததல்ல. அவை ஐரோப்பிய, மத்தியதர வர்க்க ஆண்தொழில் முனைவர்களின் நலன் ஓம்பியதாகும். இதன் பொருட்டாக மனித அறிவும் அதிகாரமும் விஞ்ஞானத்தில் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன.

ஆணிய வெளிப்பாட்டை மையமாகக் கொண்ட பேகனின் பரிசோதனை முறைமை ஆண்-பெண், மனம்-சடம், புறவயம்-அகவயம், அறிவு-உணர்வு என்று இருகவர்ப்பிளவு கொண்டது. இயற்கை, பெண்கள், மேற்கு சாராஅம்சங்களின் மீது விஞ்ஞானம் ஆதிக்கம் புரிய வழிசெய்வது. அது நடுநிலையானதோ, புறவயமானதோ அல்லாமல் ஆணாதிக்க வாதத்தின் ஓர் உபாயமாகும். இயற்கையைக் கட்டுப்படுத்தி கையாண்டு அதனூடாக கருதுகோள்களை பரிசோதித்தல் என்பதும், அதனை மீண்டும் மீண்டும் செய்தல் என்பதும் ஒரு தெளிவான பாலியல் உருவகத்தைக் கொண்டுள்ளன. இதில் இயற்கை பெண்ணுக்கும் அவள் மீது ஆண்புரியும் வன்செயல்கள் சித்திரவதை, பாலவதை ஆய்வுகளுக்கும் உருவகிக்கப்பட்டுள்ளன. இம்மாதிரி வடிவம் விஞ்ஞானத்தின் மதிப்பை உயர்த்துவதால் முற்போக்கானது என்று கருதப்பட்டது. இயற்கைப் பொருட்கள் தம் இயல்பான நிலையைவிட திரிந்த தோற்றத்தையே கலைகளிற் காட்டுகின்றன என்று பேகன் கூறினார்.விஞ்ஞான அறிவும் பொறிகளின் புத்தாக்கமும் மனிதனை இயற்கையைச் சார்ந்து வாழச் செய்யாமல், அதை அடக்கி வெற்றிவாகை சூடி அதன் அடித்தளங்களையே ஆட்டம் காணச் செய்துவருகின்றன.

1951ல் ∴பரிங்டேன் என்பவரால் மொழி பெயர்க்கப்பட்ட (Tempores partus or the masculine birth of time) என்ற நூலில் ஆசீர்வதிக்கப்பட்ட இனங்களின் நாயகர்களும், மனிதர்களும் இயற்கை மீதும் சமூகத்தின் மீதும் மேலாண்மை செலுத்துவார்கள் என்ற தனது உறுதியான நம்பிக்கையை பேகன் வெளியிட்டார். நூலின் தலைப்புப்பற்றி வியாக்கியானிக்கும் ∴பரிங்டன் பெண்ணை பிரதி செய்கின்ற- பலவீனமும் மென்மையும்- கொண்ட பழைய விஞ்ஞானம் புதிய ஆண்மை மிக்க விஞ்ஞானத்துக்கு பாய்வதையே அது சுட்டுகிறதென்கிறார். அதுதான் பேகன் கட்டியம் கூறிய விஞ்ஞானப் புரட்சியாகும்.

'நியு அற்லாண்ரிஸ் என்னும் நூலில் பேகன் தனது இலட்சிய சமூகமான பென்சலத்தைப் பற்றி விபரிக்கின்றார். அங்கே உள்ள சொலமனின் வீடு என்னும் ஆய்வு நிறுவனத்தில் வாழும் ஆண்விஞ்ஞானிகள் அச்சமூகத்தை வழிநடத்துகின்றனர். எவை எவை வெளிப்படுத்தப்படலாம் எவை எவை இரகசியமாக பாதுகாப்படவேண்டும் என்பவைகளை அவ்விஞ்ஞானிகளே தீர்மானிக்கின்றனர். மேலும் இயற்கை அங்கே உருக்குலைக்கப்பட்டு நிலை மாற்றம் செய்யப்படுகின்றது. இன்று புதிய உயிரித்தொழில் நுட்பத்தின் வளர்ச்சியால், பேகனின் எதிர்பார்ப்பான உற்பத்தியின் பொருட்டான இனப்பெருக்கம் சாத்தியமாகியுள்ளது. அதேவேளை பசுமைப் புரட்சியும் உயிரிப் புரட்சியும் வெறும் வாய்ப்பந்தலாகவே உள்ளன.

'மரங்களையும் செடிவகைகளையும் அவைகளின் இயல்பான பருவங்களை மீறி முன்னதாகவோ பின்னதாகவோ பூக்கவைக்க முடியும். அளவில் மிகுந்தும் மணம், நிறம், பருமன் ஆகிய அம்சங்களில் சிறந்தும் அவற்றின் பயன்களைப் பெற்றுக்கொள்ள முடியும்' இவைகளால் பேகனுக்கு இயற்கை தாய் போன்றவளாகத் தோன்றவில்லை. ஆதிக்க மனப்பான்மை கொண்ட ஆணின் மனப்படத்தில் உள்ள பெண்பிம்பம் போன்றவள். கரோலின் மேர்சென்ற் சுட்டிக்காட்டுவது போல இயற்கையின் பேணிவளர்கின்ற உயிர்வாழும் தாய் என்ற படிமம் மரத்துப்போன மந்தமான இலகுவில் கையாளக்கூடிய சடப்பொருள் என்று நிலை மாற்றம் செய்யப்பட்டதானது அன்று அதிகார பூர்வமாக வளர்ந்து கொண்டிருந்த முதலாளித்துவ சுரண்டலுக்கு ஏற்புடையதாக இருந்தது. ஏனெனில் தாய் என்ற படிமம் இயற்கையின் சுரண்டலுக்கு கலாசார ரீதியான தடையாகும். 'ஒருவன் தனது தாயைக்

2. இது பேகனின் முடிக்கப்படாத விஞ்ஞான நாவலாகும். அவரின் இறப்புக்குப்பின் 1627ல் வெளியிடப்பட்டது. இதில் விஞ்ஞானம் தொடர்பாக அவரின் தத்துவ நோக்கு வெளிப்படுகிறது. விஞ்ஞானிகளால் நெறிப்படுத்தப்படும் தனது இலட்சிய சமூகத்தை கற்பனையில் விபரிக்கிறார். அங்கே குளிர்சாதனப் பெட்டி, செயற்கைக் கனிப்பொருட்கள் கலக்கப்பட்ட நீர், தொலைபேசி, நீர் மூழ்கி விமானம் மற்றும் செயற்கையாக உருவாக்கப்பட்ட உயிரினங்கள் உள்ளதாக கற்பனை செய்கிறார். அவைகள் இன்று நடைமுறைச் சாத்தியமாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மொ.ர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொல்லத்துணியான், அவளின் வயிற்றை கிழிக்கான் அவளை முடமாக்கான் ஆனால் பேகனிய திட்டத்தால் உருவாக்கப்பட்ட நுணுக்கமான மேலாதிக்க நோக்குடைய கருத்துப்படிவங்களும் விஞ்ஞானப் புரட்சியும் இயற்கையைத் துகிலுரிவதற்கான தடைகளை நீக்கின, அதற்கான கலாசார இசைவாணையையும் வழங்கின.

"உயிர்ப்புடைய சேதனமான இயற்கை என்பதிலிருந்து வெறும் செத்த இயற்கை என்ற எண்ணத்துக்கு மாறியதே விஞ்ஞானப் புரட்சியின் மிகப்பரந்த செயல் விளைவுடைய தாக்கமாகும். எனெனில் இப்போது இயற்கை உயிரற்ற உணர்வற்ற துணிக்கைகளால் ஆனது என்று நோக்கமுடிந்தது. உள்சக்திகளிலும் பார்க்க வெளிச்சக்திகளால் இயக்கப்படுவது என்று கொள்ளப்பட்டதால் ஒரு இயந்திர சட்டகத்தின் மூலம் சீராக இயற்கையை கையாள முடிந்தது. மேலும் இவ் வியந்திர ஒழுங்கு கருத்துப்படிவமாகி அதிகாரத்தின் மதிப்பீடுகளோடு இணைந்து முதலாளித்துவத்தின் தேவைகளுக்காக ஒத்திசைக்க முடிந்தது"

நவீன விஞ்ஞானம் மனத்தை உறுத்தக்கூடிய வகையில் பால் வேறுபாடுற்றுள்ளதாகவும் பிதா முதன்மைவாத செயற்பாடுகளைக் கொண்டதாகவும் உள்ளது. கற்பழிக்கப்படும் பெண்ணாக இங்கே இயற்கை தோன்றுகின்றது. பெண்ணையும் அவள் பாலியல் உணர்வையும் கட்டியாழும் ஆணின் வீரியம் பொருந்திய செயல்களாக விஞ்ஞான நடவடிக்கைகள் உள்ளன. இதனால் பால் வேறுபாடு அகலிக்கப்படுகின்றது. மேலே ழுந்துவந்த கைத்தொழில் முதாலாளித்துவத்தின் அரசியல் தேவையான புதிய விஞ்ஞான தொழில்னுட்ப சக்தி இங்கே ஆணாதிக்க வாதமாக உள்ளது.

விஞ்ஞானத்தின் கருத்தியல் ஒரு புறம் இயற்கையை சீரழிக்க ஒப்புதல் அழிக்க மறுபுறம் ஆணில் தங்கி பெண் இருப்பதையும் அவனின் ஆளுகைக்கு உட்படுவதையும் நியாயமாக்குகின்றது. விஞ்ஞானமும் ஆணியமும் (masculinity) இணைந்து பெண் மீதும் இயற்கை மீதும் அதிகாரம் செலுத்துகின்றன. விஞ்ஞானத்தின் கருத்தியலும் பால் றேுபாடும் ஒன்றை யொன்று வலுவூட்டுகின்றன.

[3]சூனியக்காரிகளின் ஒழிப்பு என்ற சாக்கில் விஷயமறிந்தவர்களாகவும் நிபுணர்களாகவும் இருந்த பெண்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வெறியாட்டம் இரு நூற்றாண்டுகால விஞ்ஞானப் புரட்சியின் உடன் நிகழ்வாகும். கலிலியோவின் டயலொக் வெளிவந்த காலத்தில் உச்ச நிலை அடைந்து லண்டனில் றோயல் சொசைட்டியும் பாரிஸில் சயன்ஸ் அக்டமியும் நிறுவப்பட்ட காலத்தில் தளர்ந்து போனது. சூனியக்காரிகள் பற்றிய புலன் விசாரணை இயற்கை பற்றிய பூர்வாங்க ஆய்வுகளை குறியீடாக்குகின்றது. குற்ற ஒப்புதலுக்காக சித்திரவதை செய்யும் சாதனங்கள் விஞ்ஞான ஆய்வுக்கு அவசியமான பொறி உபகரணங்களாகும். விஞ்ஞானமுறைமை அதிகாரத்தை குறிப்பதாக உள்ளது. பேகன், ஹார்வி போன்றவர்களுக்கு கலாசார அரசியல் கற்பிதங்களைக் களைவதற்கும் நடைமுறைச் சார்பில் இயற்கையைக் கட்டமைத்து அதன் ஊடாக புதிய வகை அறிவையும் புதிய கருத்தியலையும் உருவாக்க பால் அரசியல் (Sexual politics) உதவியது.

றோயல் சொசைட்டி பேகனுடைய தத்துவார்த்தத்தால் உற்சாகம் அடைந்தது. அது அதனுடைய உறுப்பினர்களின் ஆண்சார் நடவடிக்கைகளில் வெளிப்பட்டது. 1664ல் றோயல் சொசைட்டியின் காரியதரிசி ஹென்றி ஓல்டன் பேர்க் மனிதனின் மனம் உண்மையுடன் இணையும்போது உயர்நிலை அடைவதால்ஆண்சார் தத்துவஞானம் ஒன்றைத் தோற்றிவிக்க வேண்டும் என்ற தனது உளளக்கி க்கையை வெளியிட்டார். கிளான் வில் (Glan vill) என்பவருக்கு விஞ்ஞானத்தின் நோக்கம் இயற்கையைக் கைப்பற்றும் வழிகளை அறிந்து அவளைச் சிறைப் பிடித்து அவள் மூலம் மனிதனின் தேவைகளை நிறைவேற்றி அவனின் ஏகாதிபத்தியம் ஒன்றை அவள் மீது ஸ்தாபிப்பதாக இருந்தது. தன்னுடைய உட்கூறுகளில் மறைத்து வைத்திருக்கும் இரகசியத்தை வெளிப்படுத்த மறுத்து அடம்பிடிக்கும் பொருட்களை இரசாயணம் தன்னுடைய நுட்பமான நெருப்பின் வன்செயலால் இணங்கவைப்பதால் அது பயனுள்ள கலை என்று அவர் மேலும் வாதிட்டார். நவீன விஞ்ஞானமும் அதிகாரவர்க்கத்துக்குச் சார்பான அறிவும் இயற்கையின் தாய்மை இயல்பைக் குறைத்த அதே பொழுதில் பெணகள், ஐரோப்பியரல்லாத மக்களினங்கள் மீது மேலாண்மை செலுத்த வழியும் கோலின.

நியு இங்கிலாந்தின் ஆளுநராகவும் பிரபல விஞ்ஞானியாகவும் அறியப்பட்ட [4]றொபர்ட் போயில் அதிகாரத்தின் கருவியாக வரும் இயந்திரவியல் தத்துவஞானம் (Mechanical Philocophy) இயற்கை மீது மாத்திரமல்லாது அமெரிக்க முற்குடிகள் மீதும் ஆதிக்கம் செலுத்த உதவும் எனக் கருதினார். இயற்கை பற்றிய நகைப்புக்கிடமான நம்பிக்கைகளிலிருந்து அவர்களை மீட்டெடுக்க வேண்டும் என்ற கருத்துடையவராக அவர் இருந்தார். 'இயற்கை ஒரு பெண் தெய்வம் என்ற' அவர்களின் நம்பிக்கையை அவர் எள்ளி நகையாடினார். இதனால் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட கீழ்மட்ட பிராணிகளை வெற்றி கொண்டு மனிதனின் சாம்ராஜ்ஜியம் ஒன்றை சிருஷ்டிக்கும் உன்னத முயற்சிக்கு அவர்களின் இயற்கை வழிபாடு ஒரு பெரும் தடையாக உள்ளது என்று அவர் வாதிட்டார்.

3 16ம் 17ம் நூற்றாண்டுகளில் 200,000-500,000 இடைப்பட்ட தொகைப் பெண்கள் சூனியக் காரிகள் என்ற குற்றச்சாட்டின்பேரில் கடும் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு உயிரோடு கொளுத்தப்பட்டனர். அக்காலத்தில் ஐரோப்பாவில் இருந்த குறைந்த சனத்தொகையோடு ஒப்பிடும்போது அவர்களின் தொகை அச்சம் தருவதாகும்.

மொ.ர்

4. அவரின் பெயரால் அழைக்கப்படும் போயினின் விதிக்காகவும் வாயுக்கள் பற்றிய முன்னோடி ஆய்வுகளுக்காவும் பேசப்படும் விஞ்ஞானி 1627ல் செல்வமும் செல்வாக்கும் நிறைந்த குடும்பத்தில் பிறந்த அவர் லண்டன், றோயல், சொசைட்டியின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவர் (Septical chemist) என்ற நூலில் பரசெல்ஸியஸின் கொள்கைகளை தாக்கிப் பேசினார். வர்த்தகம், உற்பத்தித் தொழிற் துறைகளில் ஈடுபட்டு விஞ்ஞான ஆய்வுகளுக்காக பெரும் பொருளீட்டியவராகவும், பெரும் புகழீட்டியவராகவும் இருந்த றொபேர்ட் பொயில் 1680ல் றோயல் சொரசட்டியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு கௌரவத்தின் உச்சத்தை அடைந்தார்.

மொ.ர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்று சுற்றுச்சூழல் விழிப்புணர்வின் பேறாக உலகமடங்கிலும் உள்ள சூழலியலாளர் அமெரிக்க முற்குடிகளினதும் ஏனைய பழங்குடி மக்களினதும் நம்பிக்கைகளின்பால் கவனத்தைத் திருப்பியுள்ளனர். ஏனெனில் அவை இயற்கையோடு இணைந்து எவ்வாறு வாழ்வது என்பதைப் போதிக்கும் வாழ்வியற் களஞ்சியங்களாக இருக்கின்றன. சூழலியல், பெண்ணியல் இயக்கங்களைச் சேர்ந்த பலர் இன்று வெள்ளை மனிதனின் சாம்ராஜ்ஜியத்தை இயற்கைமீதும் மற்ற மக்கள் இனங்கள் மீதும் நிறுவ முயன்ற போயிலின் வார்த்தைகளில் பகுத்தறிவற்ற தன்மையைக் காணுகின்றனர். அதனால், 'நீ என்னைக் கேட்கிறாய், இந்த நிலத்தை உழச் சொல்லி, நான் எப்படி ஒரு கத்தியை எடுத்து எனது தாயின் மார்பைக் கீறமுடியும், நீ எனக்குச் சொல்கிறாய், புல்லை அறுத்து, தீவனமாக விற்று வெள்ளை மனிதனைப் போல் செல்வந்தனாகு என்று நான் எப்படி எனது தாயின் குரல் வளையை அறுத்து எடுக்க முடியும் என்று றொபட் போயில் போன்றவர்களை நோக்கி உணர்ச்சி பீறிட மொழிந்த [5]ஸ்மோசலலா என்ற செவ்விந்திய இனக்குழுத் தலைவனுடைய சொற்களில் அவர்கள் அறிவுடமையைக் காணுகின்றனர்.

இன்னுமொரு செவ்விந்திய இனக்குழுத்தலைவன் '[6]சீற்றலின் கடிதத்தாலும் சூழல் இயக்கம் பெரிதும் கிளர்ச்சியடைந்துள்ளது. அது சொல்கிறது

'இதுதான் நாங்கள் அறிந்தது- இந்த பூமி மனிதனுக்குரியதல்ல மனிதன்தான் பூமிக்குரியவன்.

குருதி ஒரு குடும்பத்தைப் பிணைப்பது போல் எல்லாப் பொருட்களும் ஒன்றோடொன்று இணைந்துள்ளன.

பூமிக்கு என்ன நேரிடுகிறதோ அதுதான் அவள் மக்களுக்கும் நிகழும்.

வாழ்க்கை என்னும் வலைப்பின்னலின் கர்த்தா மனிதன் அல்ல.

அவன் அதில் ஒரு புள்ளியில் உள்ளான்.

எதை அவன் இந்த வலைப்பின்னலுக்கு செய்கிறானோ அது அவனுக்கு அவன் செய்ததாகும்.'

பகுத்தறிமுறை விஞ்ஞானத்துக்கு மாற்றீடாக இயலக்கூடிய, பால் பாகுபாடற்ற, தீங்கற்ற இயற்கை விஞ்ஞானம் ஒன்றை உருவாக்க பல முயற்சிகள் ஏற்கனவே நடந்துள்ளன. விஞ்ஞானப் புரட்சியின் வரலாறு பூராவிலும் அவ்வாறான எத்தனிப்புகள் பலவற்றை இனம் காணலாம். பால் பாகுபாடுற்ற விஞ்ஞானம் பால் பாகுபாடற்ற விஞ்ஞானம் என்ற இரு வேறு வகை மாதிரிகளுக்கு இடையிலான போராட்டமாகவும் அவற்றைக் காணலாம். 17ம் நூற்றாண்டு கால ஜரோப்பாவின் எதிரெதிரான இப்போக்குகளின் பிரதான வியாக்கியானிகளாக [7]பரசெல்ஸஸ்ும் பேகனும் கொள்ளப்படுகின்றனர். பரசெல்ஸ்ஸியர்கள் இரு கவர்ப்பிளவு சாராத சன்னியாசி மரபு சார்ந்தவர்கள். பேகனியர்கள் கலாசாரம்- இயற்கை, மனம்- பொருள், ஆண்- பெண் என்ற இரு கவர்ப் பிளவு சார்ந்த யாந்திரீக சிந்தனை பள்ளியின் பிரதி நிதிகள். இந்த இருகவர்ப் பிளவு நோக்கு முன்னயதை வெற்றி கொள்ள உருவாக்கப்பட்ட கருத்தியல் தந்திரமாகும். இந்த இரு வேறு விஞ்ஞான பார்வைகளும் இயற்கை, பால் வேறுபாடு, அதிகாரம் ஆகியவை பறிய இரு வேறு சிந்தனைகளின் பிரதிபலிப்புகளாகும். பரசெல்ஸ்ஸியர்களின் நோக்கில் ஆணும் பெண்ணும் ஒன்றை ஒன்று பூரணமாக்குவதாகவும் அதனால் ஆண் பெண் மீது ஆதிக்கம் செலுத்த முடியாது. என்றும் இயற்கையை அடக்கியாழ்வதன் மூலம் அறிவும் அதிகாரமும் தோன்றவில்லை என்றும், அவை மூலப் பொருள்களோடு ஒன்றிணைந்து இயல்பதால்தான் பெறப்படுவன என்றும் இம் மூலப் பொருட்கள் தம்முள் பிணைந்தும் இணைந்தும் இருப்பதால்தான் உயிரின் தோற்றம் சாத்தியமாகிறதென்றும் பட்டது. அவர்களுக்கு 'இந்த உலகம் தானாகவே பின்னப்பட்டு பிணைந்துள்ள ஒரு வலை. அதனால் ஆணாகவோ பெண்ணாகவோ எங்குமுள்ள உயிரி இந்த ஒன்றோடொன்று தங்கி நிற்கும் தன்மையில் பங்கு கொள்வதால் மாத்திரமே இயற்கையின் அறிவை பெறமுடியும்.

எந்திரிக மரபுக்கும் சந்நியாசி மரபுக்கும் இடையே நடந்த இழுபறியில் முன்னது பின்னயைதை வெல்ல

---

5 இவர் செவ்விந்தியரின் தீர்க்கதரிசியும் வழிகாட்டியுமாவார். தமது முன்னோர்களின் வாழ்க்கை முறைகளிலிருந்து ஒரு சமய நெறியை வகுத்து அதை அம் மக்களிடம் பரப்பினார். அதன்படி நிலத்தை உழக்கூடாது; விற்கக் கூடாது. அச்செயல்கள் இயற்கைக்கு விரோதமானவை. இந்நெறிமுறைகளில் செவ்விந்தியர் நிலைகெண்டிருக்கும் வரையும் வெள்ளை ஆதிக்கம் செவ்விந்திய மக்களை ஒன்றும் செய்ய முடியாது என்று போதித்தார். அவர் இறந்த பின்னரும், பல தலைமுறைகளுக்கு யு.எஸ்.அரசாங்கம் தனது அபிவிருத்தித் திட்டங்களை செவ்விந்தியர் செறிவாக வாழும் பகுதிகளில் முன்னெடுக்க பெரும் சிரமத்தை எதிர்நோக்கியது.

மொ.ர்

6 செவ்விந்தியர் நிலங்களை 16ம் நூற்றாண்டிலிருந்து அமெரிக்காவுக்குச் சென்ற ஐரோப்பியர் பலாத்காரமாக கைப்பற்றிக் கொண்டு வந்தனர். இதனால் அவ்வப்போது சண்டைகளும் சச்சரவுகளும் மூண்டன. ஐரோப்பியரின் துப்பாக்கிக்கு முன்னால் செவ்விந்தியரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆயினும் தொடர்ந்து ஐரோப்பியரை மறைவிலிருந்து தாக்கியவண்ணமிருந்தனர். இதை ஒரு முடிவுக்கு கொண்டுவரும் பொருட்டாக அப்போது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன் செவ்விந்திய தலைவன் நிலங்களை அரசுக்கு சீ விற்றுவிடும்படி வேண்டுகோள் விடுத்தார். செவ்விந்திய இனக் குழுவினர்க்கோ, நிலத்தை விற்பதென்பது புதுச் செய்தி. இவ்வேண்டுகோளுக்கு பதிலளிக்கும் முகமாக தலைவன் சீற்றஃப் இக் கடிதத்தை அனுப்பினான. அண்மையில் வெளி உலகுக்கு தெரிய வந்த இக்கடிதம் சூழலியலாளர்களால் வேதவாக்காகப் போற்றப்படுகிறது.

மொ.ர்

7 ஜெர்மனியில், 1493ல் ஓர் ஏழை வைத்தியரின் மகனாகப் பிறந்த பரசெல்ஸஸ் அவரின் மருத்துவத் துறைச் சாதனைகளுக்காக பேசப்படுபவர். தமது காலத்தில் கல்வி நிலையங்களில் போதிக்கப்பட்ட அதிகாரபூர்வமான அறிவை வெறுத்து அவை 'உயர்தரக் கழுதைகளையே உற்பத்தி செய்கின்றன' என்றார். மேலும் அறிவு அனுபவத்திலிருந்தே பிறக்கின்றது என்று கூறி ஐரோப்பா எங்கிலும் அலைந்து குடியானவர்கள், மருத்துவிச்சிகள், நாடோடிகள், மாந்திரீகள் ஆகிய அடித்தள மக்களின் அனுபவத்திலிருந்து அறிவைப் பெறமுயன்றார். தமது அறிவின்மூலம் பல கடுமையான நோயாளிகளை சுகமாக்கினார் என்று சொல்லப்படுகிறது.
அவிசினா, கெலென் போன்ற மருத்துவதுறை நிறுவனர்களின் நூல்களை பாசெல் பல்கலைக்கழக முன்றலில் கொளுத்தினார். இதை மார்டின் லூதரின் செய்லுக்கு ஒப்பிடுவர். அக்காலத்திலிருந்த கல்விமான்களின் போக்குக்கு மாறாக இவர் தனது எழுத்துக்களை லத்தீன் மொழியில் எழுதாமல் மக்களின் பேச்சு மொழியான ஜெர்மனில் வெளியிட்டார்.

மொ.ர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முடிந்தது. றோயல் சொசைட்டி உருவாக்கம் இதற்கு உறு துணையாய் அமைந்தது. வளர்ந்து கொண்டு வந்த தொழில்துறை முதாளித்துவ வர்க்கம் இதன் பின்னணியில் இருந்தது. பரசெல்ஸஸூம் பேகனும் வெறும் விஞ்ஞானம், பால் வேறுபாடு என்பவைகளின் கருத்தியல்களில் மாத்திரம் வேறுபட்டவர்கள் அல்ல. அவர்களின் வேறுபாடுகள் இன்னமும் ஆழ வேரூன்றியவை. இரு வேறு அரசியல் வர்க்கங்களின் பிரதிபலிப்புக்கள் அவர்கள். பேகன் மத்தியதர வர்க்க மதிப்பீடுகளை உள்வாங்கி முதலாளிய,வணிக, அரச வர்க்கங்களின் சார்பில் தனது விஞ்ஞான செயல்பாடுகளை மேற்கொண்டார். (இதற்காக முதலாம் ஜேம்ஸ்ஸின் காலத்தில் லோர்ட்சான்ஸ்லர், வெறுலம் ஆகிய அதியுயர் பதவிகளையும் பெற்றார்). இதற்கு மாறாக பரசெல்சஸ்ஸோ குடியானவர்கள் பக்கம் நின்றார். ரைரோஸ் என்னுமிடத்தில் அவர்கள் நடத்திய கிளர்ச்சியில் பங்கு கொண்டார். பின் வந்த நூற்றாண்டுகளில் பகுத்தறி விஞ்ஞானமானது பொருளாதாரம், அரசியல் மாற்றங்களின் பிரதான கருவியாகவும் மற்றும் பால் வர்க்க வேறுபாடுகள், மற்றும் இயற்கைக்கும் மனிதனுக்குமிடையிலான உறவு ஆகியவற்றை பிளவுபடுத்தும் பிரதான சக்தியாகவும் தொழிற் பட்டமை கருத்தில் கொள்ளத்தக்கது. நவீன விஞ்ஞானத்தின் சாதனைகளை கணக்கெடுக்க வேண்டுமானால் அது பெண்பாலினர்க்கும் இயற்கைக்கும் எதிராக செய்யப்பட்டவைகளை கணக்கெடுத்தாலே போதுமானது. பெண்ணின் பால்சார் மேன்மைக்கும் அவளின் இயந்திரப் பாங்கான செயல்ப்பாடுகளுக்கும் இடைப்பட்ட பகுதியே அதனால் அடக்கப்பட்டதும் வசமாக்கப்பட்டதுமான பகுதியாகும்.

மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாக பகுத்தறி முறை ஒரேயொரு விஞ்ஞான முறைமையாகவும் ஒழுங்கமைப்பாகவும் தன்னை ஸ்தாபித்துக் கொண்டு மேற்கை மாத்திரமல்லாது அது அல்லாதவற்றையும் திரிவுபடுத்திக் கொண்டு வந்திருக்கிறது. புறவய நோக்கு, நடு நிலமை, முன்னேற்றம், என்பவைகளுக்கு பின்னால் இது தனது கருத்தியலை ஒழித்துவைத்துக் கொண்டு பல்திற கூட்டொருமையுடையதும் பல் வகையினதுமாயுள்ள அறிவுப்பாரம்பரியங்களையெல்லாம் ஒற்றைத்தனி (Monolith) சிந்தனை முறைமையாக மாற்றியுள்ளது. இவ்வொற்றைத் தனிச் சிந்தனை அனைத்துலகப் பொதுவானதாகவும் பால், வர்க்க வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டதாகவும் விதந்துரைக்கப்பட்ட போதிலும் உள்ளியல்பில் அவை அடக்கியாளுவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் உறு துணை புரிவதாகும் ஆயினும் இந்த பகுத்தறி முறை விஞ்ஞானத்தின் கருத்தியல் அதை விமர்சனத்துக்கு அப்பாற்பட்டதாக்குகிறது. ஒரு பிரத்தியேக வர்க்க, கலாசார, பிதாமுதல் வாதத்தில் வேர் கொண்டு அனைத்துலகப் பொதுமையில் தனது குறுகியதன்மையை மறைத்துள்ள விஞ்ஞானத்தை பெண்ணியம், மேற்குசாரா கலாசாரங்களின் அறிவுப் பாரம்பரியங்களினூடாக மாத்திரமே சரியாக கண்டுணர முடியும்.

நவீன விஞ்ஞானம் எவ்வாறு பால் வேறுபாடுற்றுள்ளது. அது எவ்வாறு மேற்கின் ஆதிக்க வாத கலாசாரத்தின் அபிலாசைகளையும் உணர்வையும் பிரதிபலிக்கிறது. அதன் தர்க்க ரீதியான வளர்ச்சிப் போக்கில் சூழல் அழிவும் அபரி மிதமான இயற்கைச் சுரண்டலும் எவ்வாறு தவிர்க்க முடியாததாகின்றன.? என்பதையெல்லாம் இந்த தாழ்த்தப்பட்ட மரபுகள்தான் தெளிவாக்கிக் கொண்டு

**இன்றைய சுற்றுச்சூழல் தத்தளிப்புகளுக்கும் விஞ்ஞானம் தொழில்நுட்பம் ஆகியவற்றுக் குமிடையிலான தொடர்பின் வேர்களைத் தேடிக் கொண்டு போனால், இயற்கையை இயந்திரமாக நோக்கி அதனதும் (இயற்கை) பெண்களினதும் படைப்பாற்றல், உள்ளார்ந்த சக்தி ஆகியவற்றை கட்டியாள முனையும் எங்களது உலக நோக்கை மீள் பரிசீலனை செய்ய வேண்டி வரும். இதன் போது இவ்வுலக நோக்கு நிலை கொண்டுள்ள பகுத்தறிமுறையே வன் முறையின் மூலாதாரம் என்பது தெற்றெனப் புலப்படும்.**

வருகின்றன. விஞ்ஞானமும் சமூகத்தால் கட்டமைக்கப்பட்ட சமூக வகையறாக்கள் போல கருத்தியலின் பிரதி பலிப்பாகுமேதவிர அது ஒரு சுயம்பு அல்ல. விஞ்ஞான ரீதியான நடுநிலமை என்பது ஒரு கருத்தியல் வெளிப்பாடு. பூமித்தாய், பெண்பிரிவினர், காலனியாக்கப்பட்ட கலாசாரங்கள் போன்றவைகளின் வீறடக்கி சக்தியற்றனவாக செய்த நவீன மேற்கு மனிதனின் சமூக அரசியல் வெளிப்பாடுதான் நவீன விஞ்ஞானமும் என்பது மேலும் துலாம்பரமாகி வருகின்றது. இந்த இடத்தில் நாங்கள் பொருளாதார,அரசியல், கலாசார சக்திகள் தமது ஆதிக்கத்தின் பொருட்டாக ஒரு குறுகிய விஞ்ஞானத்தையே அரியாசனம் ஏற்றினதையும் அவ்வாதிக்கத்தினதும் அதன் வன் முறையினதும் இயங்கியல் ஒழுங்கமைப்பு அறிவு உட்பட்ட பல மனிதாயத அம்சங்களை மலினப்படுத்தியதையும் தெளிவாக்கிக் கொள்வோம்.

### பகுத்தறிமுறையின் வன்செயல்

அனைத்துலக ரீதியான அறிவாராய்ச்சி முன்னேற்றத்தின் விளைபொருளாக விஞ்ஞானம் விளங்குகிறதென்ற பொய்மை பெண்ணியப் புலமையாலும் மேற்கல்லாத கலாசாரங்களின் வரலாறுகளினாலும் உடைத்தெறியப்பட்டுள்ளது. பகுத்தறி முறைக் கட்டளைப்படிமத்தின் தோற்றத்துக்கும், மேற்குலக பெண்களினதும் மேற்குசாரா கலாசாரங்களினதும் அறிவுடமை நசுக்கப்பட்டதற்கும் பெரிதும் தொடர்புண்டு. சூன்யக்காரி ஒழிப்பு வேட்டை என்பது அப்போது விசயஞானமுள்ளவர்களாக திகழ்ந்த பெண்களை ஒழித்துக் கட்டும் அல்லது அவர்களின் செயல்பாடுகளை சட்டபூர்வமாக முடமாக்கும் நடவடிக்கையாகும். 'செயற்கரிய காரியங்களைச் செய்யும் கம்மாளர், நெசவாளர், மற்றும் ஏனைய கைவினைஞர்கள், கடினமான நோய்களை தீர்க்கும் பெண்கள் ஆகியோர் பாதியளவாவது மாந்திரிகத்தையும் குறளிவித்தையையும் பயன்படுத்தியே அவைகளை நிறைவேற்றுகின்றனர், அப்படிப்பட்டவர்களுக் கெதிராக 1511ல் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. சூனியக் காரிகள் என்று அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டு பலர் கொடுந்தண்டனைகளுக்கு ஆளாகினர். திறமை சாலிகளாஇருந்த பெண்களுக்கே இவ்வாபத்து அதிகமிருந்தது. இதனால் 16ம் நூற்றாண்டில் பெண்கள் மருத்துவம், பரிசாரம் போன்றவற்றைச் செய்வதிலிருந்து முற்றாக ஒதுங்கிக் கொண்டனர். பழங்குடிகள், விவசாயிகள், பெண்கள் ஆகியோரின் அறிவாற்றலையும் அநுபவத்தையும் புறம் தள்ளும் விஞ்ஞானத்தின், ஆணிய கட்டளைப்படிமத்தின் மிக ஆழமான வன்முறை அபிவிருத்தி என்ற பெயரில் மேலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்னெடுத்து செல்லப்படுகின்றது. மற்ற அறிகை முறைகளையும் அறிவர்களையும் ஒரு சேர ஒதுக்கிவிடுவதால் மனிதனின் இயற்கையை விளங்கிக் கொள்ளும் ஆற்றல் குறைந்து விடுகிறது. இது நவீன மேற்கு, ஆணாதிக்க விஞ்ஞானத்தின் அறிவாராய்ச்சி மரபின் (பகுத்தறிமுறைமை) இலட்சணமாகும். எனினும் இது விஞ்ஞானப் புரட்சி என அழைக்கப்படுகிறது. இயற்கை சடத்துவமான தனித்தனி கூறுகளாலாயது எனக் கருதி செயல்படுவதால் அதன் புதுப்பிக்கும் ஆற்றலும் ஆக்க சக்தியும் மழுங்கடிக்கப்படுகின்றன. இவ்வாறான அம்சங்களால் விஞ்ஞானப்புரட்சி வெளிக் கொணர்ந்த பகுத்தறிமுறைமை மேற்கத்திய ஆணாதிக்கத்தின் சம்பிரதாய பூர்வமான அறிகை முறையாகும் என அடையாளம் கண்டு கொள்ள முடியும். அது மற்ற வகை (அதனால் அடைக்கப்பட்டதும் மாற்றீடு செய்யப்பட்டதுமான) முறைமைகளிலிருந்து வேறுபட்டது எனத் திட்டமாக வரையறுக்கக் கூடிய மேலும் பல் இயல்புகளைக் கொண்டுள்ளது.

பகுத்தறி முறையின் அடிப்படை மெய்ப் பொருளியல் அறிவாராய்ச்சியியல் எண்ணக் கருக்கள் ஒரு படித் தன்மையில் நிலைகொண்டவை (Ontological and epistemological assumpion based on homogeneity) ஒரு படித்தன்மை என்றால் எல்லா அமைப்புக்களும் தனித்த தொடர்பற்ற அணுக்கூறுகளாகி இயந்திர பாங்காக இயங்குகின்றன எனக் கொள்வது. இவ்வியந்திர உருவகம் இயற்கையையும் சமூகத்தையும் சமுதாய ரீதியாக கட்டமைக்கிறது. பிரித்துப்பார்ப்பதையும் கையாள்ளலையும் அனுமதிக்கும் இதற்கு மாறாக இன்னொரு உருவகம் உள்ளது. அது தங்கி நிற்கும் தன்மையையும், கொண்டு கொடுக்கும் பாங்கையும் உருவகிப்பது. அறிவும் ஆற்றலும் இப்பண்புகளிலிருந்தே பிறப்பெடுப்பவை எனக் கொள்வது இன்றைய சுற்றுச்சூழல் தத்தளிப்புகளுக்கும் விஞ்ஞானம் தொழில்னுட்பம் ஆகியவற்றுக்குமிடையிலான தொடர்பின் வேர்களைத் தேடிக் கொண்டு போனால், இயற்கையை இயந்திரமாக நோக்கி அதனதும் (இயற்கை) பெண்களினதும் படைப்பாற்றல், உள்ளார்ந்த சக்தி ஆகியவற்றை கட்டியாள முனையும் எங்களது உலக நோக்கை மீள் பரிசீலனை செய்ய வேண்டி வரும். இதன் போது இவ்வுலக நோக்கு நிலை கொண்டுள்ள பகுத்தறிமுறையே வன் முறையின் மூலாதாரம் என்பது தெற்றெனப் புலப்படும்.

## இலாபம், பகுத்தறிமுறைமை, வன்முறை

எண்பது வீதமான விஞ்ஞான ஆய்வுகளில் ஆணாதிக்க வாதம், வன்முறை என்பவற்றுக்கிடையிலான தொடர்பு தெளிவாகப் புலப்படுகின்றது. இவ்வாய்வுகள் போர் தொழில் துறையோடு இணைந்தவை. பகைவர் படைகளுக்கு எதிராக மாத்திரமல்லாது சாதாரண குடிமக்கள் மீதும் கொடிய வன்முறையை பிரயோகிக்க அவை துணை போகின்றன. இந் நூலில் விஞ்ஞான ஆய்வுகள் மனித நல்னை முன்னிட்டே நிகழ்த்தப்படுகின்றன. என வெளிப்பகட்டாக சொல்லப்பட்ட போதிலும் அவை வன்முறையோடும் இலாபத்தோடும் தொடர்புடையன என விவாதிக்கின்றேன். மனித நலனை வெளிப்படையாகக் கொண்ட விவசாயம், வனவியல் போன்ற துறைகள் கூட இதற்கு விதிவிலக்கல்ல. பகுத்தறிமுறைமை, வன்முறை ,இலாபம் ஆகியவற்றின் தொடர்புகள் விஞ்ஞானத்தின் தோற்றத்துக்கு வழிகோலியதால் வரையறையற்ற இயற்கைச் சுரண்டல் மூலம் கொள்ளைலாபமீட்டுதலையும் மூலதனப் பெருக்கத்தையும் இலக்காக் கொண்ட பொருளாதார அமைப்புக்களுக்கு அறிவுரீதியான எதிர் வினையை வெளிக்காட்டுகிறது. இவ்வமைப்புக்களின் தத்துவார்த்த, தொழில்நுட்ப அம்சங்களின் வெளிப்பாடுதான் பகுத்தறிமுறை, உலக நோக்கு, தொழிற்துறைப்புரட்சி, முதாலாளித்துவப் பொருளாதாரம் என்பவையாகும். சிறு நிறுவனங்களோ இணைந்த பொரளாதார அலகுகளோ அவை தனிப்பட்டவர்களுக்கோ அரசுக்கோ சொந்தமாக இருந்தாலும் தங்களது தனித்தேர்ச்சியையும் உச்சலாபமீட்டலையுமே கருத்தில் கொண்டு செயல்படுகின்றன. சமூக சூழல் பெறுமதிகள் பற்றி அவை கிஞ்சிந்தித்தும் அக்கறை கொள்வதில்லை. இவை பகுத்தறி விஞ்ஞானத்தின் தர்க்ரீதியாக உள்ளார்ந்துள்ள இயல்புகளாகும். ஒரு வளத்தொகுதியில் எவ்வியல்புகள் இலாபத்தை தருகின்றனவோ அவ்வியல்புகளே கவனத்தில் கொள்ளப்படுகின்றன. அவ்வாறல்லாத இயல்புகள் சூழலின் இருப்புக்கு இன்றியமையாதனவையாயிலும் கணக்கெடுக்காமல் விடப்படுகின்றன. அதனால் சூழல் சமநிலை பாதிப்படைகிறது.

வர்த்தக முதாலாளித்துவம் ஒரு குறிப்பிட்ட பண்டத்தின் உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு இயங்குவதால் உற்பத்தியில் ஒரேமாதிரியையும் ஒரு வளத் தொகுதியில் ஒரேயொரு செயலையுமே லாபத்தின் பொருட்டாக கருத்தில் கொள்கிறது. உதாரணமாக ஒரு காடு, பகுத்தறிமுறைக் கட்டளைப்படிமத்தின் படி ஒரு மரக்கட்டையாக சுருங்கிவிடுகிறது அது மேலும் குறுகி காகிதத்தொழிலுக்கான செலுலோஸ்நார்க் குழம்பாக (Sellulose fibre putp) ஆகிவிடுகிறது. இவ்வாறு வனம், நிலம், உயிர்வளம் என்பன உற்பத்தியைப் பெருக்கும் நோக்கில் கையாளப்படுகின்றன. இது வனத்தின் நீர் வளத்தை குறைத்து ஜீவிகளின் பல்லினத்தன்மையை சீர்குலைத்தாலும் கூட Pulp உற்பத்தியைப் பெருக்கும் நோக்கில் விஞ்ஞான ரீதியானது என நியாயப்படுத்தப் படுகிறது. இவ்வாறு உயிர்ப்புள்ள பல்லினத் தொகுதி 'விஞ்ஞான வனவியல், விஞ்ஞான அபிவிருத்தி என்ற வகையில் பலாத்காரத்துக்கு உட்பட்டு சீரழிக்கப்படுகிறது. இந்த வகையில் பகுத்தறி விஞ்ஞானம் சூழல் சீர்குலைவின் மூலவேராக உள்ளது. ஏனென்றால் அது இயற்கையின் சேதன செயல்ப்பாடுகளையும் ஒழுங்குகளையும் மீள புதுப்பித்துக் கொள்ளும் ஆற்றலையையும் சீர் குலைத்து விடுகின்றது.

தற்காத்துக் கொள்ளும் பொருளாதாரத்தில் பெண்கள் இயற்கையின் ஒரு பங்கு தாரராகி உற்பத்தியிலும் மறு உற்பத்தியிலும் ஈடுபட்டு வந்தனர். இயற்கையின் செயற்பாடுகள் பற்றிய அறிவிலும் ஞானத்திலும் சிறந்து விளங்கினர். பகுத்தறி முறையின் கட்டளைப்படிமம் இந்த மாற்று அறிவு மாதிரி வகைகளை இனம் கண்டுகொள்ளவில்லை. அது இயற்கையின் ஒன்றோடொன்று தங்கி நிற்கும் இயல்புகளையோ பொருள் வளம் பெருக்குவதில் பெண்கள் ஆற்றும் பங்களிப்பு பற்றியோ கவனத்தில் கொள்வதில்லை.

பகுத்தறிவுவாதம் (Rationacity), பகுத்தறிமுறை மையின் பயன்பாடு, பகுத்தறி முறையல்லாத அறிவு முறைமைகள் ஆகியன பற்றி இதுவரை சரியாக மதிப்பீடு செய்யப்படவில்லை. ஆனால் பகுத்தறிமுறைமை மாத்திரம்தான் உயர்ந்தது என பிரகடனப்படுத்தப்படுகின்றது. அது மற்ற அறிவு முறைமைகளையெல்லாம் வென்று

www.tamilarangam.net

வெற்றி வாகை சூடியமை அதன் அறிக்கைப் பண்பின் பலத்தால் அல்ல. அது அரசினால் வழங்கப்பட்ட அரசியல் சலுகைகளால் ஆகும். அபிவிருத்திக்கான கொள்கைகளும் திட்டங்களும் நிதி மற்றும் பொருளியல் உதவிகளை வழங்கின. அதேநேரம் இலாபமீட்டலுக்கான ஒரு கருத்தியலும் உருவாக்கப்பட்டது. ஒரு தனிப்பட்ட நிறுவனம் அல்லாத ஒரு தொழில் ஸ்தாபனம் அபிவிருத்தி அறிவு வளர்ச்சி என்பவைகளை நோக்கமாகக் கொண்டு இயற்கையை கையாளும் போது மக்கள் சமுதாயத்திற்கு ஏற்படும் இழப்பையும் தனிநபர் பெறும் நன்மைகளையும் எடைபோட்டுப்பார்க்கின்றனர். அப்போது அவர்களால் முன்னேற்றத்துக்கும் பின்னடைவுக்கும் பகுத்தறிவுக்கும் பகுத்தறிவின்மைக்குமிடையே வித்தியாசம் காண முடிகிறது. அந்த நிலையில் அரசு குறுக்கீடு செய்து மக்களின் நிலைப்பாட்டையும் சம்பந்தப்பட்ட விடயத்தையும் மாற்றியமைக்கின்றது. அதன் விளைவாக அபிவிருத்தியை மதிப்பிடும் உரிமையும், ஆற்றலும் மழுங்கடிக்கப்படுகின்றன. அபிவிருத்தியைவிட அவர்கள் இழப்புக்களைப்பற்றி அக்கறை கொண்டால் தற்போதைய தேசிய நோக்கம் கருதிய ஒரு தியாகமாக அச்செயல் நியாயப் படுத்தப்படுகிறது.

அரசும் உயர்ந்தோர் குழாமும் இணைந்து உபரி உற்பத்தியை பெருக்கியபோது அதிகாரம் தோன்றியது. அவ்வதிகாரம் பகுத்தறிமுறையை மீயுயர் நிலைக்கு உயர்த்தியது. விவசாயம், மருத்துவம், வனவியல் துறைகளின் கற்கை நிலையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வர்களுக்கு ‘விஞ்ஞான ரீதியான’ என்ற அடைமொழியில் பகுத்தறிமுறை கட்டளைப் படிமத்தில் பயிற்சியளித்து அதன் மேன்மையை நிலைநாட்டின. அதில் அரசு முதலீடு செய்துள்ள அதிகாரத்தை உரித்தெறித்து விட்டால், பகுத்தறிமுறைமை இயற்கை வெளிக்காட்டும் சிக்கல்களைத் தீர்ப்பதில் அறிவு ரீதியாக பலவீனமான தாகவும் தாக்கமற்றதாகவும் காணப்படுகிறது. பகுத்தறி முறைமைசார் வனவியல் வனவளத்தையும், பகுத்தறிமுறைசார் வேளாண்மைக்கல்வி விவசாயத்தையும் அயன மண்டல நாடுகளில் பாழாக்கியுள்ளன. இயற்கை அல்லது உயிரினம் பற்றிய அறிவுத் தொகுதி என்ற வகையில் பகுத்தறிமுறை விஞ்ஞானம் பல வீனமானதும் பொருத்தமற்றதுமாகும். ஆனால் சந்தைப் படுத்தலைப் பொறுத்த வரையில் ஆற்றல் வாய்ந்ததும் பயனளிப்பதுமாகும். ஏற்கனவே குறிப்பிட்டது போல் நவீன விஞ்ஞானமும் மேற்கத்திய ஆண் மேலாண்மை அமைப்பின் சமூக பொருளாதார அம்சங்களும் ஒன்றுக்கொன்று அனுசரணையாக உள்ளன. இம் மேற்கத்திய ஆண்முதன்மை வாதம் இயற்கை, பெண்கள், ஏழைகள் மீது மேலாண்மை செலுத்துவதையும், அவர்களை சுரண்டுவதையும் இயல்பாகக் கொண்டது.

பொருளாதார நோக்கத்துடன் இயற்கையை அணுகிய போது பகுத்தறி முறை அதி உன்னத நிலையை அடைந்தது. அங்கே பணமே சகல பேறுகளினதும், மதிப்பீடுகளினதும் அளவு கோலாயிற்று. வாழ்க்கை ஒரு பொருளாதார விவகாரமாக மாறிப் போனது. வாழ்க்கைக்கும் அதன் செயல்பாடு களுக்குமிடையே ஒரு சீரற்ற உறவை பணம் உருவாக்கி பிரச்சினைகளைத் தோற்றுவித்தது.

உயிர் வாழ்விகளை நாசம் செய்து சுரண்டுதல் மூலதனப் பெருக்கத்துக்கும் லாபமீட்டலுக்கும் மூலாதாரமாயிற்றே ஒழிய அவைகளின் செழிப்புக்கும் நிலைப்புக்கும் எதிராயிற்று. சூழலியல் சிக்கல்களை தீவிரமாக்குகின்ற அதே நேரத்தில் அவைகள் வாழ்க்கையின் ஓட்டத்தை பணத்தினதும், இலாபத்தினதும் ஓட்டமாக மாற்றி விடுகின்றன. மேற்கு நாட்டு நிபுணர்கள் ஆபிரிக்காவில் செய்த அபிவிருத்தியே அதன் சீரழிவுகளுக்கான பிரதான காரணியாகும். பன்னாட்டு வங்கிகளும் கூட்டுத்தாபனங்களும் பிரேசிலில் நிகழ்த்திய ‘அபிவிருத்தி’ உயிர் வளத்தின் உச்ச வெளிப்பாடான அமேசன் மழைவளக்காடுகளின் பேரழிவுக்கு வழி கோலின. பன்னூற்றாண்டுகளாக ஆபிரிக்க, அமேசன் பிரதேசவாசிகள் தங்களது சுதேசிய ஞானத்தின் படி இயற்கையோடு இசைந்துவாழ்ந்தனர். அவர்கள் தங்களது வரலாறு பூராவிலும் தேடிய சேகரங்களை மேற்கு நாட்டு நிபுணர்களும், அறிஞர்களும் ஒரு சில பத்தாண்டுகளுக்குள், இன்னும் சொல்லப் போனால் ஒருசில ஆண்டுகளில் அழித்து விட்டனர்.

சூழல் சீர் கேட்டையும், அறிவுச்சேகரங்களின் அழிவையும் பகுத்தறிமுறையின் வன் செயல்களாக நான் சுட்டிக்காட்டுகிறேன். அவைகளின் விளைவுகளாவன:-

**அ)** பெண்கள் மீதான வன்முறை: பெண்கள், இனக்குழுக்கள் குடியானவர்கள் போன்ற பிரசைகள் இயல்பாக நாளாந்த கடமைகளின் பொருட்டாக தங்களது பிரதேச வனவளம், நீர் வளம், நில வளம் என்பவற்றில் தங்கி நின்று உணவு தேட்டத்தில் ஈடுபடுவதால் அவைகள் பற்றி நன்குணர்ந்தவர்களாக உள்ளனர். ஆனால் நிபுணர்கள் அல்லாதவர்கள் என்ற பாகுபாடு அவர்களை அறிவற்றவர்களாகச் செய்கிறது. சமூகரீதியாக இது அவர்களை பெரிதும் பாதிக்கிறது.

**ஆ)** இயற்கை மீதான வன் முறை: நவீன விஞ்ஞானத்தின் பாடு பொருளாக இயற்கையுள்ளதால் அதை அறியவும் கையாளவும் மேற்கொள்ளப்படும் செயல்ப்பாடுகளால் அதன் பூரணத்துவம் சிதைக்கப்படுகிறது.

**இ)** அநுபவ பாத்தியமுள்ளவர்களுக்கு எதிரான வன்முறை: எப்படியாயினும், விஞ்ஞானம் சகல மக்களுக்கும் வசதிவாய்ப்புகளை ஏற்படுத்தி உள்ளது என்ற கூற்றுக்கு மாறாக ஒரு குறிப்பிட்ட பிரிவினர்- ஏழைகள், பெண்கள்- அந்நன்மைகளை அடையமுடிவதில்லை. அவர்களின் ஜீவனோபாயம், வாழ்வாதாரங்கள், ஆற்றல் ஆகியவற்றை காவு கொண்டே விஞ்ஞானம் இந்நன்மைகளை வழங்கியது. இதற்கெதிரான இயற்கையின் சீற்றமே இன்றைய (இயற்கை) அனர்த்தங்களாகும்.

**ஈ)** அறிவின் மீதான வன்முறை: ஒரேயொரு சட்ட பூர்வமான பகுத்தறிவு பூர்வமான அறிகை முறையாக பகுத்தறி விஞ்ஞானம் தன்னை ஸ்தாபிப்பதால் மற்ற அறிகை முறைகள் ஓரம் கட்டப்படுகின்றன. அவைகள் பகுத்தறிவுக்கு ஒவ்வாதன, பொய்யானவை என மாற்றப்படுகின்றன. இச் செயல்கள் பூரண விஞ்ஞானத்துக்கு எதிரான வன்முறையாகும் பகுத்தறி விஞ்ஞானம் மற்ற கூட்டமைப்பியல் சார் அறிகை முறைகளை (Organic systems knowledge) பூரண மீளாய்வுக்கு உட்படுத்தாமல் ஒதுக்கிவிடுகிறது. அல்லது மறுதலிக்கிறது. அதேவேளை எந்தவித விஞ்ஞான விசாரணைக்கும் உட்படுத்த இயலாத புதிய புனிதங்களை உருவாக்கி போற்றிப் பாதுகாக்கிறது.

## இருவகை உண்மைகள்

விஞ்ஞானம், தொழில்நுட்பம், சமூகம் ஆகியவற்றின் மரபுவழிமாதிரி வடிவங்கள் வன்முறையின் கூறுகளை தம்மகத்தே கொண்டுள்ளன. அதனால் விஞ்ஞானத்தையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொழில்நுட்பத்தையும் பிரயோகிக்கும்போது அவை அரசியல் ஒழுக்க நடைமுறைகளில் வன்செயலை தோற்றுவிக்கின்றன. ஆகவே விஞ்ஞான அறிவு தன்னளவில் சுயமானது. வன்முறை அதில் இனைக்கப்பட்டுள்ளது என்று சொல்லப் படுகிறது. விஞ்ஞானத்தில் உள்ள மதிப்பீடுகளுக்கும் மெய்மைக்குமிடையிலான இருகவர்பிளவு உலகின் மதிப்பீடுகளுக்கும் மெய்மைக்குமிடையிலான இருகவர் பிளவின் வெளிப்பாடாகும். இந்த வகையில் வன்முறையின் மூலாதாரம். மதிப்பீடுகளிலும், விஞ்ஞான அறிவின் மூலாதாரம் மெய்மையிலும் அமைந்துள்ளன. மெய்மை - மதிப்பீடு என்ற இரு கவர்த்தன்மையின் உருவாக்கமான பகுத்தறிவிஞ்ஞானம் பிரத்தியேக மதிப்பீடுகளின் அறிவு ரீதியான பிரதிபலிப்பாகும் அதேவேளை அவைகளிலிருந்து சுயாதீனமுள்ளதாகவும் தோன்றுகிறது. மதிப்பீடு, மெய்மை ஆகியவற்றை இருமுனைப்படுத்துவதால் விஞ்ஞானம் குற்றச்சாட்டு களிலிருந்து தப்பித்துக்கொள்கிறது. புறவயத்தன்மை, நடுநிலைமை, அனைத்துலக பொதுமை என்னும் பண்புகளைக் கொண்ட விஞ்ஞான முறைமையால் பகுத்தறி விஞ்ஞானம் இயற்கையின் விதிகளையும் இயல்புகளையும் கண்டு பிடிக்கிறது. என்பது பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்ட கருத்தாகும். இக் கருத்து யதார்த்தமானதாகவும் மதிப்பீடுகளால் பாதிக்கப்படாத தாகவும் தோன்றுகிறது. ஆயினும் வரலாற்றுத், தத்துவார்த்த நோக்கில் இக்கருத்து மென்மேலும் மறுதலிக்கப்பட்டு வருகிறது. வரலாற்றியலின் படி, நவீன விஞ்ஞானம் உள்ளிட்ட சகல அறிவு வகைகளும் பல்வகையான முறைமையியல்களினூடாக கட்டமைக்கப்பட்டன. ஆனால் பகுத்தறி முறையை மாத்திரமே விஞ்ஞானமாக தேர்ந்தெடுக்கப்பட்டுளளது.

'விஞ்ஞான முறை என்று ஒன்றுமில்லை. விஞ்ஞான பூர்வமானது, நம்பகத்தன்மையுடையது என்று விதந்துரைக்கதக்கதாக ஒரு தனி ஆய்வைதானும் செய்வதற்கு ஒரு தனி நடைமுறையோ ஒரு தொகுதி விதிகளோ எதுவுமில்லை. என்றும் மாறாத அனைத்துலகப் பொதுமை சான்ற முறைமை என்ற எண்ணமும் உலகளாவிய ஸ்திரமான பகுத்தறிவுடமை என்ற எண்ணமும் யதார்த்தத்திற்கு மாறானதாகும். எதையும் ஒட்டுமொத்தமாக அவற்றின் வெவ்வேறு இயல்புகளையும் அம்சங்களையும் கருத்தில் கொள்ளாமல் அளக்க ஒரு கருவி உள்ளது என்பதை அது ஒக்கும்.

விஞ்ஞானிகள் தங்களது தேவைக்கேற்ப அளவுகளையும் நடைமுறைகளையும் பகுத்தறிவுப் பிரமாணங்களையும் துறைதோறும் மாற்றியமைத்துக் கொள்கின்றனர். அவர்கள் புதிய ஆய்வுத் துறையொன்றினுள் புகும் போது, சிலவேளைகளில், தமது சகல கொள்கை களையும் கருவிகளையும் அத்துறையின் இயல்புக்கேற்ப மாற்ற வேண்டி நேரிடுகிறது. விஞ்ஞானம் கையாழும் மெய்மை பற்றிய எடுகோள்களுக்கு நடைமுறை விஞ்ஞானத்தில் ஆதாரம் இல்லை. பகுத்தறி விஞ்ஞானத்தின் மெய்மைகள் சமூகரீதியாக கட்டமைக்கப்பட்டவை. அவைகள் கண்டுபிடித்தல், எண்பித்தல் ஆகியவற்றின் தொடர்பில் மேற்கத்திய பூர்ஷவா, ஆண்முதன்மை வாதத்தின் கலாசார உருவாக்கமாகும். மேற்கில் 16ம் நூற்றாண்டு வரையும் சேதன உருவகம் (Organic Metaphor) விஞ்ஞான ரீதியானதாகவும் தூய்மையானதாகவும் கருதப்பட்டது என்று கரேலின் மோர்சன்ட் மிகத் தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளார். பெண்ணியக் கூறுகளை முதன்மையாகக் கொண்ட சேதனபூர்வமான மனப்பாங்கு சிதைக்கப்பட்டு இயந்திர பாங்கு கொண்ட மனப்பான்மை உருவாக்கப்பட்டது. அது பெண்ணியக் கூறுகளை குறைத்தது அல்லது அவைகளை சுரண்டலுக்கேற்ற வண்ணம் பயன்படுத்தியது. 16ம் நூற்றாண்டு காலப்பகுதியில் மேலைக் கலாசாரம் இயந்திரமயமாதல் என்னும் போக்குக்கு தீவிரமாக உட்பட்ட போது பூமாதா, நிலமென்னும் நல்லாள் என்ற உணர்வுகள் இயந்திர ஓசைக்குள் அமுங்கிப்போயின. பாரம்பரிய அறிவு முறைகளை கட்டுப்படுத்தல் ஒரு கலாசார நடவடிக்கையே தவிர மூடநம்பிக்கை மெய்மையால் மாற்றீடு செய்யப்பட்டது என்பதல்ல. கலாசாரங்களுக்குரிய விஞ்ஞான அறிவென்பது வெறும் அறிவு சார்பானது மாத்திரமல்ல. அது அவைகளின் ஒழுக்கவியல் (Etholcal) சார்பானதுமாகும்.

மனிதன் சமூக ஒழுக்க நெறிகளுக்கு மாறான செயல்பாடுகளுக்கு இசைந்து போவதை தடுக்கும் கலாசார தடையாக பூமியை ஆராதிப்பது - போஷிக்கின்ற தாய் - என்ற பிம்பம் இருந்தது. இதற்கு மாறாக அதிகாரத்தின் புதியபிம்பம் பூமியை வெறுமையாக்கி, கையாள கலாசார இசைவாணை வழங்கியது.

மூன்றாம் உலக நாடுகளில், அந்நாடுகளின் சூழலியல் உணர்வுக்கும் பகுத்தறி விஞ்ஞானிக்கு மிடையேயிலான முரண்பாடு சமகால நிகழ்வாகவும் நாளாந்த யதார்த்தமாகவும் உள்ளன. அங்குள்ள மேலைத்தேய பயிற்சி பெற்ற ஆண்பாலின விஞ்ஞானிகளும் நிபுணர்களும் பகுத்தறி விஞ்ஞான அறிவின் சிறு வகைமாதிரி வடிவமாக விளங்குகின்றனர். அறிவின் பகுத்தறி முறையை மதிப்பீடு செய்வதற்கான பிரமாணங்களை அறிவாராய்ச்சியியல் ரீதியாக மாற்றுவதற்கு பெண்ணியல் மற்றும் சூழலியல் இயக்கங்கள் பல அரசியல் போராட்டங்களை நிகழ்த்தியுள்ளன. உயிர் வாழ்வை தற்காத்துப் பேணிக் கொள்ளல் பற்றிய சிக்கல்கள் பூதாகரமாகத் தலை தூக்கியுள்ள இன்றைய நிலையில் சூழலியல் பிரமாணங்களூடாக பகுத்தறி விஞ்ஞானத்தின் பெறுமதியையும் உறுதிப்பாட்டையும் மதிப்பிடுதல் ஒரு முக்கிய அறிவார்த்த சவாலாக உள்ளது. இயற்கையை வெறுமனே மெய்மை சார் விவரணங்களாக பார்க்கும் பகுத்தறிமுறைநோக்கு மற்ற அறிக்கை முறைகளை விட உயர்ந்ததாக இருந்தாலும் சூழலியல் சார்பில் அடிப்படையற்றது. ஒரு வாழிடத்தொகுதியில் வெவ்வேறு மூலக்கூறுகளுக்கிடையிலான உறவுத் தொடர்பின் அவசியத்தை சூழலியல் உணர்த்துகிறது. மனித அறிவாலும் பொருளாதர தேவைகளாலும் தீர்மானிக்கப்பட்ட மதிப்பீடுகளிலிருந்து இயற்கை சுயாதீனமாக உள்ளது. அதன் கூறுகளில் எதுவும் சார்பற்றதாக காணப்படவில்லை. எவ்வாறு ஒருவர் இயற்கையை நோக்குகிறார் என்பதிலும் அவரின் பொருள்சார் தேவையை பொறுத்துமே இயற்கை பற்றிய அவரின் அறிவு அமைகிறது. இந்த வகையில் உச்சலாபமீட்டல் பகுத்தறிமுறை அமைப்புகளில் இணைந்துள்ளது. அதே வேளை வாழ்கையை மதித்தலும் பேணலும் கூட்டிணைப்புசார், சூழலியல்சார் அமைப்புகளோடு சேர்ந்துள்ளது (Holistic and Ecological system)

## இருவகை பகுத்தறிவுடமை

பகுத்தறிமுறையின் அறிவாராய்ச்சியியல், உளதாம் இயல் கூறுகள் (Epistemologaical and ontological components) ஒரு பிரத்தியேக வகையில் விஞ்ஞானத்தை பிரயோகிப்பதற்கான சட்டகத்தை வழங்கியுள்ளன. 'எங்களது





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நோக்கிலுள்ள பொருள் பற்றிய மனப்பாங்கில்தான் முறைமை உள்ளடங்கியுள்ளது. அதன் வழியேதான் எந்த உண்மையையும் நாம் காண்கிறோம் என்று டெகாடெஸ் கருதினார்'. இதனை நாம் முழுமையாக ஏற்றுக்கொண்டால் ஆய்வுப் பொருளின் அளவையும் ஈடுபாட்டின் அளவையும் மெல்ல மெல்ல தட்டிக்களித்து சுருக்கி எடுக்கவேண்டும். மேலும் அதில் தெளிவற்ற பகுதிகளை விலக்கி விடுதல் வேண்டும். இவ்வாறு சுருக்கி எளிமையாக்கப்பட்ட- மன உள்ளுணர்வால் உணர்ந்து கொள்ளப்பட்ட- பகுதி மீது படிப்படியாக ஆய்வு செய்தல் வேண்டும் டெகாடெஸின் வார்த்தைகள் இயற்கையின் சொந்தக்காரர்களாகவும் எஜமானர்களாகவும் மனிதர்களை ஆக்குகிறது. வாழும் உயிரிகளைப் பொறுத்தவரையில் இந்தப் பார்வை உண்மையை (யதார்த்தத்தை) அறியத் தவறி விடுகிறது. ஏனெனில் உயிரின இயற்கை பகுதிகளின் இணைப்பல்ல, பகுதிகள் ஒன்றோடொன்று இணைந்து ஒரே பிண்டமாக

**பெண்கள், மற்றும் மேற்குசாரா கலாசாரங்கள் உட்பட மனித குலத்தின் பெரும் பகுதியினரின் சமூக வாழ்வை சிதிலமாக்கி, அதன் விலையில் தனது சாதனையை கட்டியெழுப்பிய போதிலும் நவீன விஞ்ஞானத்தை மானிடத்தின் மாபெரும் சாதனை என்று நாங்கள் ஏன் கருதுகிறோம்? விஞ்ஞானத்தின் கலாசார அழிப்பையும் மேலாதிக்கத்தையும் நன்கு புரிந்துள்ள சந்ரா ஹார்டிங் கேட்கிறார்.**

பிணைந்து இயல்வன. இங்கே ஒத்திசையாதன ஒதுக்கப்படும். நவீன விஞ்ஞானம் நன்கு திட்டமிடப்பட்ட உறுதியான விஞ்ஞான ரீதியான முறையின் படி பயின்று வரப்படவில்லை. அது பலவகைச் சிந்தனை முறைமைகளுள் ஒன்று என்று கொள்ளலே சரியானது என்று ஆணித்தரமாக குன்பெயரபெண்ட், பொலானி போன்றோர் விவாதிக்கின்றனர்.

கட்டுப்படுத்தப்பட்ட பரிசோதனையும் ஆய்வுகூடமும் பகுத்தறிமுறை விஞ்ஞானத்தின் பிரதான அம்சங்களாகும். பரிசோதனைக்குரிய விடயம் அதனுடைய இயற்கை அமைவிலிருந்தும் மற்றவைகளின் தொடர்பிலிருந்தும் நோக்குபவரிடமிருந்தும் தனிமைப்படுத்தப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட எண்ணப்பாங்குகளுக்கு தக்க என்ன இயல்புகள் கண்டறியப்பட வேண்டும் என்பதை மதிப்பீட்டுச் சட்டகம் தீர்மானிக்கிறது. இயற்கை மீது வல்லாட்சி புரிவதை நோக்கமாகக் கொண்ட இந்த பேகனிய செயல் திட்டமானது பால்வதை, சித்திரவதை, விசாரணை என்பவற்றின் உருவகத்தையும் அவைகளின் சொல்லாடலையும் உள்ளியல்பில் புனைந்துருவாக்கப்பட்டது. ஆகவே கட்டுப் படுத்தப்பட்ட பரிசோதனை மற்ற அறிவு முறைமைகளையும் இயற்கையையும் கட்டியாளும் நோக்கிலான ஓர் அரசியல் தேர்வாகும். வன்முறை அதிகாரத்தின் அடிப்படையாகும் ஏனெனில் அதன் ஊடாகவே இரகசியத்தை அறியமுடியும். இயற்கையின் இரகசியத்தைக் கூட வன்செயலால்தான் அறியமுடியும். என்று வலிந்து கருதப்பட்டது. இந்த வகையில் மனித அறிவும் மனித அதிகாரமும் ஒன்றிணைந்தன. இதை வக்கிரமான அறிவினதும் வக்கிரமான அதிகாரத்தின் கூட்டணி என்று சந்ரா ஹார்டிங் வர்ணிக்கிறார். அறிவும் அதிகாரமும் பகுத்தறிமுறை அமைப்பில் இவ்வாறு உள்ளார்ந்துள்ளன. இதனால் இயந்திர ஒழுங்கமைப்பு ஒரு கோட்பாட்டுச் சட்டகமாக குறித்த சில மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்ட அதிகாரத்தோடு இணைந்து வர்த்தக முதலாளித்துவத்தின் தேவைகளுக்கேற்ப இயங்க முடிகிறது. அறிவு வளர்ச்சியினூடாகவும் அதன் கட்டமைப்பூடாகவும் சமத்துவமின்மையும் மேலாதிக்கமும் பிறப்பெடுக்கின்றன. அவற்றை நியாயப்படுத்தும் வகையில் இவ்வறிவு இயற்கையையும் சமூகத்தையும் உருமாற்றிஇசைவாக்க முனைகிறது.

தெற்கு வடக்கினால், பெண் ஆனால், இயற்கை மேற்கத்திய மனிதனால் ஆதிக்கம் செலுத்தப்பட்டமையின் தாற்பரியங்கள் மேலும் மேலும் வெளிவந்து கொண்டிருக்கிறன. ஒரு சாராரை மற்ற சாரார் புறம் தள்ளவும் அடக்கியாளவுமாக மேற்கு மனிதனால் சிருஷ்டிக்கப்பட்ட உலக நோக்கில் இவைகளின் அடையாளங்கள் காணப்படுகின்றன. ஹார்டிங் இதை விளங்கும் போது:

"நவீன மேற்கத்திய கலாசாரத்தின் சிருஷ்டிகர்தாக்களின் இயற்கை பற்றிய அறிவார்ந்த வியாக்கியானங்களும் சாதாரண மக்களுக்குமிடையிலான வேறுபாடுகளில் இந்த கலாசார சாதனைகளின் விளைவுகளை தெளிவாக அறிந்து கொள்ள முடியும். மேற்கு கலாசாரத்துக்கு சாதகமான நம்பிக்கைகள் சில சமயங்களில் கண்ணாடிபோல் தெளிவாகவும் சில சமயங்களில் திரிவு பட்டும்- எப்படி உலகம் இருக்கிறதோ அப்படியில்லாமல்- தோன்றுகிறது. ஆனால் வரலாறு புகழ்பாடும் அதன் சிருஷ்டி கர்த்தாக்களின் செயல்பாடுகளில் இவைகளை தெளிவாக கண்டுகொள்ள முடியும்"

பகுத்தறி விஞ்ஞானம் மற்ற அறிகை முறைகளை அடக்குவது மூன்று தளங்களிலாகும்.

அ) உளதாம் இயல் (Ontological) ரீதியாக மற்ற இயல்புகள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை.

ஆ) அறிவாராட்சியியல் (Epistemological) ரீதியாக மற்ற அறிதல் முறைகள் மதிக்கப்படுவதில்லை.

இ) சமூகவியல் (Sociological) ரீதியாக நிபுணர்களாக விற்பன்னர்களாக இல்லாத மக்கள் அறிவை தேடவும் அதை மதிப்பீடு செய்யுமான உரிமை மறுக்கப்படுதல்.

இவைகள் எல்லாம் அரசியல் செயல்பாட்டுச் சரக்காகும். விஞ்ஞானமே அல்ல. இயலுலகு பற்றிய ஒரு வழிஅறிகை முறையை மாத்திரம் தேர்ந்தெடுத்து, அதில் ஒரு குழுவை மாத்திரம் பயிற்றுவித்து அவர்களை ஒரு குறித்த இயல்புகளை மாத்திரம் கண்டறிய வைப்பது ஓர் அரசியல் செயல்பாடாகும். அவை விஞ்ஞான முறையின் பாற்பட்டவையல்ல. விஞ்ஞான முறைமையில் விளையும் அறிவு, இயற்கை விதிகளின் வெளிப்பாடாகும். அது புறவயமானதும் பிரபஞ்சமளாவியதுமாகும். பெயரபெண்டின் சொற்கள் இவ்விடத்தில் பொருத்தமாக உள்ளன.

"ஒரு குறித்த பாரம்பரியத்துக்குரிய பண்புகளின் மதிப்பீடுகளைச் சார்ந்ததே புறவய நோக்குள்ளது அது வெறும் கண்டறிவதால் உருவாவதல்ல உள்வய நோக்கின் பாதிப்பின்மை என்பதை புறவய நோக்காக கொள்ள முடியாது. அது கவனியாது விடுதலாகும்". நடு நிலை அவதானிப்பு என்று சொல்லப்படுகின்ற பரிசோதனை என்பது மக்கள் நாளாந்த நடைமுறைகளில் பெறும் பட்டறிவு,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விஞ்ஞான அந்தஸ்துக்கு உயர்வதைத்தடுக்கும் ஓர் அரசியல் ஆயுதமாகும்.

இது வன் செயலை உருவாக்கும் பொருட்டாக ஒழுக்கமற்ற தொழில் நுட்பத்தினதும், அரசியலினதும் துஷ்பிரயோகமே ஒழிய விஞ்ஞானத்தின் உள்ளார்ந்த செயல் அல்ல என்று அதன் சார்பாக விவாதிக்கப்படுகிறது. இவ்விவாதம் வெளிப்பார்வைக்கு சரியாகத் தோன்றினாலும் எதிர் வாதத்துக்கு தாக்குப் பிடிக்கக் கூடியதல்ல. விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் வெவ்வேறாகப் பிரிக்க முடியாததாகி, இரண்டறக் கலந்து முதலாளித்துவ, ஆணாதிக்க வாதத்தின் விஞ்ஞான- இராணுவ- தொழில் துறைகளின் கூட்டிணைவோடு ஒத்திசைவாக இயங்கும் இக்காலையில் இவ்விவாதம் ஏற்புடையதல்ல. ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்பும் அதன் கருத்தியலுக்கு மிடையே விஞ்ஞானம் தொடர்பு பட்டுள்ளது என்ற உண்மையை புகைமூட்டம் போல் மறைக்கும் செயல்பாடுகளாக, துண்டாக்கலும் அத்துண்டுகளை கூறுகளாக்கலும் அமைந்துள்ளன. விஞ்ஞான உண்மைகள் பரிசோதனைக்குட்பட்டவை, நடு நிலையானவை, நிருபிக்கப்பட்ட கூற்றுக்கள் என்று விஞ்ஞானம் பிரகடனப்படுவதால் அவை அனைத்துலகப் பொதுவானதாகவும் சமூக சார்பற்றதாகவும் இருக்க வேண்டும். ஆனால் அடக்கப்பட்ட பாரம்பரியங்களின் நோக்கில் பகுத்தறிமுறையின் இந்த 'உண்மை' போலியானவை, அடக்கியாள்வதற்கானவை. பெண்கள், மற்றும் மேற்குசாரா கலாசாரங்கள் உட்பட மனித குலத்தின் பெரும் பகுதியினரின் சமூக வாழ்வை சிதிலமாக்கி, அதன் விலையில் தனது சாதனையை கட்டியெழுப்பிய போதிலும் நவீன விஞ்ஞானத்தை மானிடத்தின் மாபெரும் சாதனை என்று நாங்கள் ஏன் கருதுகிறோம்? விஞ்ஞானத்தின் கலாசார அழிப்பையும் மேலாதிக்கத்தையும் நன்கு புரிந்துள்ள சந்ரா ஹார்டிங் கேட்கிறார்.

"சூழல் அனர்த்தங்களுக்கு, இராணுவவாதத்துக்கு, மனித உழைப்பை உடல்,உள சித்திரவதையாக்கியமைக்கு, மற்றவர்களை- காலனியாக்கப்பட்ட மக்கள், பெண்கள், ஏழைகள்- கட்டுப்படுத்தும் மார்க்கங்களை கண்டறிவதற்கு விஞ்ஞானம் துணைபோனமை வெறும் பிரயோக விஞ்ஞானத்தின் செயல்பாடுகள்தான் என்று அமைதி கொள்ளலாமா? அல்லது பரிசோதனை முறையின் நோக்கங்களையும் இலட்சணங்களையும் கொண்டு அதை முறை கெட்ட விஞ்ஞானம் / துஷ்பிரயோக விஞ்ஞானம் என அடையாளம் கண்டு ஆணிய விஞ்ஞானம் என்ற வகையினதாக்கலாமா?"

## நவீன விஞ்ஞானமும் சூழலியற் சிக்கல்களும்

இயற்கையதீதம்- இயற்கை என்ற பிரிவு மேற்கு நாடுகளையும் மற்ற நாடுகளையும் சேர்ந்த தத்துவாசிரியர்கள், சமூகவியலாளர், மானிடவியலாளர் யாவரும் ஒரு சேர மிக அண்மைக்காலம் வரையிலும் எல்லா பாரம்பரிய சிந்தனைகளையும் இயல்பு நிலைக்கப் பாற்பட்டனவாகவும் புதிரானவைகளாகவும் பகுத்தறிவுக் கொவ்வாதனவாகவும் கருதி ஒதுக்கி வந்தனர். இதற்கு மாறாக நவீன விஞ்ஞானம் இயல்பானதாகவும் உலகியல் சார்ந்ததாகவும் நடைமுறைக்குகந்ததாகவும் பகுத்தறிவுக்குரியதாகவும் கருதிப் போற்றினர். ஆயினும் நிலைமை அங்கனமானதல்ல விஞ்ஞானிகள் அரூபமான விஞ்ஞான முறையின்படி நோக்கிய கூற்றுக்களை நேரடியான அவதானங்களோடு ஒத்துப்பார்க்கின்றனர். அவைகளை தங்களது துறைசார் கல்வியில் உள்ள கொள்கைக்கேற்ற வண்ணம் குறைக்கின்றனர். உண்மையில் இக்குறைத்தல் இயற்கைபற்றிய விஞ்ஞானக்கொள்கைகளின் பூர்வாங்க ஆராய்ச்சி வெளிப்படுத்துவது போல், சாத்தியமற்றது. இச்செயல் முற்கோள்களை உண்டாக்கி அவதானிப்பையும் அவதானங்களையும் தீர்மானிக்கிறது. மேலும் நடுநிலை அவதானிப்புரிய சொற்களின் பஞ்சம் அக்கொள்கையை சரிபார்க்க இயலாததாக்கிறது. விஞ்ஞானத்தின் வெளிப்பாடுகள் மெய்மைத் தேர்வு செய்யக்கூடிய மாதிரி அமைப்பின் பிரகாரம் வரவில்லை. முன்னரே வடிவமைக்கப்பட்ட உருவகத்தையும் கட்டளைப் படிமத்தையும் கொண்ட விஞ்ஞானிகள் சமூகம் என்கிற சிறப்புத்தேர்ச்சியாளரிடமிருந்து வெளிவருகிறது என்ற உண்மை மெல்ல மெல்லமாக வெளிவந்து கொண்டிருக்கின்றது. அவர்களின் உருவகமும் கட்டளைப்படிமமும் அவதானிப்பு, அவதானிக்கப்படு பவைகள், சொற்கள், வாக்கியங்கள் யாவற்றையும் தீர்மானிக்கின்றன. **இயற்கை உலகால் அல்லாமல் விஞ்ஞானிகளின் சமூக உலகால் விஞ்ஞானத்தின் பொருளும் போக்கும் நிச்சயிக்கப்படுகின்றன. இக்காரணங்களால் நவீன விஞ்ஞானத்திற்கும் அதன்கொள்கைகளின் முற்கோள்களுக்கும் பாரம்பரிய சமூகங்களின் புராணிக சிந்தனைக்கும் அதன் இயற்கைய தீதத்திற்கும் இடையே வேறுபாடுகள் காட்டக்கூடிய பிரமாணங்கள் ஏதும் இருப்பதாக தோன்றவில்லை.**

நவீன விஞ்ஞானம், மரபுவழிச்சிந்தனைகள் ஆகியவற்றின் கொள்கை நடைமுறைச் செயற்பாடுகளில் ஏற்பட்டுள்ள பரிச்சயமும் விழிப்புணர்வும் இயற்கைய தீதத்திற்கும் இயற்கைக்கும், பகுத்தறிவின் மைக்கும் பகுத்தறிவுக்கும் சமயச்சார்புக்கும் விஞ்ஞானச் சார்புக்குமிடையிலான வேறுபாடுகளை நீங்க முனைகின்றன. இதனால் அறிவாராய்ச்சியல் அந்தஸ்திலிருந்து விஞ்ஞானம் இறக்கப்பட்டுள்ளது. அதே நேரம் மரபுவழிச்சிந்தனைகள் இன விஞ்ஞானம் என்ற நிலைக்கு உயர்தப்படுகின்றன. இந்த இன விஞ்ஞானம் திட்டவட்டமான ஓர் அறிகை முறையைக்கொண்டுள்ளது. மேலும் அதன் வெளிப்பாடுகள் மக்களின் நாளாந்த மொழியில் அமைந்து அம்மொழியைக் கட்டமைத்தும் உள்ளன. ஒவ்வொரு சமூகமும் மக்களும் தமக்கென பிரத்தியேகமான இன விஞ்ஞானத்தை உருவாக்கியுள்ளனர். கொள்கை ரீதியான மரபுவழிச்சிந்தனை பற்றிய விளக்கங்கள் இன விஞ்ஞானச்சிந்தனைகள் இயற்கையதீதம் பற்றிப்பேசவில்லை, இயற்கையைப்பற்றியே பேசுகின்றன. என விளக்கியுள்ளன. அச்சிந்தனைகளும் நவீன விஞ்ஞானமும் ஒரே அறிவாராய்ச்சியியல் தரத்துக்குரியன எனவும் அவை விளக்குகின்றன. அவைகளின் அறியும் ஆற்றல் எவ்வகையிலும் நவீன விஞ்ஞானத்துக்கு குறைந்ததல்ல

குன் என்பவர் எடுத்துக்காட்டுவதுபோல் விஞ்ஞானிகள் எச்சந்தர்ப்பத்திலும் மாற்றுமுறைகள் உள்ளன என்பதை கொள்கைரீதியாகவோ, நடைமுறைரீதியாகவோ அறிந்துகொள்வதில்லை. ஜனரஞ்சகமாக நினைப்பதுபோல் விஞ்ஞானம் சகல மாற்றுச்சிந்தனைகளுக்கும் கதவை திறந்து வைத்து அச்சிந்தனைகளுடாக ஆய்வுகள் செய்து முடிவுகள் தருவதில்லை அவ்வாறு நடவாமல் ஆட்சியிலுள்ள கட்டளைப்படிமம் கட்டுப்படுத்துகிறது. மறுபக்கமாக இருகவர்பிளவு நோக்கால் விஞ்ஞானிகள்

www.tamilarangam.net

மரபுவழிச்சிந்தனைகள் பற்றி சிறிதளவுதானும் அறிய முடிவதில்லை. இதனால் அவர்கள் படைப்பாற்றலில் குறைந்தவர்களாகவும் தேங்கி நிற்பவர்களாகவுமுள்ளனர். மாற்றுமுறைகள் பற்றி வெறும் ஊகமே அவர்களிடமுண்டு. இந்த சிக்கலான நிலைமைகள் பற்றி 'திறந்தது' 'மூடியது' என்ற பாங்கில் ஒருவர் திட்டவட்டமாக பேசமுடியாது. நம்பிக்கை முறைகள் மெதுவாகவோ விரைவாகவோ மாறுகின்றன என்று மட்டும் சொல்லலாம்.

அப்படியாயின் ஆய்வறிவுபூர்வமாக கூர்ந்தும் உயர்தரத்திலான கொள்கைகளை நோக்கி சிறந்தும் சிந்தனை மலர்ச்சியடைவதேன்? பொப்பரின் பொய்யாக்கற்கோட்பாடு இச்செல்நெறியை அடையாளம் காணுவதாக உள்ளது. விமர்சனத்தால் நம்பிக்கைகள் கைவிடப்பட்டு புதுநம்பிக்கைகள் ஏற்கப்படுகின்றன. இச்செயல்பாடு மேலும் மேலும் சிறந்த பகுத்தறிவுடமையையும் புறவயத்தன்மையையும் நோக்கி விஞ்ஞானத்தை நகர்த்துகிறது. இருந்த போதிலும் புரட்சி - ஊடாக - முன்னேற்றம் என்ற பார்வை பல குழப்பங்களை எதிர் கொள்கிறது. குன்னின் கூற்றுப்படி அருபமான விஞ்ஞான முறையின் தர்க்க, பிரயோக பிரமாணங்களால் மாத்திரம் அல்லாமல், விஞ்ஞான மாற்றம் என்பது சமூக அரசியல் அம்சங்களாலும் வழி நடத்தப்படுகிறது எனக்கொண்டாலும் முன்னேற்றம் எவ்வாறு மாற்றத்தால் சாத்தியமாகிறது. என்பதை விளங்கிக் கொள்வது கஷ்டமாக இருக்கும். 'உலகியல் சார்பற்ற மூன்றாம் உலகின் அறிவும் கருத்தும் என்ற' பொப்பரின் வாதமும்கூட இதன் தாற்பரியத்தை விளக்கத்தவறிவிடுகிறது. இருந்தாலும் நடைமுறை உலகில் கருத்துக்களும் நம்பிக்கைகளும் செயலுக்கு வழிகாட்டுகின்றன. அவைகள் நிலைமாற்றத்தையும் அதற்கான விளக்கங்களையும் தருகின்றன. திடிர் மாற்றம் நிகழும் போதில் இவ் விளக்கங்கள் காலத்துக்கு ஒவ்வாததாகி பகுத்தறிவற்றனவாகவும் பொறுப்புணர்வற்றனவாகவும் தோன்றுகின்றன.

சமகால சூழலியல் சிக்கல்களில் இந்த பொறுப்புணர்வற்ற, பகுத்தறிவற்ற தன்மைகளுக்கான பலமுனைப்பான உதாரணங்கள் காணப்படுகின்றன. பாரம்பரிய சிந்தனைகள் மிக அரிதாகவே சூழல் அனர்த்தத்துக்கு வழிகோலுகின்றன. அநேக சந்தர்ப்பங்களில் அது சூழலையும் சமூகத்தையும் பேணிப்பாதுகாக்கிறது. இதற்கு மாறாக நவீன விஞ்ஞானத்தின் சிந்தனையும் செயலும் வாழ்வின் இருப்புக்கு பிரத்தியேகமாக சுகாதாரம், உற்பத்தி, ஊட்டம் ஆகிய துறைகளில் ஊறு செய்ய உடந்தையாகி உள்ளன.

விஞ்ஞானத்தின் புதிய தத்துவ ஞானம் இயற்கையதீதம்- இயற்கை என்ற பாகுபாட்டையும் சமூகம்- விஞ்ஞானம் என்ற இருமையையும் உடைத்தெறிந்து இன விஞ்ஞானத்துக்கும் நவீனவிஞ்ஞானத்துக்குமிடையே ஓர் அறிவாராய்ச்சியியல் சமநிலையை ஏற்படுத்தியுள்ளது. ஆயினும் அது உருவாக்கியுள்ள மாதிரிகள் இயற்கை பற்றிய நம்பிக்கைகளை லௌகீக ஒளியில் பரிசீலிக்க முனைவதாயில்லை. குன் திட்டவட்டமாக கூறியுள்ள படி 'பூமராங்' போல் தொழிற்படும் இயற்கையை நெகிழ்ச்சி யடைய முடியாத கட்டளைப்படிமம் என்னும் பெட்டிக்குள் பொருந்த முனைவதால், விஞ்ஞானத்தின் நோக்கு மாற்றுச் சிந்தனைகளை ஏற்க மறுக்கிறது. எதிர் பாராத, எதிர்வு கூறாத மாற்றங்கள் இயற்கைச் சூழலில் நிகழும் போது, அவைகளின் பாதிப்புகள் கடுமையாகவும் தீவிரமாகவும் இருக்கும் போது, மாத்திரமே விஞ்ஞான நம்பிக்கைகள் மறு பரிசீலனைக்கு உள்ளாகின்றன.

அன்ரிபயோடிக்ஸ் அதிதீவிர தொற்றையும்(Super infection) வெள்ளக் கட்டுப்பாடு வெள்ளப் பெருக்கையும் மிகுவித்த போது செயற்கையுரம் நிலத்தின் ஊட்டத்தை கவர்ந்தபோது, பிரச்சினை வெறும் தொழில் நுட்ப பிரயோகத்துக்கும் துஷ்பிரயோகத்துக்குமிடையிலானதாக இல்லை. அவைகள் உண்மையில், விஞ்ஞானத்தால் பூதாகரமாக்கப்பட்ட இயற்கையின் நடைமுறைச் சிக்கல்க ளாகும். அவைகளின் மூலங்கள் நவீன விஞ்ஞான அறிவு - உருவாக்கம் - வளர்ச்சி செயல்முறைகளில் வேர் கொண்டுள்ளன.

## இயல்பானது இயல்பற்றது என்ற பிரிப்பு

நவீன விஞ்ஞானத்தில் மூன்றாவது வகை அறிவொன்றுள்ளது. அது துணிக்கைப் பௌதீகத்தைப் போன்று பொருளியல் தேவைக்கான பரிசோதனைக்கூட அமைப்புளுக்கு அப்பால் பட்டதோ சுகாதார, உணவு, ஊட்டம் போன்ற துறைகள் போல் சூழல் சமநிலையை குழப்புவதோ அல்ல. இலத்திரனியலும் அதனோடு தொடர்புடைய துறைகளும் இதற்கு நல்ல உதாரணங்கள்.

நம்பிக்கை - செயலும் கொள்கை - பிரயோகமும் இணைந்து லௌகீக அறிவாராய்ச்சியில் மதிப்பீட்டுக்கான ஓர் அலகை ஏற்படுத்தியுள்ளன. இதை நவீன விஞ்ஞானத்தில் இரு தளங்களில் விளக்கியுரைக்கலாம். முதல் தளத்தில் பொருளியல் தேவைக்கான நிலைமாற்றம் சார்ந்த செயல் அல்லது பிரயோகம் விஞ்ஞானியின் பரிசோதனைக்கூட சூழ்நிலையில் மாத்திரம் நடத்தப் படுகின்றன. ஆனால் பல விஞ்ஞானக் கொள்கைகள் இந் நிலைக்கு பொருத்தமுடையனவல்ல உதாரணமாக வான் பௌதீகத்தில் அல்லது துணிக்கை பௌதீகத்தில் உள்ள பல கொள்கைகள் பரிசோதனைக்கூட செயல்முறைக்கு அடங்காதன. விரிந்த பிண்ணனியில் மாத்திரம் பொருந்துவன. இக்கொள்கைகள் பகுத்தறிமுறைச் செயல்திட்டங்களில் ஆர்வமூட்டுபவையாயிலும் இன விஞ்ஞானத்தோடும் சூழலியல் நோக்கோடும் பெரிதும் சம்பந்தமுடையனவல்ல. இங்கே நாங்கள் எமது தேவையின் பொருட்டாக சூழல் தாக்கங்களோடும் விரிந்த பிண்ணனியோடும் சம்பந்தமுடையவற்றையே கருத்தில் கொள்கிறோம். கொள்கைகளையும் அவற்றின் பிரயோகங்களையுமே ஆராய்கிறோம். கொள்கைகள் பொருளியல் தேவைகளை நோக்கியும் விசாலிக்கக் கூடியவைகளாக இருந்தால் அவைகளின் சூழலியல் மதிப்பீட்டை எடை போட விரிந்த பின்னணியை பயன்படுத்த வேண்டும். ஆனால் அவ்வாறான கொள்கைகள் இந்த இரண்டாம் நிலையை அடைவதில்லை.

செயற்கைப் பொருள்களும் செயற்கைச் சூழலும் இத்துறைகளால் சாத்தியமாகுபவை. இவ்வுபகரணங்கள் நிலைமாற்றச் செயல்பாடுகளினூடாக பெறப்பட்டாலும் சூழல் சமநிலையையும் இயற்கை உறவையும் சீர்குலைக்காதன. இயற்கை மூலத்தை இப்பொருள்கள் கொண்டிருந்த போதிலும் உற்பத்தியின் பின்னர் அதிலிருந்து விடுபட்டு இயங்குபவை. இப்பொருள்களின் உற்பத்தி மனித இருப்புக்கு அடிப்படையான இயற்கையின் செயல்பாட்டில் மாற்றீடுகள் செய்வதில்லை. மாறாக அவை இயற்கையின்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாய்ப்புகளுக்கு ஒரு பிற்சேர்க்கையாக அமைகின்றன. இன்றைய பின்- கைத்தொழில் சமூகங்களைப்போல், உணவுத்தேவைக்கு குறைவளர்ச்சியடைந்த நாடுகளைச் சார்ந்து நிற்பதா? சுயமாக இயற்கையைச் சார்ந்து நிற்பதா? இவற்றில் எது சிறந்தது? மனித இருப்புக்கான தேவைகளை வழங்குவதில் நவீன விஞ்ஞானத்தின் போதாமையை சூழலியல் நோக்கில் இது புலப்படுத்தப்படுகிறது.

இயற்கை பல்வகைமையுடையது. இதனால் ஒரு நம்பகத்தன்மை வாய்ந்த அறிவு பல்வகைத்தன்மையை பேணுவதாயிருக்கும் இன- விஞ்ஞானங்கள் பொருத்தப்பாடு மிக்கதாயிருத்தல் பல்லினத்தன்மையில் இயல்பதால்தான். பகுத்தறி விஞ்ஞானம் அனைத்துலகப் பொதுமையடைந்து ஒருமையில் இயல்வதால் இயற்கையானதல்ல. ஆகவே ஒருமைக்கு அல்லது பொதுமைக்கு பொருத்தமான புறவய நோக்கு அர்த்தமற்றதாகிறது. உள்ளார்ந்த வளர்ச்சிக்கட்டங்களாக இயற்கையையும் வரலாற்றையும் நோக்குபவர்களுக்கு இன- விஞ்ஞானத்திலிருந்து வழிகாட்டலைப் பெறுவது பின் நோக்கிப் போவதாக தோன்றுகிறது. மாறாக மற்றவர்களுக்கு, மனித சமூகங்களும் சூழல் தொகுதிகளும் ஓர் உறுதியான ஒழுங்கிலும் வகைமைகளிலும் நிலை கொண்டுள்ளன என்ற நோக்குள்ளவர்களுக்கு, இன- விஞ்ஞானத்தின் வழிகாட்டல், பகுத்தறிமுறையின் வழியில் எங்கெங்கோ அலைந்து திரிந்து சரியான பாதைக்கு மீள்வதாக தோன்றுகிறது.

ஆதியான முலைப்பாலூட்டல், குழந்தை உணவு உற்பத்தி தொழிற்றுறை விஞ்ஞானத்தாலும் விளம்பர நிறுவனங்களாலும் தரம் குறைக்கப்பட்டிருந்தது. முலைப்பாலூட்டல் சூழலியல் பண்புகளைப் பேணியதால் அப்புராதன செயல் மீண்டும் புத்துயிர்ப்பு பெற்றுள்ளது. பகுத்தறிமுறைக்கட்டளைப் படிமத்தில் சுகாதார பராமரிப்புக்கு இரசாயன மயமாதலே ஒரே வழி எனக் கருதப்பட்டது. இன-மருத்துவத்தில் நடந்த மீட்புப் பணிகளால் பூரணமான மருந்துகளும் சிகிச்சை முறைகளும் மீண்டும் பாவனைக்கு வந்துள்ளன. நாற்பது நூற்றாண்டுகளாக விவசாயிகளால் பயின்று வந்த விவசாயம் அதன் பல்லின அடித்தள அம்சங்களுடன் மீண்டும் தலையெடுக்கத் தொடங்கியுள்ளது. சூழலியல் சிந்தனை, செயல்பாடுகள் இன- விஞ்ஞான மரபோடு தொடர்பு கொண்டதாலேயே இவைகள் சாத்தியமாகியுள்ளன. வாழ்வின் இருப்புக்காக உலகைப் பரிலித்திட வேண்டுமென்றால் அதற்கான மனிதனின் ஆற்றல் முதலில் பேணப்பட வேண்டும். சூழல் தொகுதிகளின் அழிவை முன் உணர்தலே இதற்கான மூல உபாயமாகும்.

சமகால பெண்பாலாரின் சூழலியற் போராட்டங்கள் நிலை பேறுக்கும் உறுதிப்பாட்டுக்குமான புதிய முயற்சிகளாகும். அவை தேக்கத்தை ஏற்படுத்துபவை அல்ல. இயற்கையோடு ஒரு சமநிலையைப் பேணுவதால் நுட்பமானவை. மேலும் தொழில் நுட்பத்தில் பின்னடைவை தோற்றுவிக்காதவை. நீர் வளம், நிலவளம் குன்றல், உயிர்பன்மையின் சீர்குலைவு ஆகியவற்றால் உலகின் கால்பங்கினர் பட்டினியால் அச்சுறுத்தப்பட்டிருக்கிற பொழுதில், கானல் நீர் என்னும் முடிவில்லாத வளர்ச்சியை நோக்கி, அழிவை ஏற்படுத்தும் தொழில்நுட்பத்தை எங்கும் பரப்பிய வண்ணம் தலைதெறிக்க ஓடிக் கொண்டிருத்தலே இன்றைய இனப் படுகொலைகளின் பிரதான காரணியாகும். இயற்கையை நாசம் செய்வதன் ஊடாக பல்லாயிரக் கணக்கான மனிதப்படுகொலைகள் வெளிப்பார்வைக்கு புலப்படாவண்ணம் மெல்லமாக நடந்தேறுகின்றன. இன்று நீதிக்கும் சமாதானத்துக்கும் ஏற்பட்டிருக்கும் மிகப் பெரும் அச்சுறுத்தல் இதுவாகும். மேலோங்கி வருகின்ற பெண்ணியவாதிகளும் சூழலியலாரும் பகுத்தறிமுறையின் விமர்சகர்களும் விஞ்ஞானத்தின் நம்பிக்கைகளைபரிசீலிக்கத் தொடங்கியுள்ளனர். சமுதாய ரீதியாக விஞ்ஞான சிந்தனைகளும் நம்பிக்கைகளும் நிபுணர் சக விற்பன்னர்கள் சமூகத்துக்கும் அப்பால், திட்டமிட்டு புறம் தள்ளப்பட்ட பிரிவினரான குடியானவர்கள், இனக்குழுக்கள் - பெண்கள் - கொண்டு செல்லப்பட வேண்டுமென வலியுறுத்துகின்றனர்.

இயற்கையிலும் சமூகத்திலும் நிகழும், யதார்த்த செயற்பாடுகளில் ஒரு விஞ்ஞான ஒழுங்கின் பிரயோகம் ஏற்படுத்தும் விளைவுகளை பொறுத்தே அவ்விஞ்ஞான ஒழுங்கின் சரியும் உறுதிப்பாடும் உள்ளன என்று ஹார்டிங் கூறுகிறார்.

"நவீன கலாசாரங்களில் கடவுளோ, மரபோ விஞ்ஞான பகுத்தறிவு வாதம் பெற்றுள்ள முதன்மையைப் பெறவில்லை..... விஞ்ஞானத்தின் புனிதத்தன்மை என்ற வெளிப்பாடு அதை விமர்சனத்துக்கு அப்பால் ஒதுக்கி வைத்துள்ளது. மனித குலத்துக்கு வழங்கப்பட்ட புனிதமான கட்டளைகள் போல் அல்லாமல் விஞ்ஞானத்தின் கட்டமைப்பையும் பிரயோகத்தையும் ஒரு கலாசாரத்தின் விருப்புக்குரிய கைவேலைப் பொருட்கள் போல் நோக்கி, ஆய்ந்து, அறிய பழகிக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு செய்யத் தவறி விடுவோமாகில் விஞ்ஞானத்தின் பிறப்போடு அமைந்துள்ள பால் வேறுபாடுற்றுள்ள சமூககட்டமைப்பு, ஆணிய அடையாளங்கள்,தனிப்பட்ட விஞ்ஞானிகளின் நடத்தைக் கோலங்கள் ஆகியவை அதன் (விஞ்ஞானத்தின்) ஐயங்கள், கருத்துக்கள், கொள்கைகள், முறைமைகள், விவரணங்கள், ஒழுக்கங்கள், பொருள்கள் என்பவைகளின் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கங்களின் மூலங்களை இனம் காணுதல் இயலாது போய்விடும்"

பெண்ணியக் கோட்பாடுகளின் அறிவார்ந்த கண்டு பிடிப்புகள் பெண்களின் வாழ்விலும் மேற்கல்லாத கலாசாரங்களிலும் புதிய நடைமுறைகளைத் தோற்றுவித் துள்ளன. இவைகள் எல்லா உயிர் வாழ்விகளுக்குமான ஒரு ஜனநாயகத்தை ஏற்படுத்துவதில் பிரதான பங்கு வகிக்கின்றன. மேலும் அவை பகுத்தறி முறைமை உருவாக்கிய புத்திஜீவிக் கலாசாரத்தை ஒழித்து, அதற்கு நிகரான மாற்றீடாகவும் விளங்குகின்றன.

உயிர் கொண்டிருத்தலை உறுதிப்படுத்த இயற்கை பாதுகாக்கப்பட வேண்டும். இந்த வன்முறையற்ற உலக ஒழுங்கில் சூழல் இயக்கங்கள் அரசியல் இயக்கங்களாக உள்ளன. அவைகள் சிறிய அளவினதாயினும் வளர்ந்து கொண்டிருக்கின்றன. மேலும் அவை வட்டாரம் சார்ந்திருந்தாலும் அவைகளின் வெற்றி வட்டார எல்லைகடந்த தாக்கத்தில் தங்கியுள்ளது. அவைகள் உயிர் வாழும் உரிமையைக் கோருகின்றன. இன்னும் நீதியான சமாதானமான உலகில் வாழும் உரிமையை அவைகோருகின்றன. இந்த அடிநிலை இயக்கங்களின் வெற்றியிலேயே உயிர் வாழ்க்கையின் இருப்பு தங்கியுள்ளது. அனைத்துலகு சார்ந்த சூழல் அம்சங்களுக்கேற்ப உலகம் மீளமைக்கப்படாவிட்டால், வாழ்க்கை முறைகள் மற்றும் நீதி, சமாதானம் என்பவை தொடர்ந்தும் வன்முறைக்குட்பட்டால், நிச்சயமாக மனிதவாழ்வின் இருப்பு பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாகும்.

www.tamilarangam.net

## சோலைக்கிளி

# பேச்சியும் ஊஞ்சல் சத்தமும்

இருட்டி
எவ்வளவு நேரம்
கொஞ்சம் இடும்போ
இன்னும் வரவில்லை
நிலா

ஊரில்
வேலியிட்டு வேலியிட்டு
வளவுகளைப் பிரித்து
துண்டாடி
தனித்தனியே
மாப்பிள்ளைக்காய்
ஒவ்வொரு குமருக்கும் ஒவ்வொரு இராச்சியத்தை
உருவாக்கும் முயற்சியினால்
பொந்துகள் அனேகம்
நிலாப் பொம்பளையும் ஓர் இடுக்குள்

சிக்குண்டாவோ

பசு நெய்யில் கொழுந்து
வாட்டுகின்ற மரங்கள்
மூக்குக் கறுத்து நிற்கும்
எங்களூர் பூதம்
கடப்படியில் வந்து
நெல் அளக்கும் இருட்டுக்குள்

வாப்பா
இருமிக்கொண்டு வந்தார்

அந்தச் சீதேவி செய்த காரியத்தில்
நிலா புதைந்த துயரம்போய்
எழும்பிய தைரியத்தில் பதிலுக்கு இருமினேன்
அந்தச் சாதி கனைத்தது
கோபத்தில்
என்னசெய்ய
மின்சாரம் இல்லையே உலகத்தில்
அது பொழுதோடு விக்கி விறைத்தது.

ஒரு தீப்பெட்டிக்குள்ளேதான் எனது வாழ்க்கையும்
சிறு குச்சியைப்போல
என்னை உரசி எறிந்தால் ஊர் அழியும்
அந்த அளவுக்கு
என் தலையில் நெருப்பு
ஆண்டவனே
வாப்பா ஏசுவார்
கதவை திறக்கவில்லை இன்னமும்
நான் பேய்ச்சி
கதையில் சுணங்கிவிட்டேன் ஊஞ்சல் சத்தம்
இன்னேரம் கேட்கவேண்டும் வாப்பா ஆடுவார்.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புரொயிலர் கோழி வளர்ப்பு முறைமையும் காலனித்துவ கல்வி முறைமையும்

## அன்பே சிவம் சினிமாவை முன்னிறுத்தி சில அவதானக் குறிப்புகள்



வி. கௌரிபாலன்.

இது ஒரு உயிரினம்தானா என்ற கேள்வியை அடிக்கடி எழுப்பும் இந்த புரொயிலர் கோழிகள். மரணம் இதன் குரல்வளையை நெரிக்கும் போது காட்டும் எதிர்ப்பே இதுவும் ஒரு உயிரினம்தான் என்ற நினைப்பை உருவாக்கும் இந்த புரொயிலர் கோழிகளின் பிறப்பு செயற்கையான வெப்பநிலையில் ஓர் உயிரனிம் தோன்றுவதற்கான கூறுகள் அற்ற முட்டைகளில் இருந்து இரசாயனங்களின் துணை கொண்டு பிறப்பிக்கப்படுகிறது பின் நேர்த்தியான பாதுகாப்புடன் அது வளர்ப்பாளனிடம் கையளிக்கப் படுகிறது. பின் இதை வர்த்தக நோக்குக்காக வளர்க்கும் வளர்ப்பாளன் இதை அதி உயர் பாதுகாப் பான கூண்டுகளுக்குள் வளர்க்கிறான் இவை உணவுகளை தேடி உண்ணா. பொதிகளில் கொண்டு வரப்படும் உணவுகள் வேளா வேளைக்கு கூண்டுகளுக்குள் கொட்டப்படும். இவை நோய் எதிர்ப்பு சக்தியற்றவை எனவே இவற்றின் வளர்ச்சிப்பருவத்திற்கு ஏற்ற மருந்துகள் திணிக்கப் படும். இவற்றின் கழிவுகள் வளர்ப்பாளனால் உரிய வேளையில் அப்புறப்படுத்தப்படும். அதுமட்டுமலாது குறிப்பிட்ட 40 நாட்களுக்குள் இவை விற்கப்படாது போனால் இக் கோழிவளர்ப்பாளன் பாரிய நஸ்டத்தை அடைவான்.

இக் கோழிகள். அவை வளர்க்கப்படும் அதி உயர் பாதுகாப்பான கூண்டுகளுக்குள் இருந்து வெளியேற நேருமானால் இவை தடுமாறும். உணவை தேடிச் செல்ல முடியாது தவிக்கும். நோய் எதிர்ப்பு சக்தி இல்லாததால் உடனடியாக நோய்வாய்ப்படும். போர்க்குணம் இல்லாததால் மிக இலகுவில் வேட்டை யாடப்படும். எனவே இவை வெளியேறிய சில மணி நேரத்திலேயே இவை மரணத்தை சந்திக்கும்.

இது இந்த புரொயிலர் கோழிகளுக்கு மட்டும் நிகழும் நிகழ்வல்ல இன்றைய காலணித்துவ, நவகாலணித்துவ கூறுகளினூடாக எமது கல்வி முறைமைக்குள்ளால் வளர்க்கப்படும் இன்றைய எமது இளம் சந்ததியின் நிலையும் இதுவே. மல்டிநெசனல் கொம்பனிகளின் எலும்புத் துண்டை விழுங்கிக் கொண்டிருக்கும் ஏகாதிபத்திய அரசியல் தலைமை களிலிருந்து ஐ.நா. உலகவங்கி அரச சார்பற்ற சில நிறுவனங்கள் மற்றும் தமது இறைமையை தக்கவைத்துக் கொள்வதற்காக இவற்றிடம் சரணடை யும் சிறிய, வறிய நாடுகள் இவை எல்லாமே மல்ட்டிநெசனல் கொம்பனிகள் போடும் எலும்புத் துண்டை கவ்வுவதிலேயே குறியாக இருக்கின்றன. எனவே இந்த மல்டிநெசனல் கொம்பனிகளின் உற்பத்திப்பண்டங்களை நுகர்வோனாகவும், அவற்றை சந்தைப்படுத்துபவனாகவுமே இன்றை இளம் மாணவர்கள் உருவாவதற்காகன கல்வி முறைமை இந்நாடுகளும், நிறுவனங்களும் வகுத்துத் தருகின்றன. இவற்றின் நேரடிக் கண்காணிப்பாளனாக (வர்த்தகனாக) இன்றைய பெற்றோர் திகழ்கின்றனர். இவர்களும் தமது குழந்தைகள் மல்டிநெசனல் கொம்பனிகளின் உற்பத்திப் பொருட்களின் நுகர்வோனாகவும், இவை தூக்கிப்போடும் எலும்புத் துண்டை கவ்வும் நாய்களாக உருவாவதையுமே பெருமை என கருதுகிறார்கள். மல்ட்டிநெசனல் கொம்பனிகள் தூக்கிப் போடும் எலும்பத்துண்டுகளை எந்த இளைஞன் / இளைஞி அதிகம் கவ்வுகிறார்களோ அவர்களே அதிக திறமை வாய்ந்தவர்களாக புகழப்படுகிறார்கள்.எனவே இவ்வாறான கல்விமுறை மையில் தமது குழந்தைகள் வளர்க்கப்படுவதிலேயே இன்றைய பெற்றோர் முழுக் கவனத்தையும் குவிக்கிறார்கள். இந்நிலையில் அன்மையில் வெளிவந்த 'அன்பே சிவம்' சில வாழ்வியல் சார் நவீன கட்டமைப்புகளை தகர்ப்பதில் கவனம் செலுத்தி இருக்கிறது.

மல்டிநெசனல் கொம்பனிகளின் உற்பத்திப் பொருட்களான உடை, தூ, லெதர்பேக், கிரடிட்காட், செல்போன், நாகரிகமான மொழிக் கையாள்கை எனக் காட்டிக் கொள்ளும் வர்த்தகத்தனமான ஆங்கிலப் பிரயோகம், இத்தியாதிகளுடன், மலட்டிநெசனல் கொம்பனிகளின் உற்பத்திப் பொருட்களின் விற்பனைக்கான விளம்பரப்பட இயக்குனனுமாக இருக்கும், யு.அரசு என்று தன் பெயரை சுருக்கிக் கொள்ளும் அன்பரசுவை, இடதுசாரிச் சிந்தனையை ஒரு உணர்வாக ஏற்றுக் கொண்டவனும், தொழிலாளர்களின் சம்பள உயர்வுப் பிரச்சினைக்காக தெருக் கூத்துப் போடும் கலைஞனும், விபத்தில் சிக்குண்டு கால் ஊனமுற்றவனும், நண்பர்களால் நல்லா என்று அழைக்கப்படுபவனுமான நல்லசிவம். இந்திய விளிம்பு நிலை மக்களின் வாழ்வானது எவ்வாறு சுரண்டப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த யு.அரசு என்கின்ற புரொயிலர் கோழிக்குஞ்சுக்கு காட்டுவதன் ஊடாக இச்சினிமாவானது பல்வேறு நிலையில் பல்வேறு கட்டவிழ்ப்புகளை நிகழ்த்தி உள்ளது எனலாம்.

இச் சினிமாவில் இடம் பெறும் தெருக்கூத்தானது மிக முக்கியமான ஒரு அம்சமாக இருக்கிறது. எல்லா மதங்களினதும் அடிப்படை வாதமானது பொதுவாக மல்ட்டி நெசனல் கொம்பனிகளின் வருமானத்தின் மீது வேட்டு வைப்பவையாகவே இருந்து வருகிறது. தற்போது அமேரிக்காவினதும் அதன் நேச நாடுகளினதும் பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம் என்பது இந்த மல்ட்டி நெசனல கொமபனிகள் தூக்கிப் போடும் எலும்புத்துண்டுளை கவ்வாத மதம் சார் அடிப்படை வாதத்தில் ஊறிய நாடுகள் மீதே இவை தமது குறியை வைக்கின்றன. இதற்கு சிலுவை யுத்தம் எனவும் மதச் சாயம் பூச முனைகின்றன. இதுவே அத் தெருக்கூத்தில் கிருஸ்தவ மதச் சாயம் பூசிக் கொண்டு ஏகாதிபத்திய தலைமைத்துவங்களுக்கு பின்னால் இந்த மல்ட்டிநெசனல் கொம்பனிகள் ஒளிந்து கொண்டிருப்பதை இக் கூத்து நேர்த்தியாக சித்தரிக்கிறது.

www.tamilarangam.net

அதே நேரம் கிறிஸ்தவ மதத்தினூடான மனித நேய இயங்கு பாகம் என்பது பரந்து விரிந்த அளவில் செழுமையானது என்பதையும் இச்சினிமா சித்தரிக்கத் தவறவில்லை விபத்தில் சிக்கி உயிர் பிழைப்பதற்கு சாத்தியமில்லாத நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நல்ல சிவத்தை மீட்பதிலும். ரயில் விபத்தில் சிக்குண்ட மக்களை மீட்பதிலும். அவர்களுக்கு சிகிச்சை அழிப்பதிலும் கன்னியாஸ்திரிகளாக இருக்கும் தாதிகள் காட்டும் அர்ப்பணிப்பும் துல்லியமாக பதிவு செய்யப் பட்டுள்ளது.

'அன்பே சிவம்' தலைப்பில் இச்சினிமா இந்துத்துவத்தை தூக்கியும் பிடிக்கவில்லை என்பதும் திருப்தியான விசயம். 'என்நாடுடைய சிவனே போற்றி' என்று இந்துத்துவத்தை போலியாக பிடித்துக் கொண்டு மலட்டிநெசனல் கொம்பனிகளின் சுரண்டலுக்கு வழிவகை செய்து கொண்டிருக்கும் இந்திய அரசியல் தலைமைத்துவத்தையும். முதலாளி வர்க்கங்களையும் இச் சினிமா பதிவு செய்யத் தவறவில்லை.

அன்மையில் வெளிவந்த சினிமாக்களில் அன்பே சிவம் மிக நுண்ணிய கூறுகளினூடாக ஆரோக்கியமான கட்டவிழ்ப்புகளை செய்திருக்கிறது என்பது துணிபு.




நூலின் வகை :- சிறுகதைத் தொகுப்பு
ஆசிரியர் :- வி.கௌரிபாலன்

ஒப்பனை நிழல் ஆசிரியரின் முதலாவது சிறுகதைத் தொகுப்பு 1994களின் பிற்கூறில் ஈழத்த இலக்கிய உலகிற்கு அறிமுகமான படைப்பாளியான வி.கௌரிபாலன் நவீன சிறுகதை உத்தி முறைகளில் அதிக கவனம் செலுத்திவரும் ஒரு படைப்பாளியாவார்

ஒப்பனை நிழல் - ஈழத்தில் ஒருசில சிறுகதையாளர் களே மீண்டும். மீண்டும் மனனம் செய்வதன் மூலம் திருப்தி கொள்ளும் விமர்சனயாம்பவான்கள் அவசியம் படிக்க வேண்டியதொரு தொகுப்பு.

தொடர்புகளுக்கு
வி.கௌரிபாலன்
570/6
கிருஸ்ணபுரி
உப்புவெளி

# அர்ப்பணிப்பு

கடவுளின் சாம்ராஜ்யம்
நிச்சயம் உங்களுக்கே
எங்களுக்கல்ல

ஐஸ்வரியவான்களாகிய நாம்
அந்த புனித சாம்ராஜ்யத்தை
தரிசிக்க அருகதை அற்றவர்களாம்

எனவே நீங்கள்
விதைத்ததை அறுவடை செய்யுங்கள்
ஆனால்......
அந்த அறுவடையை
மொத்தமாகவே எமக்கு
அர்ப்பணம் செய்துவிடுங்கள்

நீங்கள் வியர்வை சிந்தி
உழைத்த உழைப்பின் தேட்டங்கள்
அனைத்தையும்
பிரதிபலன் கருதாமல்
எமக்கே கையளித்து
ஆனந்தம் கொள்ளுங்கள்
ஏனெனில்..
கடவுளின் ஆசிர்வாதம் மட்டுமல்ல
அவரின்
தூய சாம்ராஜ்யம்
நிச்சயம் உங்களுக்கே உரித்தாகும்.

இந்த பூலோக சாம்ராஜ்யத்தில் நாம்
முதன்மைப் படுத்தப்பட்டோம்
இருந்துமென்ன
கிடைத்தற்கரிய அந்த அற்புத
மோட்ச சாம்ராஜ்யத்தில்
முதன்மைப்படுத்தப்படுபவர்கள்
வேறுயாருமல்ல...... நீங்களே
நீங்களேதான் நிச்சயமாக.

கிடைத்தற்கரிய அந்தக் கொடையை
உங்கள் ஈடேற்றத்திற்காக
'பெருந்' தனத்துடன்
விட்டுக் கொடுக்கும் நாம்
உங்களுக்காக நித்தியம்
இறைவனிடம் மன்றாடுவோம்

எனவே....
உங்களது
ஆசியுடன் கலந்த தியாகத்தால்
என்றென்றும் - ஐஸ்வர்யவான்களாகிய
எம்மால் மட்டுமே
இந்த
பூலோக சாம்ராஜ்யம்
ஆளப்பட்டும்
கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக

**ஷெல்லிதாசன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சமூக அபிவிருத்தி பற்றிய பேராசிரியர் அமாருத்திய சென்னின் புதிய சிந்தனைகள்




தொகுப்பு :- பேராசிரியர் சோ. சந்திரசேகரன்

அண்மையில் நோபல் பரிசை வென்ற இந்திய பேராசிரியர் அமாருத்திய சென் புதுடில்லியில் ஆற்றிய ..... சக்கரவர்த்தி ஞாபகார்த்த பேருரையில் அபிவிருத்தி பற்றிய சில முக்கிய சிந்தனைகளையும் எடுத்துரைத்துள்ளார். மரபுவழிப் பொருளாதாரச் சிந்தனையானது மொத்த தேசிய உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பின் அடிப்படையில் அபிவிருத்தியை விளக்க முற்பட்டது: இவ்வுற்பத்தி அதிகரிப்பானது எவ்வாறு சமூகத்தில் மறுபங்கீடு செய்யப்படுகின்றது? மக்களின் போஷாக்கு. கல்வி. சுகாதாரம். ஆயுட்காலம். வீட்டு வசதி என்பன எவ்வாறு முன்னேற்றமடைகின்றன? என்னும் விடயங்களையும் கருத்திற் கொண்டும் அண்மைக் காலங்களில் அபிவிருத்திக்கு விளக்கமளிக்கப்பட்டது. பொருளாதார நிபுணரான சென் இதற்கு வேறுபட்ட முறையில் அபிவிருத்தி பற்றிய தமது புதிய சிந்தனையொன்றினைத் தமதுரையில் முன் வைத்தார். அவருடைய சிந்தனைகளின் சாராம்சம்:

அபிவிருத்தி என்பது தேசிய வருமானம். தேசிய உற்பத்தி பற்றிய புள்ளி விபரங்களை விடுத்து சுதந்திரத்தை மையமாகக் கொண்டு சிந்திக்கப் படவேண்டிய தொன்று. சுதந்திரத்தை மையமாகக் கொண்டஅபிவிருத்திய பற்றிய சிந்தனையானது அடிப்படையில் வலுவானது: சந்தை மையப் பொருளாதார முறைமையில் கூட அரசாங்கம் எத்தகைய பாத்திரத்தை வகிக்கின்றது என்பதை சிந்தனை நன்கு தெளிவுபடுத்துகின்றது.

சனநாயக சுதந்திரங்களும் அரசியல் உரிமைகளும் அபிவிருத்திச் செயற்பாட்டுடன் பின்னிப் பிணைந்தவை: இப்புதிய சிந்தனையான்து அபிவிருத்திச் செயற்பாட்டில் மக்களின் ஆக்கபூர்வமான பங்கினை வலியுறுத்துகின்றது.

மக்கள். அபிவிருத்திச் செயற்பாட்டினால் நன்மை பெறுபவர்கள் என்ற முறையில் பார்க்கப்படாது. அவர்களும் அச் செயற்பாட்டில் பங்கு கொள்பவர்கள் என்று கருதப்படல் வேண்டும்: எனவே அபிவிருத்தி என்பது மக்களை மையமாகக் கொண்டது.

சுதந்திரம். மக்களின் சனநாயக உரிமைகள் என்பவற்றின் அடிப்படையில் அபிவிருத்தி பற்றி சிந்திக்கும்போது ஒரு முக்கிய அம்சம் தெளிவாகுகிறது: சமூக. பொருளாதார அபிவிருத்திக்கும் சமூக வாய்ப்புகள். அடிப்படைக் கல்வி. அடிப்படைச் சுகாதாரம்? தனியான சுதந்திரம் என்பவற்றுக்கு மிடையில் உள்ள உட்தொடர்ப்புகளே அம்முக்கிய அம்சமாகும்.

சனநாயக நாடுகளில் மக்களுக்கு விரிவானமுறையில் உரிமைகளும் சுதந்திரமும் வழங்கப்படும்போது அரசாங்கம் மக்களுக்கு அடிப்படையான குறைந்தபட்ச வசதிகளை வழங்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. எனவே சுதந்திரமும் உரிமைகளும் சமூக அபிவிருத்திக்கு வழி கோலுகின்றது.

சனநாயக உரிமைகள் நன்கு பாதுகாக்கப்பட்ட நாடுகளில் பெரிய உணவுப் பஞ்சங்கள் ஏற்பட்டதாகக் கூற முடியாது. அந்நாடுகளில் பத்திரிகைகளும் மக்களும் எதிர்க்கட்சிகளும் சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க முடியும். இதற்கு மாறாக சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்ட சர்வாதிகார நாடுகளிலும் குடியேற்ற ஆட்சிக்குட்பட்டிருந்த நாடுகளிலும் இராணுவ ஆட்சி நடைபெற்ற சோமாலியா. எதியோப்பியா போன்ற நாடுகளிலும் பல சந்தர்ப்பங்களில் உணவுப் பஞ்சங்கள் ஏற்பட்டன.

இந்தோனேசியா. தென்கொரியா முதலியநாடுகளில் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டபோது பின்தங்கிய பிரிவினர்கள் தமக்குத் தனிமனித உரிமைகள் இல்லாமலிருந்ததைச் சரியாக உணரவில்லை. ஆனால் இந் நாடுகளின் பொருளாதார முறைகள் நெருக்கடிக்குள்ளானபோது. தனி மனித உரிமைகள் பற்றிய புதிய விழிப்புணர்வொன்று ஏற்பட்டது. இந்தோனேசியாவில் இதனைத் தெளிவாக அவதானிக்க முடிந்தது: தென்கொரியாவும் புதிய அரசியல்தலைமையின் கீழ் சனநாயக ஆட்சிமுறையை நோக்கி முன்னேறத் தொடங்கியது.

இந்தியாவுடன் ஒப்பிடும்போது சீனாவில் அரசியல் சுதந்திரம் குறைாவாக இருக்கலாம். ஆனால் சீனாவின் சமூக. பொருளாதார முன்னேற்றம் சிறப்பானது: ஏனெனில் அந்நாடு வேறு பல சுதந்திரங்களையும் வழங்கியிருந்தது. எடுத்துக்காட்டாக. அந்நாட்டின் அடிப்படைக் கல்வி வசதிகள் மிகவும் வலுவானவை; அடிப்படை சுகாதார வசதிகளும் முறையாக வழங்கப்பட்டிருந்தன. மேலும் இந்தியாவை விட சீனாவில் முன்னேறுவதற்கான வாய்ப்புகள் அதிகம். இவையாவும் ஒன்றிணைந்து சீனாவில் சமூக அபிவிருத்தியை ஏற்படுத்தின. இவ்வகையில் அடிப்படைக் கல்விக்கான ஏற்பாடுகள் அபிவிருத்திக்குப் பெரிதும் உதவுவன: அடிப்படைக் கல்வியானது மனிதரின் தெரிவு சுதந்திரத்தையும் மேம்படுத்த உதவும்.

கல்வி அறிவு வளர்ச்சியானது எவ்வாறு தெரிவுசெய்யும் சுதந்திரத்தை மேம்படுத்த உதவும் என்பதற்கு ஒரு முக்கிய உதாரணம் உண்டு. பெண்களின் கல்வியறிவு அதிகரிக்கும்போது பிறப்புவீதம் குறைகின்றது என்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் உண்டு. இது பெண்களின் தெரிவுகளில் ஏற்படும் மாற்றத்தையே காட்டுகின்றது. பெண்களின் கல்வித்தேர்ச்சி அதிகரிக்கும்போது அவர்களுடைய வேலைவாய்ப்புக்களும் அதிகரிக்கின்றன. இதனால் அவர்கள்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறிய குடும்பத்தையே விரும்புவதால் பிறப்புவீதம் வீழ்ச்சியுறநேர்கிறது. பெண்களின் கல்வி வளர்ச்சியால் பிள்ளைகளின் மரணவீதமும் வீழ்ச்சியடைகின்றது. சீனாவில் குடும்பத்துக்கு ஒரு பிள்ளை என்பதே நியமம். அந்நாட்டில் பிறப்புவீதம் வீழ்ச்சியடையக் காரணம் அரசாங்கத்தின் வற்புறுத்தல் என்னும் கருத்தை ஏற்கமுடியாது. பெண்களுக்கு கிடைக்கும் வேலைவாய்ப்பும் அவர்கள் கல்வியினூடாக வலுவடைந்திருப்பதுமே பிறப்புவீத வீழ்ச்சிக்கு முக்கிய காரணம் என்பதற்குப் பல ஆதாரங்கள் உண்டு.

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்கும் பொருளாதார வளர்ச்சிக் குறைவுக்கும் ஒரு முக்கிய காரணம் சனநாயக உரிமைகள் வழங்கப்படாமை என்பதை ஏற்றுக் கொள்ளலாம். ஆயினும் சீனாவைப் போலன்றி சோவியத்யூனியன் நடைமுறையிலிருந்த பொருளாதார நிறுவனங்களைக் கைவைத்துத் தூண்டத்தொடங்கியது; மாற்று ஏற்பாடுகளைச் செய்யுமுன்னர் இவ்வாறு செய்தமையால் வீழ்ச்சி ஏற்பட்டது. ஆனால் சீனாவில் புதிய பொருளாதார துறைகளிலேயே தனியார் மயமும் வெளிநாட்டுமூலதனமும் ஊக்குவிக்கப்பட்டன. இவை பெருவளர்ச்சி பெற்றன. பழைய பொருளாதாரத்துறைகள் பின்னடையத் தொடங்கிய பின்னர் அண்மைக் காலத்திலேயே அவை தனியார் மயப்படுத்தப்படத் தொடங்கின.

பேராசிரியர் அமாருத்திய சென் பொருளாதாரத் துறையில் நோபல் பரிசை வென்ற இந்திய அறிஞராவார். கேம்பிரிஜில் டிரின்டி கல்லூரியில் ஆசிரியர் பதவியில் அமர்ந்த முதல் இந்தியரான பேராசிரியர் சென் பொதுநலப் பொருளியில் ஆராய்ச்சியாளர். உணவுப் பஞ்சம் ஏற்பட உணவு விநியோகப் பற்றாக்குறையே காரணம் என்னும் கருத்தை அவர் எதிர்த்தார். சில பின்தங்கிய வகுப்பினர் போதிய பொருளாதார வாய்ப்புகளையும் பெறுவதில்லை; அதற்குப் பல பொருளாதார, சமூக காரணங்கள் உண்டு. அதன் காரணமாகவே உணவுப் பஞ்சம் ஏற்படுகின்றது என்பது அவர் கருத்து.

சமூகத்தில் வாழும் தனி நபர்களின் நலன்கள் எவ்வாறு உள்ளன என்பதை அளந்து கூற 1970களில் அவர் பல சுட்டெண்களையும் உருவாக்கினார். அவர் உருவாக்கிய 'வறுமைச் சுட்டெண்' வறுமைக் கோட்டுக்குக்கீழ் வாழ்வோரின் விகிதத்தைக் கருத்திற் கொண்டது. அத்துடன் மிகவும் அனாதரவான நிலையில் வாழுவோரின் வறுமையான அளவையும் இச்சுட்டெண் மதிப்பீடு செய்தது.

பேராசிரியர் சென் முக்கிய பொருளாதாரப் பிரச்சினைகளின் ஒழுக்கவியல் சார்ந்த பரிமாணங்களை ஆராய முற்பட்டவர் என றோயல் சுவிடிஸ் அக்கடமி அவரைப் பாராட்டியது. பொருளாதாரப் பிரச்சினைகளை இவ்வாறு அவர் தத்துவரீதியாக நோக்கினார்.

இந்தியப் பிரஜையான பேராசிரியர் சென் மேற்கு வங்காளத்தைச் சேர்ந்தவர். நேபல் பரிசு பெறும் ஆறாவது இந்தியரான சென்னுக்கு உலகமெங்குமுள்ள 28 பல்கலைக்கழகங்களும், கல்லூரிகளும் கலாநிதிப் பட்டங்களையும் வழங்கிக் கௌரவித்துள்ளன.



நூலின் வகை:- கட்டுரைத் தொகுப்பு

இத்தொகுப்பு 2002 பெண்கள் சந்திப்பு மலராக வெளிவந்திருக்கிறது

பால்வினைத் தொழிலைச் சட்டபூர்வமாக்கலாமா?

உலகின் அதிபுராதன தொழில் தொடர்பான கொள்கைளை புனராலோசனை செய்தல் - பிரெட்லெவி

பால்வினைத் தொழில் - பெண்ணிய நோக்கு - ரஞ்சி (சுவிஸ்)

உலக மயமாக்கலும் தென்கிழக்காசியாவின் பால்வினை வர்த்தகமும் - சிந்துக் கரையாள்

போன்ற இன்னும் பல காத்திரமான ஆய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கி இத் தொகுப்பு வெளிவந்திருக்கிறது.

தொடர்புகளுக்கு
Tamil Women's Foram
C/O SALZ
Waliblingerstr. 59
70372 Stuttgart
Germany.



நூலின் வகை - சிறுகதைத் தொகுப்பு
ஆசிரியர் - ராணிசீதரன்

தமிழ் இலக்கியச் சூழலில் பெண்களின் பிரச்சனைகள் இரண்டு வகையில் நோக்கப்படுகின்றது. ஒன்று பெண்களுடைய பிரச்சனைகளை வெளிக்காட்டுதல் மற்றையது பெண்ணிய நோக்கில் பெண்களை அடிமைப்படுத்தும் சமூகக் கட்டுமானங்களை கேள்விக்குள்ளாக்குதல்.

ராணிசீதரன் முதல் வகையான பெண் எழுத்தாளி. நடுகல் ஆசிரியையின் மூன்றாவது சிறுகதைத் தொகுப்பு.

தொடர்புகளுக்கு
ராணி சீதரன்
136, மத்திய வீதி,
திருகோணமலை.



நூலின் வகை - கட்டுரைத் தொகுப்பு
ஆசிரியை - சாந்தி சச்சிதானந்தம்

தொடர்புகளுக்கு
மன்று
19, சரவணா வீதி.
கல்லடி, மட்டக்களப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குறிப்பு - 2

# தெரிந்தவையும் தெரியாதவையும்

வ. தேவசகாயம்

பத்திரிகைகள் சஞ்சிகைகளில் வெளிவரும் அனேக படைப்புக்கள் முன்னர் சத்திர சிகிச்சைக்கு உட்பட்டே வெளிவந்தன. பத்திரிகையின் அவ்வப் பகுதிப் பொறுப்பாளர்கள் அப்படைப்புக்களை தம்மிஸ்டம்போல் வெட்டிக் குறுக்கியும், நீட்டியும் வெளியிடுவார்கள். எழுதியவரின் நோக்கமே சிதைந்து போகுமளவுக்கு அந்தக் கைங்கரியம் நிறைவேறும். இன்று அப்படி நடப்பதில்லை என்று கூறிவிட முடியாது. படைப்புக்களுக்கு ஆக்கியோரே பொறுப்பு என்பது ஒரு பிரகடனமாக மட்டும் சில சஞ்சிகைகளில் வருகின்றபோதும் படைப்புக்களை தறிக்கும் மனோபாவம் படைப்பைப் பற்றிய பிரக்ஞையே இல்லாத சிலருக்கு வாய்த்த பதவியினால் நிகழவே செய்கிறது. இதற்கு பக்கங்களுக்குள் அடக்குதல் எனும் சாட்டு அவர்களுக்கு கைகொடுக்கிறது.

மௌனியின் சிறுகதைகள் பற்றி பெரிதாக சிலாகிக்கப்பட்டுக் கொண்டிருந்த ஒரு காலம் போய் மௌனியும் விமர்சனத்துக்கு ஆளாகிக் கொண்டிருக்கும் இக் காலத்தில் மௌனியின் சிறுகதைகளைச் செப்பனிட்டு 'மணிக் கொடியில்' வெளியிட்டதாக எம்.வி. வெங்கட்ராம் ஒரு தகவலை வெளியிட்டிருந்தார். இப்படிப் பார்க்கப் போனால் இன்றைய அனேக படைப்பாளிகளை நல்ல எழுத்தாளர்களாக்கிய பணி - பத்திரிகையின் ஆளுமைமிக்க ஆசிரியர்களைச் சாரும் என்றும் கொள்ளலாமா? இது ஒரு முக்கிய கேள்வியாகும்.

சாருநிவேதிதாவின்............ நாவலொன்றை செப்பனிட்டதாக பிரேம் - ரமேஸ் ஒரு பேட்டியில் தெரிவித்திருந்தனர். இது ஒரு விதத்தில் அகங்காரம் தொனிக்கும் குரலாகவே இனங் காணப்படவேண்டும். விமர்சனம் - சுயவிமர்சனம் எனும் கொள்கையை ஏற்றுக் கொள்கிறவர்களுக்கு இது ஒன்றும் பெரிய காரியமல்ல. தமது படைப்புக்களை விமர்சனத்திற்கு கொடுப்பவர்கள் விமர்சனத்தை ஏற்றுக் கொண்டு திருத்தம் செய்தால் அதனை உரிமை கோரும் சுதந்திரம், விமர்சித்த அனைவருக்குமே உரியதானால்.. படைப்புலகம் என்னவாகும்....? இதுவும் இன்னொரு விதத்தில் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும்.

பத்திரிகையாளன் வெட்டிச் சிதைத்து வெளியிடும் படைப்புக்கள் பற்றியும், படைப்பாளியை செப்பனிட்டது நாங்களே எனும் உரிமைக் குரல் கொடுத்த இருவர் பற்றியும் எழுதிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் ஒரு சம்பவம் என் நினைவுக்கு வருகிறது.

1986ம் ஆண்டு முற்பகுதி யாழ்ப்பாணத்தின் பிரபல நாவலாசிரியர் ஒருவரின் நாவலொன்று அவரது இறப்பின் பின்னர் சிலரால் வெளியிடப்பட ஆயத்தமாகியது. ஆசிர்வாதம் அச்சகத்தில் அச்சிடப்பட்டு அட்டைப்படமும் தயாராகி புத்தக ருபத்தில் நாவல் தயாராகிவிட்டது தற்செயலாக அந்த நாவலை வாசித்த அந்நாவலாசிரியரின் நண்பரொருவர் திகைத்துப் போனார். கையெழுத்துப் பிரதியில் அதனை வாசித்திருந்த அவர் நாவலின் பிற்பகுதி மாற்றம் செய்யப்பட்டிருந்ததைக் கண்டு பிடித்து விட்டார் - கதை வேகமாக பரவியது இந்த விடயத்தில் வெளியீட்டாளர்களுக்கு பலத்த எதிர்ப்பு - சர்ச்சை நாவலாசிரியரின் வாரிசாக தன்னைப் பாவித்துக் கொண்டிருக்கும் ஒரு எழுத்தாளரின் கைவேலையே இந்த மாற்றம் என்பதும் அம்பலமாகியது. ஒரு எழுத்தாளன் உயிரோடு இல்லாத போது அவனது எழுத்தை மாற்றும் உரிமை யாருக்கும் கிடையாது. அதற்கு மாற்றம் செய்த எழுத்தாளர் எதேதோ சாக்குப் போக்குச் சொன்னபோதும் வன்மையான கண்டனங்களை அவர் எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது. அச்சிட்டு வெளியிடப்பட இருந்த அந்த நாவல் இறந்த எழுத்தாளரின் உண்மைப் பிரதிபோல பின்னர் அச்சிடப்பட்டு முன்னர் திருத்தம் செய்யப்பட்ட பக்கத்தின்மேல் ஒட்டப்பட்டு வெளியிடப்பட்டது. ஆச்சரியம் என்னவென்றால் திருத்தம் செய்த எழுத்தாளர் கூறிய காரணங்கள் எல்லாவற்றையும் மீறி அந்த நாவல் வரவேற்பையே பெற்றுக் கொண்டது - திருத்தம் செய்தபடி வெளியிட்டிருந்தால் என்னவாகியிருக்குமோ தெரியாது - இந்த விபத்தில் தப்பிக் கொண்ட நாவல் கே. டானியலின் - 'தண்ணீர்'.

இந்த நாவல் உன்னதமானதோ அல்லது சாதாரணமானதோ என்பதல்ல பிரச்சனை. ஒரு எழுத்தாளரின் படைப்பில் கை வைக்கும் உரிமை யாருக்குமே வழங்கப்படவில்லை என்பதுவே இங்கு சுட்டிக் காட்டப்படுகின்றது. ஒரு படைப்பை விமர்சிக்கும் உரிமை எல்லோருக்கும் உரியது. மாற்றம் செய்யும் உரிமை யாருக்கும் வழங்கப்படவில்லை. அதனை அந்தப் படைப்பாளியே செய்ய வேண்டும்.

உலகப் பிரசித்தி பெற்ற திரைப்பட நெறியாளர் ஐசன்ரீனுடைய 'போர்க்கப்பல் பொட்டம் கின்' இன்றும் திரையுலகத்தில் பேசப்படும் ஒரு திரைப்படமாகும்.

கப்பல் படைவீரர்களுக்கு வழங்கப்படும் உணவு பழுதடைந்ததால்... போர்க்கப்பல் பொட்டம் கின்னின் படை வீரர்கள் கிளர்ச்சி செய்கிறார்கள். இதுவே கதை... ஒரு புரட்சிகர நடவடிக்கையை வெளிப்படுத்திய இப்படத்தை ஐசன்ரீனின் மறைவுக்குப் பிறகு ஒரு படத் தொகுப்பாளர் வெட்டி ஒட்டி இன்னொரு வகையாகத் தொகுத்தார்.

கப்பல் படை வீரர்கள் கிளர்ச்சி செய்கிறார்கள். அதனால் உணவுப் பொருள்கள் பழுதடைகின்றன:

எவ்வளவு விபரீதமான மாற்றம். ஒரே படம் தொகுப்பாளரினால் முற்றிலும் வேறுவிதமாக மாற்றப்பட்டது. ஆயினும் நல்லவேளை அந்தப் படம் ஐசன்ரீனின் ஆத்மாவை சீரழிக்காமல், எடுக்கப்பட்ட முதல் படம் போலவே இப்போதும் பேணப்பட்டு வருகின்றது.

ஒரு படைப்பாளியின் ஆளுமை, அவனது நோக்கு அவனது சுய படைப்பாற்றலில்தான் தங்கியுள்ளது. என்னதான் முயன்றாலும் மறைத்தாலும் அதனை அழித்துவிட முடியாது. பின்னடைவுகள் ஏற்படலாம். இளைய தலைமுறையின் அவதானிப்பு இதில் உன்னிப்பாக இருக்க வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எதிர்வினை



அ. யேசுராசா
ஆசிரியர்
'சுட்டும் விழி'

'சுட்டும் விழி' முதலாவது இதழில் மீள் பிரசுரம் செய்யப்பட்டுள்ள, சாந்தனின் 'அந்நியமான உண்மைகள்' என்ற சிறுகதையை வாசித்தபோது ஆச்சரியம் அடைந்தேன்!

"அரசாங்கமே திட்டமிட்டுக் குடியேற்றுது.... பிறகென்ன?"

என்று அதில் வரும் வரிதான் அதற்குக் காரணம். இந்த வரி இச்சிறுகதையின் முதற் பிரசுரத்தில் இருந்ததா என்ற குழப்பத்திற்கும் உள்ளானேன்; இதற்குக் காரணம் உண்டு.

தெல்லிப்பழை 'கலை, இலக்கியக் களம்' ஏற்பாடு செய்த 'சிறுகதை நாள்' (17.07.1988) நிகழ்ச்சியில் வாசித்த 'ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளும் தேசிய இனப் பிரச்சினையும்' என்ற எனது கட்டுரையில், இச் சிறுகதை பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளேன்.

"திருக்கோணமலைக்குள் போய் மூன்று நாட்கள் நின்ற 'சிவம்' அது சிங்களமயமாகி விட்டதை எரிச்சலோடு உணர்வதை, சாந்தனின் 'அந்நியமான உண்மைகள்' (1975) சொல்கிறது. நன்றாகச் சொல்லப்பட்டுள்ள போதும், மேலெழுந்தவாரியான உணர்வே அதில் வெளிப்படுத்தப்படுகிறது. அரச உதவியுடன், திட்டமிட்ட ரீதியில் நடைபெறும் செயற்பாட்டின் விளைவு இது என்ற உணர்வு கோடி காட்டப்படாதது, இக் கதையின் முக்கிய பலவீனம். சரியான பார்வையின்மையே இதன் காரணம். வெள்ளவத்தையில் தமிழர்களை அதிகமாகக் காணும் ஒரு சிங்களவரும் இக் கதாநாயகனைப்போல் ஆத்திரப்படலாம். சாந்தனின் பார்வை இதனையும் நியாயப்படுத்துவதற்குத் துணை செய்வதாய் உள்ளது. உண்மையில் திருகோணமலையின் நிலை அதிலிருந்து வேறுபட்டது."

இக் கட்டுரை 'அலை' இதழிலும் (1988), மீள் பிரசுரமாக 'திசை' வாரவெளியீட்டிலும், (1.9.1989, 8.9.1989) வெளிவந்தது. இக் கட்டுரைக்குச் சாந்தன் எழுதிய மறுப்பு 13.10.1989 ஆம் திகதிய 'திசை'யில் வந்துள்ளது. அந்த மறுப்பில், இந்தக் கதை பற்றிச் சாந்தன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"..... அக் கதையையும் அது கூறிய உண்மையையும் எதிர்கொள்ளத் திராணியற்று அதனை மறுதலிக்கும் பல்வேறு காரணங்களைத் தேடியோர் கடைசியில் 'கண்டுபிடித்த' பலவீனமான ஒரு வாதத்தையே கட்டுரையாசிரியர் இப்போதும் வலியுறுத்துவது வருந்துவதற்குரியது. கொழும்பில் தமிழர் குடியேற்றமும் திருகோணமலையில் சிங்களவர் குடியேற்றமும் ஒப்பிட முடியாதவை என்பதை இன்னமுமா கூறிக் கொண்டிருக்க முடியும்? மேலும் 'அந்நியமான உண்மைகள்' சிறுகதையேயன்றி கட்டுரையல்ல."

எனவே, இச் சிறுகதையில் வெளிவந்த 'மல்லிகை' இதழைப் (1975 ஜனவரி) பரிசீலித்தேன். அதில் "அரசாங்கமே திட்டமிட்டுக் குடியேற்றுகிறது..... பிறகென்ன?" என்ற வரி இடம்பெற்றிருக்கவில்லை. ஆகையால், முன்னர் எனது கட்டுரையில் குறிப்பிட்டது சரியே என்பதை உறுதிப் படுத்திக் கொண்டேன்.

சாந்தனின் எந்தச் சிறுகதைத் தொகுதியில் இச் சிறுகதை இடம்பெற்றிருக்கிறது எனப் பார்த்தபோது, 1994 தை மாதம் வெளியிடப்பட்ட 'காலங்கள்' சிறுகதைத் தொகுதியில் அதனைக் காண முடிந்தது. அதிலுள்ள பிரதியில்தான் "அரசாங்கமே திட்டமிட்டுக் குடியேற்றுது.... பிறகென்ன?" என்ற வரி முதன் முறையாகக் காணப்படுகிறது.

கதையின் பலவீனமாக இருந்ததொரு முக்கிய விடயம் பத்தொன்பது ஆண்டுகளின் பின்னர்தான் சீர் செய்யப்பட்டுள்ளது; குறிப்பாகச் சொல்லப் போனால், 1989 ஆம் ஆண்டிலும் தான் ஏற்க மறுத்ததொரு விமர்சனத்துடன், ஐந்து ஆண்டுகளின் பின்னரே ஆசிரியர் உடன்பட்டுள்ளார்.

எவ்வாறாயினும், இது வரவேற்கத்தக்கதே!

## சுட்டும் விழி பற்றி......

மு.பொ

பாரதியின் சொற்களைக் கொண்டு தமிழ் நாட்டில் பல சஞ்சிகைகள் வெளிவந்திருக்கின்றன. உதாரணமாக மணிக்கொடி, சொல்புதிது போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறான சஞ்சிகைகளுக்கெல்லாம் பின்னணியாக ஒரு கருத்தியல் இருந்தது. அந்தக் கருத்தியல்தான் இந்த சஞ்சிகைகளை நிலைக்கவும் வைத்ததெனலாம். அத்தகையதொரு கருத்தியல் பின்னணி சுட்டும் விழக்கும் இருக்குமென்றே நம்புகிறேன். சுட்டும் விழியில் எழுதியிருப்பவர்கள், வெளிவந்திருக்கும் ஆக்கங்கள் எல்லாமே அவற்றைத்தான் உணர்த்துகின்றன. அநேகமாக இதில் வெளிவந்திருக்கும் ஆக்கங்கள் எல்லாமே இலக்கியம் மூலம் அரசியல் பேசுகின்றன என்றே சொல்லலாம். ஆசிரியர் தலைப்பும் சமாதான முயற்சிகள் பற்றியும் அதனைக் குழப்புவதில் இந்தியாவின் பாத்திரம் பற்றியும் சொல்லுகிறது. சமீப காலமாக ஊடகங்களும் இதே கருத்தை சொல்லி வருவதை நாம் அறிவோம். எனவே சமாதானம் குறித்த ஜெயசிங்கத்தின் கட்டுரையானாலும் சு. வில்வரெத்தினத்தின் விமர்சனமானாலும், கா. சிவத்தம்பியின் கட்டுரை, தாசீசியஷின் பேட்டி எல்லாமே ஒரு விதமான அரசியலைப் பேசுகின்றன.

இத்தகையதொரு அரசியல் பார்வை அவசியமானதென்றுதான் நான் கருதுகின்றேன். ஆனால் இத்தகைய அரசியல் பார்வைகள் எந்தளவு தூரம் எங்களை வழிநடத்திச் செல்லும் என்பது ஆராயப்படவேண்டியது. இங்கு கா. சிவத்தம்பி ஏன் மானுடத்தின் தமிழ் கூடல் நடைபெற்றுள்ளது ஏன் அத்தகையதொரு கூடல் அவசியமானதென சிறப்பாக சொல்லுகின்றார். சு. வில்வரெத்தினத்தின் விமர்சனமும் காத்திரமானதுதான். ஆனால் போராளிப் பெண் கவிஞைகளையும் சிவரமணியையும் வில்வரெத்தினம் ஒப்பீடு செய்திருக்கிறார். ஆனால் வானதி, கஸ்தூரி, பாரதி போன்ற பெண் கவிஞைகளின் இறப்பும், சிவரமணியின் இறப்பும் ஒரே மாதிரியானதல்ல என்பது விளங்கிக் கொள்ளப்படவேண்டிதாக இருப்பினும் சிவரமணி புலி எதிர்ப்புக் கவிதைகளும் எழுதியிருக்கிறார். ஆரம்பத்தில் புலி எதிர்ப்பு தரப்பினர் பலர் சிவரமணியின் கவிதையைத்தான் முன்னிறுத்தினர். புகழ்ந்து திரிந்தனர். ஏன் சிவரமணி அவ்வாறு எழுதினார். அதற்கான பின்னணி என்ன என்பது பார்க்கப்படவில்லை எனவே இது ஒரு மேலோட்டமான ஆய்வு போல் தெரிகிறது.

பொதுவாக சுட்டும் விழியில் இடம் பெற்றிருக்கம் ஆக்கங்கள் எல்லாமே காலத்திற்கு பொருத்தமான ஆக்கங்களாகவே இருக்கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




நூலின் வகை: வரலாற்று ஆய்வு நூல்

ஆசிரியர் : கனகசபாபதி சரவணபவன்

நீண்டகாலமாக திருக்கோணமலை வரலாற்றைக் கூறுவதற்கு தொல்பொருளியல் சான்றாதாரங்களுடன் கூடியதொரு நூலிற்கான இடைவெளி இருந்துகொண்டிருந்தது. ஆசிரியர் இந்நூலினூடாக அவ் இடைவெளியை ஓரளவு போக்க முயன்றிருக்கின்றார். திருக்கோணமலையின் வரலாறு தொடர்பான மேலதிக ஆய்வுகளுக்கு அடித்தளமாக இருக்கக்கூடிய தகுதியை இந்நூல் கொண்டிருக்கின்றது.

சுட்டும் விழி

ஆசிரியர் உரையிலிருந்து..........

இருபதாம் நூற்றாண்டின் வரலாற்று எழுத்தியலானது தேசியம், விடுதலை, இன ஒடுக்கல், பிரதேச வாதம் தொடர்பாக அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. இத்தகைய வரலாற்று எழுத்தியலின் போக்குகளை நடப்பு அரசியலே ஊக்குவிக்கின்றது. தேசிய விடுதலையில் வரலாறு வகிக்கும் பங்கு பெரியளவில் மதிக்கப்படுவதால், வரலாற்றுப் பதிவுகள் குறித்த விமர்சனங்கள், அரசியல் நோக்கிலிருந்து தோற்றம் பெறுவது தவிர்க்க முடியாமல் போகிறது.

தொடர்புகளுக்கு: K.Saravanapavan
Postfach 1623
47515 Kleve, Germany.

K. Saravanapavan
3/16 Anpuvalipuram
Trincomalee.

## சுட்டும் விழி சஞ்சிகை கிடைக்கும் இடங்கள்

**கொழும்பு:**
பூபாலசிங்கம் புத்தகசாலை, 340, செட்டியார் தெரு, கொழும்பு - 11
பூபாலசிங்கம் புத்தகசாலை, 390A 2/3, காலி வீதி, வெள்ளவத்தை.

**யாழ்ப்பாணம்:**
ப.நோ.கூ. சங்கம், கரவெட்டி, நெல்லியடி.

**மட்டக்களப்பு:**
தில்லை

**புத்தளம்:**
சாஹித்திய புத்தக நிலையம், இல.4, குருநாகல் வீதி, புத்தளம்.

**திருக்கோணமலை:**
ரஷாக்கியா புத்தக நிலையம், மூர் வீதி, திருக்கோணமலை.

அரசியல், இலக்கியம், சமூக விஞ்ஞானம் தொடர்பாக ஆய்வுரீதியான ஆக்கங்களை சுட்டும்விழி எதிர்பார்க்கிறது. குறிப்பாக தேசியம், பெண்ணியம், பொருளாதாரம், எமக்கான கருத்தியல் தளத்தை உருவாக்கிக் கொள்ளுதல் தொடர்பான விடயங்களை புலமைசார் உழைப்பாளர்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம்.

~ ஆசிரியர் ~

www.tamilarangam.net

சுட்டும்விழி
ISSN - 1391 - 8095

A.Jathindra, 14, Hospital Quarters, Trincomalee, Srilanka

# வையம் முழுமைக்குமாக

வாழ்வோ பெரிது
மிகப் பெரிது
மிகவும், மிகவும் பெரிது
எது போல்?
கொடிய பாலை நிழல் போலா?
அல்ல
கொடிய பாலைகள் கடந்த
மனித முயல்வே போலப் பெரிது.
பெரிது மிகவும்
மிகவும் பெரிது.

இன்றதை முயல்பவர் நாம்
பாலைகள் பல கடந்து படரும்
மனித முயல்வின் மூச்சை
எம்முள் வாங்கி முயல்பவர் நாம்
எமக்குள் முன்னோரின் மூச்சும் முயல்வும்
ஆயினும் நாம்
எடுத்தணியும் வாழ்வோ மிகப் பெரிது
இன்னொரு யுகத்தை ஈனும் பிரசவ முனைப்பு

ஆதலின் நீயும் நானும் புதிய
காலமூச்சையும் எம்முள் வாங்கி முயலும்
கவன ஈர்ப்புப் பதிய நடப்போம்
ஒவ்வோர் காலடி நகர்விலும்
பிரக்ஞையின் உயிர்ப்பு பிரவகிக்கட்டும்

செத்துப் போன வாழ்விற்கு
எரியூட்டுவதற்கான கொள்ளிக் கட்டையை
விடவும் வாழ்விற்கான
உயிர்ப் பேந்திய தீச்சுடர்
ஒவ்வோர் நகர்விலும் அவசியம்.

ஏனெனில் எம்முன் உள்ளதோ
இடிபாடுகளின் மீது இன்னோர்
வாழ்வை எழுப்புதல்
பெரிதினும் பெரிதான வாழ்வை எழுப்புதல்
பெரிது சிறிதெனும் அளவுட்குறுகாது
வாழ்வை பெருவாழ்வாக
வையம் முழுமைக்குமாக
விரித்துப் போடு
பாலை சுடாமல் இருக்க
வரும் பயணிகளுக்கோர்
நில பாலாடையாக.

சு. வி[illegible]வரெத்தினம்

இவ்விதழ் வெளியீட்டு அனுசரனை : பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம், திருக்கோணமலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்